பக்கங்கள்: 20 விலை:20 ரூபா

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 02 வள்ளுவர் ஆண்டு 2049 தை 23 திங்கட்கிழமை 05.02.2018 கதிர் 92

## மணிவண்ணனுக்கு எதிராக கூல் மற்றொரு முறைப்பாடு

யாழ்ப்பாணம்,பெப் .05

தமிழ்த்தேசியமக்கள்முன்னணியின்தேசிய அமைப்பாளரும் தமிழ்த் தேசியப் பேரவையின் யாழ். மாநகர சபை முதன்மை வேட்பாளருமான சட்டத்தரணி வி.மணிவண்ணனுக்கு எதிராக மற்றுமொரு முறைப்பாட்டைத் தேர்தல்கள் ஆணைக்குழுவின்

பக்கம் 18

# மைத்திரியின் சுதந்திர தினப் பேச்சில் தீர்வு முயற்சி குறித்து எதுமேயில்லை

## முக்கிய விவகாரங்களாக ஊழல் ஒழிப்பு, அபிவிருத்தி



### இன, மத, மொழி நல்லிணக்கம் பற்றி பிரஸ்தாபம்

கொழும்பு, பெப்ரவரி 05

கொழும்பு - காலிமுகத்திடலில் நேற்று நடைபெற்ற நாட்டின் எழுபதாவது சுதந்திர தின நிகழ்வில் உரையாற்றிய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஊழல் ஒழிப்பு, அபிவிருத்தி, சிறந்த அரசியல் கலாசாரம், ஒழுக்கம் மிக்க அரசியல் தலைமுறை ஆகியவற்றை வற்புறுத்திய போதிலும், நாட்டை கடந்த ஏழு தசாப்தகாலமாக உலுப்பி வரும் தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் முயற்சிகள் குறித்து மூச்சே விடவில்லை.

பொத்தம் பொதுவாக இன, மத, மொழி, நல்லிணக்கம் மற்றும் தேசிய சமாதானம் ஆகியவை பற்றி மட்டுமே அவர் பிரஸ்தாபித்தார். பக்கம் 18

## தேர்தல் முடிந்ததும் கொந்தளிப்பு வரும்!



### 'காலைக்கதிர்' செவ்வியில் நாமல் தெரிவிப்பு

கொழும்பு, பெப்.05

"இந்த உள்ளூராட்சித் தேர்தல் முடிவுகள் ஆட்சியாளருக்கு நல்லதோர் பாடமாக அமையும். தேர்தல் முடிவுகளை அடுத்து நாட்டில் கொந்தளிப்பு ஏற்பாட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை."

-இவ்வாறு தெரிவித்தார் முன்னாள்

பக்கம் 18

## தம்புத்தேகம விபத்தில் நேற்று நால்வர் மரணம்

கொழும்பு, பெப் .05

தம்புத்தேகமவில் நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை இடம்பெற்றகோரவிபத்தில் ஏழு வயதுச் சிறுவன் உட்பட நால்வர் உயிரிழந்துள்ளனர்.

தம்புத்தேகம - கல்னேவ வீதியில் திஸ்பனேபுரம் பகுதியில் ஓட்டோ ஒன்றுடன் சிறிய ரக லொறி ஒன்று மோதி விபத்து

பக்கம் 18

சுதந்திரதின விழாவை எதிர்க்கிறோம்: வேறுக்கிறோம்

### கேப்பாபிலவு மக்கள் நேற்றைய தினம் கறுப்புக் கொடிகள் கட்டிப் போராட்டம்

பக்கம் 09

## கேப்பாபிலவு வீதியை மூடியது இராணுவம்

முல்லைத்தீவு, பெப் .05

திறந்து விடப்பட்டிருந்த கேப்பாபிலவு பிரதான வீதியை நேற்றுத் திடீரென மூடிய இராணுவம் மக்களைக் காட்டுப் பாதை வழியாகச் செல்லுமாறு நிர்ப்

பக்கம் 18

## உதயங்க வீரதுங்க டுபாயில் கைது!



பக்கம் 12

## கடந்த காலத் தவறுகளுக்கு மன்னிப்பு வழங்கவேண்டும்

### வடக்கு ஆளுநர் யாழில் கோரிக்கை



யாழ்ப்பாணம், பெப் .05

கடந்த காலத்தில் நடந்த தவறுகள் அனைத்துக்கும் மன்னிப்பு வழங்க வேண்டும் என்று வடக்கு மாகாண ஆளுநர் றெஜினோல்ட் குரே கோரிக்கை விடுத்துள்ளார்.

பக்கம் 18

## சுதந்திர தின எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் லண்டனில்!



லண்டன் பெப்.05

இலங்கையின்எழுபதாவது சுதந்திர தினமான நேற்று லண்டனில் இலங்கைத் தூதரகம் மற்றும் பிரித்தானியப் பிரதமரின் இல்லம் ஆகியவற்றுக்கு முன்னால் ஈழத் தமிழர்கள் ஆர்ப்பாட்டங்களை

பக்கம் 18

## சுதந்திர தினத்தன்று அதிகாலை அதிரடி!

### அலோசியஸ், பலிசேன கைது



இலங்கை மத்திய வங்கியின் பிணை முறி விவகாரம் தொடர்பில், பேர்பச்சுவல் ட்ரஸரீஸ் நிறுவனத்தின் தலைவர் அர்ஜுன் அலோ

பக்கம் 18

## யாழில் சுதந்திர தினம்!



யாழ்ப்பாணம், பெப் .05

இலங்கையின் 70ஆவது சுதந்திர தின நிகழ்வுகள் நேற்று யாழ்ப்பாணத்திலும்

பக்கம் 18

## இனி அது ரகசியம் அல்ல!

இனப்பிரச்சினைத் தீர்வு முயற்சி இனிமேல் – இப்போதைக்கு – நகரப்போவதில்லை. அது கிணற்றில் போட்ட கல் போன்ற விவகாரமாகிவிட்டது என்பதைத் தமது நடவடிக்கை மூலம் தெளிவுபடுத்தியிருக்கின்றார் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன.

பக்கம் 03

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலைக்கதிர்



# போர் வெடிக்கும், வெடிக்கும் என மாவை சூளுரை; ஆனால், 2 கோடி, 4 கோடி கேட்டுத்தான் இங்கு போர்

"வடக்கு, கிழக்கில் அடிக்கடி போர் வெடிக்கும் என்று யுத்தப் பிரகடனம் செய்து சூளுரைத்தார் மாவை சேனாதிராசா. ஆனால், இங்கு அப்படி அபத்தம் ஏதும் நடக்கவில்லை. போரும் வெடிக்கவில்லை.

"ஆனால் கடைசியில் அவர்கள் தமக்குள் இரண்டு கோடி, நான்கு கோடிக்குத்தான் போரிட்டார்களே தவிர மக்களுக்கான போர் வெடிக்கவில்லை."

– இப்படிக் கிண்டலாகப் பேசினார் தமிழர் விடுதலைக் கூட்டணியின் பிரசாரப் பேச்சாளர் பொன் காந்தன்.

வவுனியா கலைமகள் விளையாட்டு மைதானத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற தமிழர் விடுதலைக் கூட்டணியின் மாபெரும் தேர்தல் பரப்புரைக்கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்குதொடர்ந்தும் தெரிவிக்கையில்–

அரசியல் கைதிகளை விடுதலை செய்யாவிட்டால் வடக்கு – கிழக்கில் போர் வெடிக்கும். காணாமற்போனோரை விடுவிக்காவிட்டால் வடக்கு – கிழக்கில் போர் வெடிக்கும், காணிகளை விடுவிக்காவிட்டால் வடக்கு – கிழக்கில் போர் வெடிக்கும் என்று மாவை அடிக்கடி பத்திரிகைகளில் கூறினார்.

இதைக் கேட்டு நான் பலதடைவை போருக்கு முகம் கொடுக்கத் தயாரான நிலையில் முட்டை மாவறுத்து பை செய்து வைத்தேன். ஆனால், போர் வெடிக்கவில்லை.

அன்று எங்களது தலைவன் பிரபாகரன் சொன்னார் போர் வெடித்தது. அதனால், அவரால் உருவாக்கப்பட்ட இவர்கள் சொன்னாலும் வெடிக்கும் என நினைத்தேன்.

ஆனால், வெடிக்கவில்லை. அவர்கள் ரணில் உடன் சண்டைதான் போட்டார்கள். தனக்கு 2 கோடி, 4 கோடி, 30 கோடி என அவர்கள் கோடிக்குத்தான் சண்டை போட்டார்களே தவிர மக்களுக்காகப் போர் வெடிக்கவில்லை.



## வவுனியாக் கூட்டத்தில் பொன் காந்தன் கிண்டல்

யாழ்ப்பாணத்தில் ஒருவரது மகளுக்கு மைத்திரி கேக் ஊட்டினால் தான் பிறந்தநாள் கொண்டாட முடியுமாம். எங்களது ஆள்களும் நன்றாகக் கேக் ஊட்டுவார்கள். அவர்கள் முன் னர் பல தடவை நன்றா கவே கேக் ஊட்டியிருக்கிறார்கள். அதைத் தெரியாமல் மைத்திரிதான் வேண்டுமாம்!

கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் கேக் தீத்தவும், தமது பிள்ளைகளுக்கு அரசாங்கத்திற்குள் வேலை எடுத்துக் கொடுக்கவும்தான் சண்டை பிடிக்கிறார்கள்.

எனவே, மக்கள் இதனைப் புரிந்து கொள்ளவேண்டும். இடைக்கால அறிக்கையில் சமஷ்டி இருக்காம். நான் புரட்டிப் புரட்டிப் படித்துப் பார்த்தேன். எந்தப் பக்கத்திலும் அப்படி இல்லை. சம்பந்தனுக்கும், சுமந்திரனுக்கும், மாவைக்கும்தான் அது தெரியுதாம். இதன் உண்மை நிலையை மக்கள் புரிந்துகொள்ளுங்கள்.

1000 விகாரைகளை அமைத்து இந்த நாட்டைப் பௌத்த மயமாக்கல் செய்ய ரணில் முயற்சிக்கிறார்.

இதற்கு எம்மவர்களும் துணை போகிறார்கள். இதனை மக்கள் புரிந்து கொண்டால் இம்முறை வீட்டுக்காரரை நிரந்தரமாக வீட்டுக்குள் இருக்கச் செய்ய முடியும். – என்றார். (உ)

---

### சுமந்திரனை ஓரங்கட்டி விட்டு

# தனது மகனைத் தலைவராக்க மாவை நினைப்பது துரோகம்!

### வடக்கு மாகாண சபை உறுப்பினர் குற்றச்சாட்டு



வவுனியா, பெப்.05

தமிழரசுக் கட்சிக்குச் சுமந்திரனைத் தலைவராக்காமல் தனது மகனைத் தலைவராக்க மாவை நினைப்பது துரோகம்.

இவ்வாறு தெரிவித்துள்ளார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வட மாகாண சபை உறுப்பினர் எம். தியாகராசா.

தமிழர் விடுதலைக்கூட்டணியின் தேர்தல் பிரசாரக்கூட்டம் வவுனியா கலைமகள் விளையாட்டு மைதானத்தில் நேற்றுமுன்தினம் மாலை இடம்பெற்றது. இதில் பங்கேற்று உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

விடுதலைப்புலிகள் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பை உருவாக்கவில்லை எனத் தெரிவித்துப் பொய் சொல்கிறார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன். பகிரங்கமாக உங்களால் மக்கள் முன்னிலையில் அதனைச் சொல்லமுடியுமா என அவரிடம் கேட்கின்றேன்.

கிளிநொச்சியைச் சேர்ந்த சிறிதரனை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊடாக நாடாளுமன்றம் அனுப்பிய பெருமை விடுதலைப் புலிகளையே சாரும். ஆனால், அவ்வாறானவரே இன்று இவ்விடயமாக அமைதியாக இருக்கிறார். ஏனெனில் தமிழரசுக் கட்சி எந்த அபிப்பிராயங்களையும் யாரிடமும் கேட்காமல் தன்னிச்சையாகச் செயற்பட்டு வருகின்றது.

இந்தத் தேர்தலில் தன் மகனை யாழ். மாவட்டத்தில் மாவை களம் இறக்கியிருக்கின்றமை தனக்கு அடுத்ததாகத் தமிழரசுக் கட்சியின் தலைமைக்கு அவரை நியமிப்பதற்கே.

இவ்வாறு குடும்ப அரசியல் செய்கின்ற தலைமைகளா தமிழர்களுக்குத் தேவை என்பதை தமிழ் மக்கள் உணரவேண்டும். மாவை சேனாதிராசா தனது மகனைத் தமிழரசுக் கட்சியின் தலைவராகக் கொண்டுவர நினைக்கின்றமை பெரும் துரோகம். பிரபல சட்டத்தரணியான சுமந்திரன் அந்தக் கட்சியில் இருக்கும்போது அவரை அடுத்த தலைவராக்காமல் தமது மகனைத் தலைவராகக் கொண்டுவர மாவை எண்ணுகின்றமை தவறு.

நாங்கள் தமிழனாக வாழ வேண்டுமாக இருந்தால் – ஏனைய சமூகத்துடன் சமமாக நாம் மதிக் கப்படவேண்டு தமாக இருந்தால் – மாற்றுத் தலைமை எமக்குத் தேவையாக வுள்ளது. அந்தத் தலைமை தமிழர் விடுதலைக் கூட்டணியினூடாக மிக விரைவில் உருவாகும்– என்றார். (து–100)

---

# துறைமுக நகரத் திட்டத்தினால் கொழும்பு மாநகர் பேராபத்தில்!



## தாழிறங்கும் என எச்சரிக்கிறார் ஜனாதிபதி

கொழும்புத் துறைமுக நகரத் திட்டத்தால் கொழும்பு நகரம் பேராபத்தை எதிர்கொள்ளும் நிலைமையில் இருக்கிறது என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

கண்டியில் நேற்றுமுன்தினம் மாலை நடைபெற்ற ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பிரசாரக் கூட்டத்தின் போதே ஜனாதிபதி இதனை தெரிவித்துள்ளார்.

'போர்ட் சிற்றி'யின் அபாயம் தொடர்பாக இன்று ஆய்வாளர்கள் எச்சரிக்கை விடுக்கின்றனர். முதலீட்டு முக்கியத்துவம் தொடர்பாக ஒரு பிரிவினர் பேசினாலும் அதன் அபாயம் தொடர்பாகச் சுட்டிக்காட்டுகின்றேன். நான் கூறவில்லை.

சர்வதேசத்தால் அங்கீகரிக்கப்பட்ட பொறியியலாளரான கலாநிதி கருணாரட்ண துறைமுக நகரத்தால் கொழும்பு நகரம் தாழிறங்கும் அபாயத்தில் இருக்கிறது எனக் கூறியுள்ளார்.

இது மிகவும் தர்க்க ரீதியானது ஞாயிற்றுக்கிழமை வெளியான 'ராவய' பத்திரிகையில் இது தொடர்பான செய்திகள் வெளியாகியுள்ளன.

இந்தத் தாழிறங்கும் அபாயம் தொடர்பான அடையாளங்கள் இப் போது இருக்கின்றன. நாம் அமைச்சரவைக் கூட்டத்துக்காக அமர்ந்திருக்கும்போது சில நாள்களில் ஜனாதிபதி செயலகப் பகுதியில் நில அதிர்வுகள் இருக்கும் . பழைய நாடாளுமன்றக் கட்டடம் , ஜனாதிபதி செயலகம் போன்ற இடங்களில் இருப்பவர்கள் திடீரெனசேர் நாங்கள் இருந்த இடத்தில் அதிர்வுகள் இருக்கின்றன. – எனக் கூறுவார்கள். இந்த அபாயத்தை புரிந்துகொள்ள வேண்டும்.

இந்த ஒப்பந்தத்தை மேற் கொள்ள முன்னர் இது தொடர்பாக முறையான ஆய்வுகள் மேற்கொள்ளப்படவில்லை. சீன பொறியியலாளர்களின் ஊடாகச் செய்வதற்கு முன்னர் எமக்கு நம்பிக்கையான வெளிநாட்டு மற்றும் எமது பொறியியிலாளர்கள் ஊடக அதனை நடத்தியிருக்க வேண்டும்.

இன்று கொழும்பு நகரம் ஆபத்தில் இருக்கின்றது என எதிர்காலம் தொடர்பாக ஆய்வாளர்கள் கூறுகின்றனர். இது தர்க்கரீதியானது. இது தொடர்பாக நாங்கள் சிந்திக்க வேண்டும். – என அவர் தெரிவித்துள்ளார். (உ)

---





# சுதந்திர தினத்தை முன்னிட்டு நேற்று இரத்ததான நிகழ்வு

இலங்கையின் 70ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு முல்லைத்தீவு மாவட்டத்தில் இலங்கை இராணுவத்தினரால் இரத்ததான நிகழ்வு ஒன்று இடம்பெற்றது

முல்லைத்தீவு படைத்தலைமையகத்தின் ஏற்பாட்டில் நேற்றுக் காலை முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையின் பிராந்திய இரத்த மத்திய நிலையத்தில் இந்த நிகழ்வு இடம்பெற்றது. (இ-81)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமிர், தங்கத்துரை, கிங்ஸிலி கொலைகளில் மாவை, சம்பந்தன், செல்வத்துக்கும் தொடர்பு





## விடயத்தை போட்டு உடைகிறார் சங்கரி





அளவெட்டி, பெப்.05

தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கத்தின் படுகொலையில் மாவை சேனாதிராசாவுக்கும் –

திருகோணமலை நாடாளுமன்ற உறுப்பினர் அ.தங்கத்துரையின் படுகொலையில் இரா.சம்பந்தனுக்கும் –

மட்டக்களப்பு மாவட்டத்திலிருந்து எம்.பியாகத் தெரிவு செய்யப்பட்ட கிங்ஸிலி இராசநாயகத்தின் படுகொலையில் செல்வம அடைக்கலநாதனுக்கும் –

தொடர்புகள் உண்டு. அதனால்தான்தத்தமதுகட்சிகளைச் சேர்ந்த இந்தப் பிரமுகர் களின் படுகொலைகள் குறித்து விசாரிப்பதற்கு அந்தச் சமயத்திலேயே விசேட ஆணைக்குழுக்களை நியமிக்குமாறு கோராமல் இவர்கள் அம்சடக்காக இருந்து விடயத்தை மறைத்தனர்.

– இப்படி விவகாரத்தைப் போட்டுடைத்திருக்கின்றார் தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகமான வீ.ஆனந்தசங்கரி.

நேற்று அளவெட்டிப் பகுதியில் நடைபெற பிரசாரக்கூட்டம் ஒன்றில் உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்திருக்கின்றார்.

மாவை சேனாதிராசா போராசை கொண்டவர். அந்தக் காலகட்டத்தில் கூட்டணி அலுவலகத்தில் அவர் சம்பளத்துக்கே வேலை செய்தவர்.

அமிர்தலிங்கம் படுகொலை செய்யப்பட்ட சமயம் அங்கு பிரசன்னமாகி இருந்தவர். அமிர்தலிங்கத்தின் பதவியைத் தான் பெறத் துடியாய்த் துடித்தவர்.

அமிர்தலிங்கத்தின் படுகொலையைப் புலிகள் செய்திருக்கமாட்டார்கள் என்றுதான் சாகும்வரையில் திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம் நம்பிக்கை கொண்டிருந்தார். அந்தப் படுகொலையின் பின்னால் பல சூக்குமங்கள் அடங்கியுள்ளன. அவை மாவைக்குத் தெரியும்.

இது குறித்துப் பேசுவதற்காக மாவை சேனாதிராசா என் மீது வழக்குப் போட்டாலும் பிரச்சினை இல்லை.

என்னைக் கொல்வதற்காகவும், பொட்டம்மான் அனுப்பிய ஆள் என்ற பெயரில் ஒருவரைத் தமது கொழும்பு அலுவலகத்தில் அடைக்கலம் கொடுத்து வைத்திருந்தவர் மாவை. அந்த நபருக்குப் பெயர் கலைச்செல்வன். இதுபற்றிய புலனாய்வு அறிக்கையின் பிரதி என்னிடம் இன்றும் உள்ளது. இப்படி ஒரு நபருக்கு மாவை அடைக்கலம் கொடுத்து வைத்திருக்கின்றார் என்ற புலனாய்வுத் தகவல் கொழும்பு ஊடகங்களில் வெளிவந்தமையை அடுத்து அந்த நபர் கொழும்பிலிருந்து வவுனியாவுக்குச் சென்றார். அவர் திரும்பிக் கொழும்புக்கு வரவில்லை.



ஒரு பொதுத் தேர்தலில் திருகோணமலை மாவட்டத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் வேட்பாளர் அ.தங்கத்துரை வென்று எம்.பியானார். இரண்டாவதாக வந்த சம்பந்தனுக்கு எம்.பி. பதவி கிடைக்கவில்லை. அதனால் தங்கத்துரையை அந்த எம்.பி. பதவியை இராஜினாமாச்செய்துதமக்குவழங்கும்படி சம்பந்தன் பல தரப்புகளினாலும் அழுத்தம் கொடுத்தார். துடியாய்த் துடித்தார். அந்தப் பதவியை அடைவதற்காகப் பல மாய்மாலங்களைப் பண்ணினார்.

அந்த எம்.பி. பதவியைத் தங்கத்துரை விட்டுத்தரவில்லை என்ற சீற்றத்தில் சம்பந்தன் பல வேலைகளைச் செய்தார். அந்தப் பின்புலத்தில்தான் தங்கத்துரைக்கு கிரனேட் வீசப்பட்டது. அதனால் அந்தப் பதவி சம்பந்தன் காலடியில் வீழ்ந்தது. எந்த எதிர்ப்புமின்றி அதை அவர் விரைந்து ஏற்றுக் கொண்டு இறுதி வரை அனுபவித்தார்.

2004 தேர்தலில் மட்டக்களப்பு மாவட்டத்தில் கூட்டமைப்புப் பட்டியலில் முதலாமிடம் பெற்று வெற்றியீட்டியவர் வங்கியாளரான கிங்ஸிலி இராஜநாயகம். அந்தத் தேர்தல் சமயத்தில்தான் கருணா புலிகள் அமைப்பிலிருந்து பிரிந்தார். அவர் கருணாவின் ஆள் என்று கூறி அந்த எம்.பி. பதவியைத் தட்டிப் பறிக்க முன்றார்கள். அவர் வன்னிக்குச் சென்று புலிகளின் தலைமையைச் சந்தித்துப் பேசினார்.

அதன் பின்னர் அவரின் பெயரில் ஓர் இராஜினாமாக் கடிதம் நாடாளுமன்றச் செயலாளர் நாயகத்துக்கு வழங்கப்பட்டது. அதை ஏற்பதற்கு செயலாளர் நாயகம் மறுத்தார். அந்தக் கடிதத்தை மாவை சேனாதிராசாவையும் கூட்டிக் கொண்டு போய் செல்வம் அடைக்கலநாதனே நாடாளுமன்றச் செயலாளர் நாயகத்திடம் கொடுத்து, அதனை வற்புறுத்தி ஏற்கவும் செய்தார்.

அது நடந்து சில நாள்களின் பின்னரே கிங்ஸிலி இராஜநாயகம் மட்டக்களப்பில் சுட்டுப் படுகொலை செய்யப்பட்டார். செல்வத்தை விசாரித்தால் இதன் உட்சூக்குமம் தெரிய வரும்.

தமது மூத்த தலைவர்கள் மூவர் படுகொலை செய்யப்பட்டமை குறித்து விசாரணை ஆணைக்குழு நியமித்து விசாரிக்கும்படி கூட்டமைப்புத் தலைவர்கள் கேட்கவில்லை. கேட்டால் தமது பொட்டுக்கேடு வெளியே வந்துவிடும் என்பது அவர்களுக்குத் தெரியும்.

இந்தப் படுகொலைகளுக்குக் காரணம் புலிகளின் தலைவர் பிரபாகரன் அல்லர். எனக்கு அவரைத் தெரியும்.

ஆனாலும், இக்கொலைகளுக்கான பொறுப்பை அவர் மறுதலிக்கவுமில்லை. அதற்குக் காரணம் அவரது தலைமைத்துவப் பண்பு. தன்னுடைய இயக்கம் அல்லது அதன் உறுப்பினர்கள் தொடர்புபட்ட விடயத்துக்கு அவர் பொறுப்பேற்காமல் விலகியவர் அல்லர். அதனால்தான் இந்தக் குற்றச்சாட்டுகளையும் அவர் பொறுத்துக் கொண்டார், சகித்துக்கொண்டார். புலிகளின் உறுப்பினர்களை அல்லது அவர்களது பெயர்களை அரசியல் பிரமுகர்கள் பயன்படுத்திய போதும் அவர் தார்மீகப் பொறுப்பு கருதி அதனை மறுத்துரைக்காமல் இருந்தார்.

அப்படித் தார்மீகப் பொறுப்பேற்கும் பண்பியல்பு – தலைமைத்துவச் சிறப்பு – சம்பந்தன், மாவை போன்றோருக்குக் கிடையவே கிடையாது. – என்றார் சங்கரி. (உ)

## இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இனப்பிரச்சினைத் தீர்வையும் உள்ளடக்கிய அரசமைப்புத் திருத்தம் ஒன்றைக் கொண்டுவருதல் என்ற பிரதான கோஷத்தை முன்னிறுத்தியே ஆட்சிக்கு வந்தார் மைத்திரிபால சிறிசேன.

தமிழ், முஸ்லிம் தலைவர்கள் ஒன்று திரண்டு தமது சிறுபான்மை இன மக்களின் வாக்குகளைத் திரட்டிக் கொடுத்து, மஹிந்தவை வீட்டுக்கு அனுப்பி மைத்திரியை ஜனாதிபதி ஆசனத்தில் இருத்தியமை அதற்காகத்தான்.

அந்த விடயத்தை இந்த 'நல்லாட்சி அரசு' தொடர்ந்து ஒப்பேற்றப் போகிறது என இன்னும் கயிறு விட்டுக் கொண்டிருக்கின்றது கூட்டமைப்பு.

நேற்றும் கூட, திருகோணமலை மூதூர்ப் பிரதேசத்தில் கூட்டம் ஒன்றில் பேசிய கூட்டமைப்புத் தலைவர் இரா.சம்பந்தன், இந்த உள்ளூராட்சித் தேர்தல் முடிந்ததும், புதிய அரசமைப்பு உருவாக்க நடவடிக்கை உத்வேகம் பெறும் என்ற சாரப்பட கயிறு விட்டிருக்கின்றார்.

'கேட்கிறவன் கேனயனாக இருந்தால் கேள்வரகிலும் நெய் வடியும் என்று கூட சொல்வார்கள்' – என ஒரு பழமொழி உண்டு.

அந்தக் கதையாக இருக்கின்றது கூட்டமைப்புத் தலைவர்கள் சம்பந்தன், சுமந்திரன் தமிழர்களுக்குக் கொடுக்கும் நம்பிக்கைக் கயிறு.

இந்த உள்ளூராட்சித் தேர்தல் முடிவுகளோடு, நாமல் ராஜபக்ஷ கூறுகின்றமைபோல தென்னிலங்கை அரசியல் களம் கொந்தளிக்கப்போகின்றது, கொதிக்கப் போகின்றது என்பது ஓரளவு இங்கே ஊகிக்கக் கூடிய விடயம்தான்.

அதன் பின்னர் நல்லாட்சி அரசு தாக்குப் பிடிக்குமா என்பதே கேள்விக்குறி. தப்பித் தவறித் தாக்குப் பிடித்தால் கூட, தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வு என்பதோ, அதற்கு வழி செய்யும் அரசமைப்புத் திருத்தம் என்பதோ சாத்தியப்படப் போவதில்லை என்பதும் தெளிவு.

நாட்டின் முக்கியத்துவம் வாய்ந்த – சுதந்திர தின – உரையிலேயே அதனை அடியோடு புறந்தள்ளி, கைவிட்ட விடயமாக அரசுத் தலைவர் நடந்து கொண்டமை கூட அதனால்தான்.

தில்லைக் கூத்தனைத் தரிசிக்க சிதம்பரத்துக்கு நாளை போவேன், நாளை போவேன் என்று நம்பிக்கையோடு கூறி 'திருநாளைப்போவார் நாயனார்' என்று பெயர் பெற்ற நந்தனாரைப் போல –


தீர்வு, இந்த ஆண்டு வரும், இந்த ஆண்டு வரும் என்று சம்பந்தனும் கூறிக்கொண்டு இருக்க வேண்டியதுதான்.

நேற்றிரவு வரை பிரசாரக் கூட்டங்களில் தீர்வுக் கயிறையே அவிழ்த்து விட்டுக் கொண்டிருக்கும் சம்பந்தனும், சுமந்திரனும், இந்தத் தேர்தலோடு ஐ.தே.க. – சு.க. இடையேயான நல்லாட்சி உடன்பாடு (ஏற்கனவே அது காலாவதியாகிவிட்டது) தெறித்து, அரசு கவிழ்ந்தால், தங்களின் அடுத்த கட்ட நடவடிக்கை என்ன என்பதை இதுவரை தமிழ் மக்களுக்குத் தெளிவுபடுத்தவே இல்லை.

பெரும்பாலும் அப்படித்தான் நடக்கப்போகின்றது என்ற நிலைமை இருப்பதால், அது தொடர்பில் தங்கள் பதில் செயற்பாடு யாது என்பதை அவர்கள் தெளிவுபடுத்த வேண்டும்.

- மின்னல் -

## பிரி. இளவரசர் – ஜனாதிபதி சந்திப்பு



இலங்கையின் 70ஆவது சுதந்திர தினக் கொண்டாட்டங்களில் பங்கு பற்றுவதற்காக கொழும்பு வந்திருக்கும் பிரித்தானிய இளவரசர் எட்வேட் மற்றும் இளவரசி ஷோபி ஆகியோர் ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேனவை நேற்று ஜனாதிபதி அலுவலகத்தில் சந்தித்தபோது எடுக்கப்பட்ட படம். சந்திப்பை அடுத்து இரு தரப்பு கலந்துரையாடல்களில் அவர்கள் பங்கு பற்றினர் என ஜனாதிபதி அலுவலகத் தகவல்கள் தெரிவித்தன.

டயானா பிளாஸ்ரிக் மீள்சுழற்சி
பிளாஸ்ரிக் உற்பத்தி, பிளாஸ்ரிக் திருத்த வேலை, பிளாஸ்ரிக் மீள் சுழற்சி என்பன சிறந்த முறையில் செய்து தரப்படும்.
108, பலாலி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 222 8680
077 592 5088

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, kalaikkathirnews@gmail.com
தொலைநகல் (fax): 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

## கோட்டை விட்ட இந்தியா

நமது ஊர் பேச்சுவழக்கில் ஒரு முதுமொழி உண்டு. 'அணில் ஏறவிட்ட நாய்' என்பார்கள்.

நிலத்தில் அணில் ஓடும்போது பார்த்துக்கொண்டு, வாளா விருந்து விட்டு, மரத்தில் அணில் ஏறிப் பாதுகாப்பாக இருக்கும் போது, கீழே நின்று கொண்டு அந்த அணிலைப் பார்த்து விடாது குலைக்குமாம் நாய்.

இலங்கை விவகாரத்தில் இந்தியாவின் நிலைப்பாடும் இது போன்றே தோன்றுகின்றது.

இலங்கை மீதான சீன ஆக்கிரமிப்புத் தொடர்பில் இந்தியா இப்போது அணில் ஏறவிட்ட நாயின் நிலையில்தான் உள்ளது.

இந்தியாவின் முன்னாள் மூத்த இராஜதந்திரிகள் இப்போது கூறும் கருத்துகள் அதனைத்தான் நிரூபித்து நிற்கின்றன.

அவர்களில் ஒருவர் இந்தியாவின் முன்னாள் வெளிவிவகாரச் செயலாளர் சியாம் சரண். அடுத்தவர் அவருக்குப் பின்னர் வெளி விவகாரச் செயலாளராகவும் அதைத் தொடர்ந்து தேசிய பாது காப்பு ஆலோசகராகவும் இருந்த சிவசங்கர் மேனன். அடுத்தவர் இவர்கள் எல்லோருக்கும் முன்னர் தேசியப் பாதுகாப்பு ஆலோச கராகவும், இலங்கை விடயங்களைக் கையாளும் தந்திரோ பாய வகுப்பாளராகவும் விளங்கிய எம்.கே.நாராயணன்.

மூவருமே இலங்கையில் சீனாவின் செல்வாக்கு விஸ்தரிக்கப் பட்டு வருகின்றமை குறித்து இப்போது கவலை வெளியிட்டிருக் கின்றார்கள்.

*"அண்டை நாடுகளுக்குள் சீனாவின் ஊடுருவல் குறித்து இந் தியா கரிசனை கொள்ளவேண்டும். சீனா மிகப்பெரும் சக்தியாக எழுந்துள்ளமையை நாம் ஒப்புக்கொள்ள வேண்டும். நேபாளத் தில் சீனாவில் தலையீடுகள் பெரியளவில் உள்ளன. அது போலவே அம்பாந்தோட்டையிலும் நடக்கின்றது. நாங்கள் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் அதுதான் பல ஆண்டுகளாக உண்மை யாகி வருகிறது."* - என்று சில தினங்களுக்கு முன்னர் ஜெய்ப்பூரில் சியாம் சரண் கூறியிருக்கிறார்.

அதேபோன்று சிவசங்கர் மேனனும் ஒரு கருத்தை அண்மை யில் குறிப்பிட்டிருந்தார்.

*"இலங்கை விடயத்தில் இந்தியா தவறிழைத்துவிட்டது. எமது அயல் நாடுகளைக் கையாளும் முறையில் நாம் மாற்றங்களைச் செய்ய வேண்டிய தேவை உள்ளது. உங்களின் அயல்நாடு உங் களுக்கு மட்டும் அயல் நாடு என்று நீங்கள் நினைக்கக் கூடாது. அவர்கள் ஏனையவர்களுக்கும் அயல்நாடுதான். இது ஒரு பூகோள உலகம்."* - என்று அவர் கூறியிருந்தார்.

*"இந்தியாவின் அண்டை நாடுகளுடன் உறவுகளை வைத்துக் கொண்டு சீனா (இந்தியாவுக்கு) தொந்தரவு கொடுக்க முனை கிறது. நேபாளம், இலங்கை, மாலைதீவு, பங்களாதேஷ் போன்ற இந்தியாவின் அண்டை நாடுகளை வென்றெடுப்பதற்காக (தன் கைக்குள் கொண்டு வருவதற்கு) சீனா அந்த நாடுகள் மீது பொரு ளாதார அச்சுறுத்தல் போன்ற பல்வேறு வழியில் முனைகின்றது. இலங்கையின் அம்பாந்தோட்டைத் துறைமுகத்தையும், பாகிஸ் தானில் குவாடர் துறைமுகத்தையும் சீனா எடுத்துக்கொண்டுள் ளது. ஜிபோட்டியில் கடற்படைத் தளம் ஒன்றை அமைத்துள்ளது."* - என எம்.கே.நாராயணன் கடந்த வெள்ளியன்று கொல்கத்தா வில் கருத்தரங்கு ஒன்றில் கூறியிருக்கின்றார்.

இலங்கை விடயத்தில் இந்தியா கைக்கொண்ட அணுகுமுறை தோற்றுப் போய்விட்டமையை - இந்தியா நிறைய ஏமாந்து போயிருக்கின்றமையை - புதுடில்லியின் இந்த மூத்த இராஜதந் திரிகளின் கருத்துரைகள் உறுதிப்படுத்துகின்றன.

விடுதலைப் புலிகள் இந்த மண்ணில் தமிழர்களின் உரிமைக் காக வீரம் செறிந்த போராட்டங்களை நடத்திய காலம் எல்லாம் கொழும்பின் மீதான புதுடில்லியின் பிடியும் வலுவாக இருந்தது.

புலிகளுக்கு எதிரான புதுடில்லியின் நிலைப்பாட்டைக் கொழும்பு சாதகமாகப் பயன்படுத்தி, இந்திய உதவியுடன் புலி கள் அமைப்பை அழித்தது.

ஆனால், புலிகள் அழிந்ததும் இலங்கை மீதான இந்தியாவின் பிடியும் கூடத் தளர்ந்தது. புலிகள் என்ற கடிவாளத்தை வைத்து, கொழும்பைக் கட்டுப்பாட்டில் வைத்திருந்த புதுடில்லிக்குப் புலிகள் இல்லாமல் போனமை இப்போது பெரும் பின்னடைவாகப் போய்விட்டது.

அதன் விளைவுதான் இந்த மூன்று முன்னாள் இராஜதந் திரிகளும் இப்போது விமர்சிக்கும் விவகாரத்துக்குப் பிரதான காரணம்.

தெளிவாகச் சொல்வதானால் இலங்கை விவகாரத்தில் இங்கு உண்மையான நண்பன் யார், பொய்மையே வடிவான பகைவன் யார் என்பதை அடையாளம் காண்பதில் புதுடில்லி இழைத்த தவறே இன்று அதற்குரிய வினையாக வந்து நிற்கின்றது.

உண்மையான நண்பர்களான தமிழர் பக்கம் நிற்காமல், வேடதாரியான கொழும்பை நண்பனாக்கிக் கொண்ட புதுடில்லி, இன்று அந்த நண்பன் சீனாவுடன் கைகோத்து நிற்பதைப் பார்த்து ஏமாளியாகக் கலங்குகின்றது.

சீனாவுடன் கைகோக்கும் கொழும்பை அணில் ஏறவிட்ட நாய் மாதிரி மேலே பார்த்துக் குரைப்பதைத் தவிர புதுடில்லிக்கு இனி மார்க்கம் ஏதுமில்லை.

புலிகளை அழித்து, கொழும்பைப் பாதுகாப்பான மரத்தில் ஏற்றிவிட்ட இந்தியா, இனி சீனாவின் பாதுகாப்பு வலயத்துக்குள் வளைய வரும் இலங்கையைக் கட்டுப்படுத்துவது சாத்தியமற் றது. அதுதான் யதார்த்த நிலைமையாகும்.

# மாற்றுக் கட்சிகளின் பிரசுரங்களை ஒட்ட முயன்ற வேட்பாளர் கைது



புதுக்குடியிருப்பு, பெப். 05

விசுவமடு, மூங்கிலாற்றுப் பகுதியில் மாற் றுக் கட்சிகளின் தேர்தல் பரப்புரைப் பிரசுரங் களை ஒட்ட முயன்ற வேறொரு கட்சியின் வேட்பாளர் நேற்றுமுன்தினம் இரவு பொலி ஸாரிடம் சிக்கிக்கொண்டார்.

அந்த வேட்பாளரிடம் ஈ.பி.டி.பி. மற்றும் ஐ.தே.கவின் பிரசுரங்கள் கைவசம் இருந்தன என்றும், அவற்றை ஒட்ட முயன்ற வேளை யிலேயே அவர் கைது செய்யப்பட்டார் என் றும் பொலிஸார் தெரிவித்தனர்.

அவர் ஏன் இந்தப் பிரசுரங்களை வைத் திருந்தார், ஒட்ட முயன்றார் என்பது குறித்து விசாரித்து வருகிறார்கள் என்றும் கைது செய் யப்பட்டவர் தமிழர் விடுதலைக் கூட்டணி யின் விசுவமடு பிரதேச வேட்பாளர் என்றும் புதுக்குடியிருப்புப் பொலிஸார் கூறினர்.

(இ - 81)

# அபிவிருத்திப் பணியில் வடக்கு சபையுடன் இணைந்து செயற்படுவதில் அரசு தோல்வி



குற்றம் சுமத்துகிறார் முதலமைச்சர் விக்கி

வடக்கில் அபிவிருத்தித் திட்டங்களை நடைமுறைப் படுத்தும் போது வடமாகாண சபையுடன் இணைந்து செயற் படுவதில் அரசாங்கம் தோல்வி கண்டுள்ளது என வடமாகாண முதலமைச்சர் சி.வீ.விக்னேஸ் வரன் குற்றம் சுமத்தியுள்ளார்.

வடமாகாண முதலமைச் சராகத் தாம் உள்ள நிலையில், திட்டங்கள் அறிமுகப்படுத்தப் பட்டதன் பின்னரே அழைக் கப்படுவதாகவும் முதலமைச் சர் கூறியதாக வாராந்த ஆங் கில ஊடகமொன்று தெரிவித் துள்ளது.

திட்டங்கள் குறித்து அரசாங் கம் முதலில் வட மாகாண சபையுடன் கட்டாயமாக கலந் துரையாட வேண் டும் என்றும், அவற்றை நடைமுறைப்படுத் தும்போது, வடமாகாண சபை யுடன் இணைந்து செயற்பட வேண்டும் என்றும் அவர் வலி யுறுத்தியுள்ளார்.

தேசியப் பிரச்சினைக்கான அரசியல் தீர்வாக வடக்கு, கிழக்கு மாகாண சபைகளுக்கு மட்டுமல்லாது, அனைத்து மாகா ணங்களுக்கும் சமஷ்டி தீர்வு வழங்கப்பட வேண்டும் என் றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# கொடுத்த வாக்குறுதிகளில் இருந்து இந்த நல்லாட்சி அரசு தவறியுள்ளது!

## சுதந்திர கலைஞர்கள் கூட்டமைப்பு கூறுகின்றது

கொழும்பு, பெப்.05

இந்த அரசாங்கம் இன்னும் நீடித்தால் நாட்டின் வளங்களை விற்பனை செய்து, தேசிய கலை ஞர்களை கூலி வேலைக்காரர் களாக்கி, இந்தியர்களுக்கு இலங் கையில் களம் அமைத்துக் கொடுக்கும் நிலைமை ஏற்படும் என சுதந்திர கலைஞர்கள் கூட் டமைப்பு தெரிவித்துள்ளது.

அக்கூட்டமைப்பின் பிரதம செயலாளர் சட்டத்தரணி டக்ளஸ் சிறிவர்தன நேற்று கொழும்பு வோர்ட் பிளேஸில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரி விக்கையில் இதனைக் கூறி யுள்ளார்.

இந்த அரசாங்கம் அதிகாரத் துக்கு வரும் போது தந்த எந்த வொரு வாக்குறுதியையும் நிறை வேற்றதவறியுள்ளதாகவும்டக்ளஸ் சிறிவர்தன சுட்டிக்காட் டியுள்ளார்.

இந்த தேர்தல் நினைத்துக் கூடப் பார்க்காமல் கிடைத்த ஒன்று அல்ல. மாறாக, வழக்குப் பேசி, கூச்சலிட்டு பெறப்பட்டது. இதனால், இது மக்களின் பலத்தை எடுத்துக் காட்டும் ஒரு தேர்தல். இன்னுமொரு விததத்தில் கூறு வதாயின் இந்தத் தேர்தல், இந்த அரசாங்கத்தைப் பற்றிய ஒரு சர்வஜன வாக்கெடுப்பாகும் என வும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# கட்சித் தலைவர்களின் விசேட கூட்டம் இன்று

கொழும்பு, பெப்.05

நாடாளுமன்றக் கட்சித் தலை வர்களின் விசேட கூட்டம் ஒன்று இன்று நடைபெறவுள்ளது.

இன்று முற்பகல் நாடாளு மன்றக் கட்டடத் தொகுதியில் இந்தக் கூட்டம் நடைபெறும் என நாடாளுமன்ற பிரதிச் செய லாளர் நீல் தெரிவித்தார்.


இந்தக் கூட்டத்தில் மத்திய வங்கி பிணை முறிப்பத்திரம் மற் றும் பாரிய ஊழல்,மோசடிகள் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுக்களின் அறிக்கை கள் சம்பந்தமாக நடக்கும் விவா தம் தொடர்பில் கலந்துரையாடப் பட உள்ளது.

நாளை இந்த விவாதம் நடை பெறவுள்ளதுடன் அதன் பின்னர் அடுத்த தினங்களிலும் விவா தத்தை நடத்துவதா இல்லையா என்பது குறித்து இன்றைய கலந்துரையாடலில் கவனம் செலுத்தப்படவுள்ளது.

மேலும் விவாதத்தில் கட்சி களுக்கு வழங்கப்படும் நேரம் தொடர்பிலும் கலந்துரையாடப் படும் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# ஒற்றையாட்சிக்கு நல்லாட்சி சவால்!

## கூறுகின்றார் மஹிந்த



கொழும்பு, பெப்.05

நல்லாட்சி அரசிடமிருந்து ஒற்றையாட்சியைக் காப்பது சவாலாக உள்ளதென முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இலங்கையில் நேற்று ஞாயிற்றுக்கிழமை கொண் டாடப்பட்ட சுதந்திர தினத்தை முன்னிட்டு அவர் வெளியிட்டுள்ள டுவிட்டர் பதிவிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை பிரித்தானிய கால னித்துவ ஆட்சியில் இருந்தபோது பிரித்தானியர்கள்கூட இலங் கையின் ஒற்றையாட்சியைப் பாதிக் கும் வகையில் எவ்விதச் செயற் பாடுகளையும் முன்னெடுக்க வில்லை. எனினும், காலனித்துவ ஆட்சியிலிருந்து விடுபட்ட பின் னர் நல்லாட்சியில் ஒற்றையாட் சியைக்காப்பதற்கு போராட வேண் டியுள்ளது என்றும் அவர் தனது பதிவில் குறிப்பிட்டுள்ளார். (ஐ)

**நாளை**

06.02.2018
செவ்வாய்க்கிழமை

நட்சத்திரம் : சித்திரை பி.ப. 3.43 வரை
திதி : ஷஷ்டி பி.ப. 1.13 வரை
சுபநேரம் : 11.05 – 12.35 வரை
இராகுகாலம்: 3.35 – 5.05 வரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போரின் பின்னரும் தமிழினச் சிதைப்பு சிங்களக் குடியேற்றங்களின் மூலமாக

## சீறுகிறார் சாந்தி ஸ்ரீஸ்கந்தராஜா எம்.பி.

கொழும்பு,பெப்.05

மகாவலி அபிவிருத்தித் திட்டம் என்ற பெயரில் தமிழ் மக்களின் காணிகளை அபகரித்து சிங்களக் குடியேற்றங்களை பேரினவாதக்கட்சிகள் மேற்கொள்கின்றன எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சாந்தி ஸ்ரீஸ் கந்தராஜா தெரிவித்துள்ளார்.

யுத்தத்தில் தமிழ் மக்களை சிதைத்த வர்கள் தற்போது மறைமுகமாக தமி ழுரை நாளுக்கு நாள் சிதைத்து வருகின் றனர் என அவர் குற்றஞ் சுமத்தியுள்ளார்.

வவுனியா வடக்கு பிரதேச சபைக்கு போட்டியிடும் வேட்பாளர்களை ஆதரித்து நெடுங்கேணியில் தமிழ்த் தேசியக் கூட்



டமைப்பின் பிரசாரக் கூட்டம் இடம் பெற் றது. இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பி னர் சாந்தி ஸ்ரீஸ்கந்தராஜா, தமிழர்கள் தம்மை தாமே ஆளும் நிலையை உரு வாக்க வேண்டும் எனவும் குறிப்பிட்டுள் ளார்.

அத்துடன், வன்னி அமைச்சர் ஒருவர் வடக்கு - கிழக்கு மீண்டும் இணைக்கப் படக்கூடாது என்ற நோக்கத்தில் சட்டவிரோ தமாக முஸ்லிம் குடியேற்றங்களை மேற்கொண்டு வருகிறார் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அதேவேளை, யுத்தத்தால் பாதிக் கப்பட்ட பிரதேசத்தின் அபிவிருத்திக்கு அரசாங்கத்தினால் ஒதுக்கீடு செய்யப்பட்ட இரண்டு கோடி ரூபாவைப் பெற்று அபிவி ருத்தியை செய்யத் தெரியாத நாடாளு மன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன், ஏனைய 15 நாடாளுமன்ற உறுப்பினர் களும் இலஞ்சம் வாங்கி விட்டனர் என்று பொய்ப் பிரசாரம் செய்கிறார் எனவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளு மன்ற உறுப்பினர் சாந்தி ஸ்ரீஸ்கந்தராஜா அங்கு மேலும் தெரிவித்துள்ளார்.

# மார்ச் முதலாம் திகதிக்குள் ராஜபக்ஷக்கள் சிறையில்!

## நீதிஅமைச்சர் கூறுகின்றார்

கொழும்பு,பெப்.05

ராஜபக்ஷாக்களை எதிர்வரும் மார்ச் முதலாம் திகதிக்குள் விசேட நீதிமன்றத்தின் மூலம் சிறையில் அடைக்க நடவடிக்கை எடுக்கப் படுமென நீதி மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்பு அமைச்சர் தலதா அத்துக்கோரள தெரி வித்துள்ளார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் இரத்தினபுரி சீவலி மைதானத்தில் கடந்த வெள்ளிக்கிழமை மாலை நடைபெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் இரத்தினபுரி மாவட்ட கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற் றும் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்துள் ளார்.



அவர் அந்தக் கூட் டத்தில் உரையாற்றும் போது மேலும் தெரி விக்கையில்-

திருடர்களைபிடிக்க வில்லையா என என் னிடம் சிலர் கேட்கின் றனர். எவ்வாறாயினும் கடந்த ஆட்சிக் காலத்தில் கொள்ளைகளில் ஈடுபட்டவர்கள் அனைவரும் மார்ச் முதலாம் திகதியாகும்போது விசேட நீதி மன்றத்தின் ஊடாக சிறையில் அடைக்கப்படுவா ர்கள்.

தற்போது சிறிய சிறிய மீன்களே சிக்கியுள்ளன. பெரிய பெரிய திமிங்கிலங்கள் இருக்கின்றன. இவர்கள் ராஜபக்ஷாக்களுடன் சகலரையும் உள்ளே போட்ட பின்னரே அவற்றைப் பிடிக்க வேண்டும். இதன்படி ராஜபக்ஷாக்கள் அனைவரையும் சிறையில் அடைத்த பின்னரே நாம் பின்னால் பார்ப்போம் என அவர் தெரிவித்துள்ளார்.(உ)

# எங்களிடமிருந்து அடித்த பணம் மூலமே வெற்றிக்கு முயல்கின்றார் மஹிந்தர்

கொழும்பு,பெப்.05

மஹிந்த ராஜபக்ஷ வெற்றிபெறு வதற்கு அதிகமாக முயற்சி செய் கிறார். எங்களிடமிருந்து அடித்துக் கொண்ட பணத்தை அதற்காகச் செலவு செய்கிறார் என, இலங்கைத் தமிழரசுக் கட்சித் தலைவரும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பின ருமான மாவை சேனாதிராசா தெரிவித்தார்.

மட்டக்களப்பு - வாழைச்சேனை, கண்ணகிபுரத்தில் நேற்றுமுன் தினம் மாலை நடைபெற்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் உரை யாற்றுகையிலேயே, அவர் இவ் வாறு குறிப்பிட்டார். அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்-

அரசியல் தீர்வு ஏற்படுகின்ற போது, மத்திக்கு மாகாணங்களுக்கு அதிகாரங்கள் பகிரப்படும். அதே போன்று, உள்ளூராட்சி மன்றங்க ளுக்கு அதிகமான அதிகாரங்கள் பகிரப்படவுள்ளன. உள்ளூராட்சி மன்றங்களுக்கான அதிகாரங்கள் பகிரப்படும்போது, உங்களது கிரா மங்களின் அபிவிருத்திக்கான திட் டங்களை, நீங்களே வகுக்க முடி யும். வெளிநாடுகளிலிருந்துநிதியுதவி களைப் பெறவும் மாகாணசபையிட மிருந்து தேவைகளை நிறைவேற் றவும் உங்களது தேவைகளுக்கு ஏற்றவாறு வரிகளை விதித்து, அபிவி ருத்தி செய்யவும் அதிகாரம் கிடைக்கவுள்ளது.

மஹிந்த ராஜபக்ஷ வெற்றிபெறு வதற்கு அதிகமாக முயற்சி செய்கி றார். எங்களிடமிருந்து அடித்துக் கொண்ட பணத்தை செலவு செய்



### வாழைச்சேனையில் மாவை விளக்கம்

கிறார். இந்தநாட்டில் இனப்பிரச்சினை தீர்க்கப்படாததன் காரணத்தால் இன விடுதலைக்காக ஆயுதமேந்தி போராடி உயிரிழந்தவர்களின் எண் ணிக்கை அதிகமாக உள்ளது. எமது பெண்களை மோசமாக நடத்தி னார்கள். அதற்கு பொறுப்பேற்க வேண்டிய போர்க்குற்றம், ராஜ பக்ஷ மீது சுமத்தப்பட்டுள்ளது.

இந்த நாட்டிலே, ஆட்சி மாற்றம் வேண்டும் என்று நினைத்தவர்கள் தென் பகுதியிலும் உள்ளார்கள். வடக்கு, கிழக்கிலும் இருக்கிறார்கள். எமது மக்கள் இராஜதந்திர ரீதியாக செயற்பட்டமையின் காரணத்தால் தான் மைத்திரிபால சிறிசேன ஜனா திபதியாக வந்தார். உலக நாடுகளின் ஆதரவுஎமக்கு கிடைத்திருக்கின்றது. இலங்கை அரசாங்கத்துடன் பேச்சுநடத்திக் கொண்டிருக்கும் சூழ்நிலையில், எமது மக்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை நம்பிக்கை வாய்ந்தவர்களாகத் தெரிவு செய்ய வேண்டும்.

எமக்கு எதிராகப் போட்டியிடு கின்றவர்கள் எம்மைப் பலவீனப் படுத்தி, எங்களது வாக்குப் பலத்தைக் குறைத்து, எமது மக்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மீது வைத் துள்ள நம்பிக்கையை குறைத்து விட்டால், உலக நாடுகளில் பேசுவதற் கான சந்தர்ப்பத்தை நாங்கள் இழந்து விடுவோம்.

ஆயுத பலத்தோடு போராடிய சந் தர்ப்பத்தை நாங்கள் இழந்திருக்கின்றபோது, எங்களுடைய ஜனநா யக பலத்தை நாங்கள் இழந்துவிடக் கூடாது.

அந்தநாட்டில் ஆட்சியை மாற்றுவதற்கு ஜனநாயக சந்தர்ப் பங்கள் உதவியாக இருந்தன. யாரும் படையெடுத்து இந்த நாட்டை கைப்பற்றவில்லை. சதிசெய்து ஆட்சி மாற்றம் ஏற்படவில்லை. தமிழ் மக் கள் தெற்கில் இருந்த சிங்கள மக்க ளோடு இணைந்து தங்களுடைய வாக்குப் பலத்தின் மூலம் ஆட்சியை மாற்றினார்கள்.

உலக நாடுகளுடன் இணைந்து எமது இனப்பிரச்சினைக்கு தீர்வைப் பெற்றுக்கொடுக்கும் சந்தர்ப்பத்தை நாங்கள் இழந்துவிடக்கூடாது. இந்த காரணத்துக்காக இந்தத் தேர்தலில், எங்களுடைய மக்கள் பிளவுபட்டு எதிரிகளுக்கு வாக்களிக்காமல் சிந் தித்து வாக்களிக்க வேண்டும்.- என் றார். (உ)

# ஜனாதிபதித் தேர்தலில் கோட்டாபய; அதற்காக அமெ. குடியுரிமை துறப்பு!

அடுத்த ஆண்டு டிசெம்பரில் நடைபெறும் என எதிர்பார்க்கப் படும் ஜனாதிபதித் தேர்தலில் பொது வேட்பாளராக முன்னாள் பாதுகாப்பு செயலாளர் கோட்டா பய ராஜபக்ஷ போட்டியிடவுள் ளார் என அவருக்கு நெருக்க மான வட்டாரங்கள் தெரிவித் துள்ளன.

அதற்காக அமெரிக்க குடியு ரிமையை நீக்கிக் கொள்வ தற் கான கோரிக்கையை கோட்டா பய முன்வைத்துள்ளார் எனவும் விரைவில் அவரது அமெரிக்கக் குடியுரிமை இரத்துச் செய்யப்ப டும் எனவும் அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்துள்ளன.



குடியுரிமையைநீக்கிக்கொள் வதற்குத் தேவையான சட்டரீதி யான நடவடிக்கைகளுக்காக கோட்டாபய அமெரிக்காவுக்குச் சென்றுள்ளார்.

தனக்கு நெருக்கமானவர் களுடன் எதிர்வரும் அரசியல் நடவடிக்கைகள் தொடர்பில் அவர்திட்டங்களைதிட்டமிட்டுள் ளார். அதற்கமைய மறைந்த அவரது சகோதரர் டட்லி ராஜ பக்ஷவின் அமெரிக்க வீட்டில் தனக்கு நெருக்கமானவர்க ளுடன் அரசியல் கலந்துரை யாடல்களில் அவர் ஈடுபட்டுள் ளமை தொடர்பான படங்கள் சில வெளியாகியுள்ளன.

எனினும் கோட்டாபயவின் அரசியல்வருகையைதடுப்பதற் கான நடவடிக்கைகளில் சிலதரப் பினர் இலங்கையில் தீவிரமாக முன்னெடுக்கப் பட்டு வந்தன. கோட்டாபயவுக்கு எதி ராக சுமத்தப்பட்டுள்ள குற்றச் சாட்டுத் தொடர்பில் அவரைக் கைது செய்வதற்கான நடவ டிக்கை மேற்கொள்ளப்படும் என சில தரப்பினர் எண்ணிய போதிலும் அவர் இன்னும் கைது செய்யப்படவில்லை.

கோட்டாபயவைகைதுசெய் வதற்கு குற்ற விசாரணை திணைக்களம் கடந்த காலங் களில் தீவிர முயற்சிகளை மேற்கொண்ட போதிலும் உயர் அரசியல் அழுத்தம் காரண மாக அது கைகூடவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (உ)

# புளியங்குளம் விபத்தில் சாரதி காயம்

வவுனியா,பெப்.05

யாழ்ப்பாணத்திலிருந்து தம்புள்ளை நோக்கிப் பயணித்த வாகனம் நேற்று அதிகாலை புளியங்குளம் புதூர் பகுதியில் விபத்திற்கு உள்ளாகியது.

சாரதியின் கட்டுப்பாட்டை யி ழந்த வாகனம் விபத்துக்குள் ளானதில், அவர் காயங்களுக்கு உள்ளாகினார் எனத் தெரிவிக்கப் படுகிறது.

விபத்து தொடர்பான மேல திக விசாரணைகளை புளியங் குளம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (உ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமலை கோட்டையில் சுதந்திர தின விழா

இலங்கை நாட்டின் 70ஆவது தேசிய சுதந்திர தினம் திருகோணமலை கோட்டை கடற்கரைப் பகுதியில் நேற்றுக் கொண்டாடப்பட்டது.

கிழக்கு மாகாண ஆளுநர் ரோஹித போகொல்லாகம பிரதம அதிதியாகக் கலந்து கொண்டமையுடன் முற்படையினரும் கலந்து கொண்டனர்.

அத்துடன் பாடசாலை மாணவர்களின் அணி வகுப்பு மரியாதை இடம் பெற்றதுடன் சமாதானப்பறவையும் கிழக்கு மாகாண ஆளுநர் பிரதம செயலாளரால் பறக்கவிடப்பட்டது.

(ப)





# மட்டு. தமிழ் உள்ளூராட்சிச் சபைகளை த.தே.கூட்டமைப்புத்தான் கைப்பற்றும்

மட்டக்களப்பு,பெப்.05

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள தமிழ் உள்ளூராட்சி மன்றங்களைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கைப்பற்றி ஆட்சி அமைக்கும் என்ற மகிழ்ச்சியான செய்தியை கூறிக்கொள்கின்றேன் என நாடாளுமன்ற உறுப்பினர் வியாழேந்திரன் தெரிவித்துள்ளார்.

வாழைச்சேனை பிரதேச சபைக்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் போட்டியிடும் வேட்பாளர்களை ஆதரித்து நேற்று முன்தினம் நடைபெற்ற பிரசாரக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள தமிழ் உள்ளூராட்சி மன்றங்களைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கைப்பற்றி ஆட்சி அமைக்கும்.



வியாழேந்திரன் எம்.பி. தெரிவிப்பு

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மற்றும் ஐக்கிய தேசியக் கட்சி சார்பாகத் தமிழ் வேட்பாளர்கள் நிறுத்தப்பட்டுள்ளார்கள். இவர்கள் நிறுத்தியவர்கள் சேர்த்துக் கொடுக்கும் வாக்குகளைக் கொண்டு தேசியப் பட்டியலில் மற்றைய இனத்தைச்சேர்ந்தவர்கள் தான் வருவார்கள்.

எவ்வளவு இராஜதந்திரமாக, சாணக்கியமாக எமது தமிழ் வேட்பாளர்களை நியமித்து நமக்கு வரவேண்டிய விகிதாசார பட்டியலில் தங்கள் சமூகம் சார்ந்தவர்களை சபைக்கு அனுப்புகின்ற திட்டத்தை மிகச் சாதுரியமாகச் செய்திருக்கின்றார்கள்.

இதனால், நமது தமிழ் பிரதிநிதித்துவம் இல்லாமல் போய்விடும். கடந்த காலங்களில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சிதைப்பதற்குப் பல கட்சிகள் செய்த அதே பாணியில் தற்போது எமது ஆதரவை குழப்பும் வகையில் முகநூல் மற்றும் இணையத் தளங்களில் செயற்பட்டு வருகின்றனர் எனத் தெரிவித்துள்ளார்.

# நசீர் அகமட்டின் ஆட்சி ஊழல் ஆதாரம் என்னிடம் உள்ளது

## அலிசாஹிர் மௌலானா

மட்டக்களப்பு,பெப்.05

கிழக்கு மாகாணசபையின் கடந்த, நசீர் அகமட்டின் ஆட்சியில் நடந்த ஊழல் தொடர்பாக நாடாளுமன்றிலிருந்து கணக்காய்வுக் குழு ஆதாரம் ஒன்றை தந்துள்ளது எனவும், அந்த ஆதாரம் தன்னிடம் உள்ளது எனவும் நாடாளுமன்ற உறுப்பினர் அலிசாஹிர் மௌலானா தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு, காத்தான்குடியில் இடம்பெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டம் ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

இங்கு அவர் தொடர்ந்தும் கருத்துத் தெரிவிக்கையில் –

நாங்கள் யாரையும் தனிப்பட்ட முறையில் விமர்சிக்கவில்லை, ஆனால், கடந்த காலத்தில் ஊழல் இடம்பெற்றது.

நான் தவிசாளராக இருக்கும் போது அபிவிருத்திகளைச் செய்த பின்னர் கிட்டத்தட்ட ஆறரைக் கோடி ரூபா சேர்த்து வைத்தேன். ஆனால், இப்போது ஒரு சதமும் அங்கு இல்லை. அத்தனையும் கொள்ளையடிக்கப்பட் டுள்ளன.

அவர்களின் ஊழல் தொடர்பாக நாடாளுமன்றில் இருந்து கணக்காய்வுக் குழு எமக்கு ஆதாரம் தந்திருக்கின்றது என்று தெரிவித்துள்ளார். (ப)

# சல்லித்தீவு நாவல் வெளியீட்டு விழா

மட்டக்களப்பு,பெப்.05

மட்டக்களப்பு மகுடம் கலை இலக்கிய வட்டத்தின் மகுடம் வி.மைக்கல்கொலின் ஏற்பாட்டில் கவிஞர் செ.குணரெத்தினத்தின் சல்லித்தீவு நாவல் வெளியீட்டு விழா மட்டக்களப்பு பொது நூலக கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

கிழக்குப் பல்கலைக் கழக சிரேஷ்ட விரிவுரையாளர் அருட்பணி ஏ.ஏ. நவரெத்தினம் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக பேராசிரியர் சி. மௌன குரு கலந்து கொண்டார்.

சிறப்பு அதிதிகளாக மட்டக்களப்பு மாநகர ஆணையாளர்என்.மணிவண் ணன், முன்னாள் வட கிழக்கு மாகாண கலா சாரப்பணிப்பாளர் செ.எதிர்மன்னசிங்கம் ஆகியோர்கலந்துகொண்டனர். நூல் விமர்சன உரையைகவிஞர்மேரா நிகழ்த்தினார். நூலின் முதற் பிரதியை சைவப் புரவலர் வி.றஞ்சித மூர்த்தி, தொழிலதிபர் ச.சிவபாதசுந்தரம் ஆகியோர் பெற்றுக்கொண்டனர். (ப)

# அலிசாஹிர் மௌலானா மீது பெண் ஒருவர் நிதிக்குற்றச்சாட்டு



நாடாளுமன்ற உறுப்பினர் அலி சாஹிர் மௌலானாவிற்கு எதிராக நிதிக்குற்றச்சாட்டு வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

கடுவலை மாவட்ட நீதிமன்றத்தில் இந்த வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என பாதிக்கப்பட்டவர் சார்பில் ஆஜராகும் சட்டத்தரணி தெரிவித்துள்ளார். இந்த வழக்கின் ஆரம்ப விசாரணையை எதிர்வரும் ஜூலை மாதம் 13 ஆம் திகதி நடத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பைப் பிறப்பிடமாகக் கொண்டு தற்போது அமெரிக்காவில் வாழ்பவரான அஞ்சலா கிறிஸ்டின் மயில்வாகனம் என்பவர் தனது சட்டத்தரணியூடாக இந்த வழக்கைத் தாக்கல் செய்துள்ளார். அமெரிக்க வாழ் பிரஜையான முறைப்பாட்டாளர், நாடாளுமன்ற உறுப்பினர் அலி சாஹிர் மௌலானா தன்னிடம் ஒரு லட்சத்து 50 ஆயிரம் அமெரிக்க டொலர்களை 2006 ஆம் ஆண்டு கடனாகப்பெற்றுக்கொண்டார்

அதில் 75ஆயிரத்து 981 அமெரிக்க டொலர்களை அவர் திருப்பிச் செலுத்தவில்லை எனவும் தனது முறைப்பாட்டில் கூறியுள்ளார்.

# முதன்மை வேட்பாளர் பதவியோ பதமோ இல்லை!

## அம்பாறை உதவித் தேர்தல் ஆணையாளர்

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் முதன்மை வேட்பாளர் என்றொரு பதவியோ பதமோ இல்லை என அம்பாறை மாவட்ட உதவித் தேர்தல்கள் ஆணையாளர் திலின விக்ரமரத்ன தெரிவித்துள்ளார்.

மாவட்டத்தில் சில பிரதேசங்களில் முதன்மை வேட்பாளர் என்ற பதம் உபயோகிக்கப்படுகிறது. பிரசாரத்தின்போதும் முதன்மை வேட்பாளர் என்ற பதம் பாவிக்கப்படுகின்றது. இது தொடர்பில் உதவிதேர்தல் ஆணையாளர் தெரிவித்தவை வருமாறு,

அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி மற்றும் சுயேச்சைக்குழுவினால் பெயர் குறித்த நியமனப் பத்திரம் மூலம் சமர்ப்பிக்கப்பட்டுள்ள வேட்பாளர்கள் மற்றும் மேலதிக வேட்பாளர்களின் பெயர் விவரங்கள் எம்மால் வெளியிடப்பட்டுள்ளன.

அதில் குறிப்பிட்ட சபையின் பெயர் அச்சபைக்குட்பட்ட வட்டாரத்தின் இலக்கமும் பெயரும் கட்சிகளின் பெயர் வேட்பாளர்களின் பெயர்கள் அதேபோன்று சுயேச்சையின்விபரமும் குறிப்பிடப்பட்டுள்ளன. இந்த வேட்பாளர் பட்டியல் தமிழிலும் சிங்களத்திலும் இருபுறமும் அச்சிட்டு தபால்மூல வாக்காளர்களுக்கும் வாக்காளர் அட்டைகளுடன் தபால் கந்தோர்களூடாக ஒவ்வொரு குடும்பத்திற்கும் விநியோகிக்கப்பட்டுள்ளன.

அவற்றில்எந்தவொரு சந்தர்ப்பத்திலும்முதன்மை வேட்பாளர் என்ற பதம் பயன்படுத்தப்படவில்லை என்பதை அறிந்திருப்பீர்கள். ஆக எம்முடனான தொடர்புகளுக்காக கட்சியென்றால் அங்கீகரிக்கப்பட்ட முகவரொருவரும் சுயேச்சை என்றால் அதற்குப் பொறுப்பாளியாக தலைவரொருவரும் நியமிக்கப்படுவார். மற்றும்படி முதன்மை வேட்பாளர் என்று யாருமில்லை எனத் தெரிவித்துள்ளார்.

# நீதிமன்றத்தின் இறப்பர் முத்திரையை வைத்திருந்த நபர் விளக்கமறியலில்!

திருகோணமலை,பெப்.05

திருகோணமலை தம்பலகமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் அனுமதிப்பத்திரமின்றி திருகோணமலை மாவட்ட நீதிமன்றமொன்றின் இறப்பர் சீலை வைத்திருந்த நபர் ஒருவரை நாளை மறுதினம் 7 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கந்தளாய் நீதிமன்ற நீதிவான் துசித்த தம்மிக்க உத்தரவிட்டுள்ளார்.

பாலமுனை, மண்டூர், மட்டக்களப்பு பகுதியைச் சேர்ந்த 27 வயதுடைய ஒருவரே விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

சந்தேக நபர் நீதிமன்றங்களில் தொழில் பெற்றுத் தருவதாகக் கூறி நீதிமன்றத்தின் இறப்பர் முத்திரையைப் பயன்படுத்தியிருக்கலாம் எனவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

மட்டக்களப்பு பகுதியைச் சேர்ந்த சந்தேகநபர் கெக்கிராவப் பகுதியில் திருமணம் முடித்துள்ளதோடு, திருகோணமலை தம்பலகமம் பகுதியில் உறவினர் வீட்டில் தங்கியிருந்த நிலையில் பொலிஸாருக்குச் சந்தேக நபர் தொடர்பாக கிடைத்த தகவலின் அடிப்படையில் வியாழக்கிழமை கைது செய்துள்ளோம் எனப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

சந்தேக நபரை பொலிஸார் கந்தளாய் நீதிமன்ற நீதிவான் முன்னிலையில் ஆஜர்படுத்திய போதே விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை தம்பலகமம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ப)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சனியன்று இரவு 7 மணிமுதல் தேர்தல் முடிவுகள் வெளியாகும்

எதிர்வரும் 10ஆம் திகதி நடைபெறவுள்ள உள்ளூராட்சித் தேர்தலின் முடிவுகள், அன்று இரவு 7 மணிக்கும், 8 மணிக்கும் இடையில் வெளி வரத் தொடங்கும் என்று இலங்கையின் மேலதிக தேர்தல்கள் ஆணையாளர் எம்.எம். மொகமட் தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சித் தேர்தல் வாக்களிப்பு 10ஆம் திகதி, மாலை 4 மணியுடன் முடிவடையும். உடனடியாக, அந்தந்த வாக்களிப்பு நிலையங்க ளிலேயே, அந்தந்த வட்டாரத்துக்குரிய வாக்கு கள் எண்ணப்பட்டு முடிவுகள் அறிவிக்கப்படும்.

தேர்தல் முடிந்து மூன்று, நான்கு மணி நேரங்களில் சிறிய சபைகளின் முடிவுகளை, அதிகாரபூர்வமாக அறிவிக்கக் கூடியதாக இருக்கும். எனினும், பெரிய மாநகரசபைகளின் முடிவுகளை வெளியிட அதிக நேரம் தேவைப் படும்.

தேர்தல் முடிவுகளை வெளியிடக் கூடிய சரியான நேரத்தை கூறுவது கடினம். ஆனால் நாங்கள் இரவு 7 மணிக்கும், 8 மணிக்கும் இடையில், ஆரம்ப முடிவுகளை வெளியிட முடியும் என்று எதிர்பார்க்கிறோம் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (உ)

## ராஜபக்ஷக்களின் முகவரி இனி வெலிக்கடை சிறையாம்!



அமைச்சர் ராஜித திட்டவட்டம்

ராஜபக்ஷக்களின் முகவரிகள் இந்த வருடத்திலிருந்து மாற்றமடை யவுள்ளன எனவும் அவர்களின் புதிய முகவரி வெலிக்கடை சிறைச் சாலையாகவே இருக்குமெனவும் அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரி வித்துள்ளார்.

குளியாப்பிட்டிய நகரில் நேற்று முன்தினம் சனிக்கிழமை நடைபெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் பிரசார கூட்டத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

2018ஆம் ஆண்டில் ராஜபக்ஷக் கள் அனைவரையும் சிறையில் அடைத்து விடுவோம். இதன்படி அவர்களின் முகவரியாக வெலிக் கடை சிறைச்சாலையே இருக்கும். அந்தச் சிறைச்சாலைக்கு மக்கள் தபால் அட்டைகளை அனுப்பி அவர் களிடம் சுகம் விசாரிக்கலாம். அதே போன்று நீங்கள் அணிந்திருக்கும் ஜம்பர் எப்படியிருக்கின்றது எனவும் கேட்கலாம். இந்நிலையில் தற்போது முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோட்டா பய ராஜபக்ஷ நாட்டைவிட்டு வெளியே சென்றுள்ளார். இவர் தனது இலங்கை கடவுச்சீட்டை பயன்படுத்திச் செல்லாது அமெரிக்கக் கடவுச்சீட்டை பயன்படுத் தியே வெளிநாட்டுக்கு சென்றுள்ளார்.

2020இல் ஜனாதிபதி வேட்பாளர் எனக் கூறுவோர் இப்போது உள்ளூ ராட்சி தேர்தலின்போதே காணாமற் போயுள்ளார். இவர் அச்சத்தில் வெளி நாட்டுக்குத் தப்பிச் சென்றுள்ளார் என்றே கூறவேண்டும்.

எவ்வாறாயினும் இவர்கள் அனை வரையும் கைது செய்யும் நாள்கள் வெகு தொலைவில் இல்லை. - என ராஜித தெரிவித்துள்ளார்.

## மின்சார நாற்காலியிலிருந்து மஹிந்தவை காத்தது ஐ.தே.க.



அமைச்சர் மங்கள சுட்டிக்காட்டு

கொழும்பு, பெப் 05

மின்சார நாற்காலியில் இருந்து மஹிந்த ராஜபக்ஷவை ஐக்கிய தேசியக் கட்சித் தலை மையிலான அரசு காப்பாற்றியது என்பதை அவருக்கு மீண்டும் ஒரு முறை நினைவூட்ட விரும் புகிறேன் என நிதி மற்றும் ஊடகத்துறை அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

மாத்தறை கம்புறுப்பிட்டிய வில் நடைபெற்ற ஐக்கிய தேசி யக் கட்சியின் கூட்டம் ஒன்றில் உரையாற்றும்போதே அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கை யில் -

உலகில் தனிமைப்படுத்தப் பட்ட நாட்டை நாங்கள் பொறுப் பேற்றோம். உலக தலைவர்கள் இலங்கைக்கு விஜயம் செய்ய அஞ்சினர். எனினும் தற்போது அப்படியல்ல. உலகில் பலம் மிக்க நாடுகளின் தலைவர்கள் இலங் கைக்கு வருகை தருகின்றனர்.

நாங்கள் நாட்டைப் பொறுப் பேற்ற நேரத்தில் போர்க் குற்றங் கள் தொடர்பாகச் சர்வதேச விசா ரணை நடத்த உத்தரவிடப்பட் டிருந்தது. எனினும், எமது படை யினருக்கு பாதிப்பை ஏற்படுத் தும் சர்வதேச விசாரணையை நாங்கள் நிறுத்தினோம்.

அத்துடன், மஹிந்த ராஜபக்ஷ கடந்த தேர்தலில் தன்னை மின் சார நாற்காலிக்கு அனுப்ப முயற் சிக்கின்றனர் என்று கூறி வந்தார். அதனை நாம் தான் தடுத்தோம்.

அதேபோல் வெளிவிவகார அமைச்சர் என்ற வகையில் முத லில் ஐரோப்பிய நாடுகளில் இலங்கையின் மீன் ஏற்றுமதிக்கு விதிக்கப்பட்டிருந்த தடையை நீக்க முடிந்தது. பிரதமரின் தலை மையில் அந்தத் தடையை நீக்க முடிந்துள்ளதால், மீனவர்கள் மீண்டும் முன்னேற்றம் அடைந் துள்ளனர் - என்றார். (ஐ)

## வாக்கு வேட்டைக்குச் சென்றவர் வேட்டையாடப்பட்டாராம்!

### பெண் வேட்பாளருக்கு நேர்ந்த கதி

இம்முறை உள்ளூ ராட்சி சபைகளுக்கான தேர்தலில் போட்டியிடும் பெண் வேட்பாளர் ஒருவ ரைப் பாலியல் வல்லுற வுக்கு உட்படுத்தினார் எனத் தெரிவிக்கப்படும் சம்பவம் தொடர்பாக சந்தேக நபர் ஒருவரைப் பொலிஸார் தேடிவருகின் றனர்.

வெலிகந்தைப் பகுதி யில் ஆதரவாளர் ஒருவரி னால் இவ்வாறு அந்த பெண் பாலியல் வல்லுற வுக்கு உட்படுத்தப்பட் டுள்ளார் என முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாக கூறப்படுகின்றது.

சம்பந்தப்பட்ட பெண் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். சந் தேகநபர் பிரதேசத்தை விட்டு தப்பிச் சென்றுள் ளார் எனவும் கூறப்படு கின்றது. (உ)

## இலங்கையுடன் உயர்மட்ட உறவை பேண விரும்புகின்றது இந்தியா



### சுதந்திர தின வாழ்த்தில் மோடி தெரிவிப்பு

இலங்கையுடன் உயர்மட்டங்களிலான உறவு களைப் பேணிக்கொள்ள இந்தியா விரும்புகிறது என இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி தெரிவித் துள்ளார்.

இலங்கையின் 70 ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு, இலங்கை பிரதமர் ரணில் விக்கிரம சிங்கவுக்கு அனுப்பியுள்ள வாழ்த்துச் செய்தி லேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

எமது இருநாடுகளுக்கும் இடையிலான உறவு கள், வரலாறு, கலாசார அடிப்படையில், உண்மை யான பன்மைத்துவத்துடன் வளர்ந்து வந்திருக் கிறது.

இந்தப் பிணைப்புகளை மேலும் வலுப்படுத் திக் கொள்வது எமது பொறுப்பும், எதிர்பார்ப்பும் ஆகும்.

எமது நாடுகளில் உள்ள மக்களின் பரஸ்பர நன்மைக்காக, உயர் மட்டங்களில், குறிப்பாக பொருளாதாரத்துறையில், நமது உறவை அதி கரித்துக் கொள்வதற்காகத் தொடர்ந்து உங்களு டன் இணைந்து பணியாற்றுவதற்கு எதிர்பார்த் திருக்கிறேன். தயவு செய்து எனது கருத்தை ஏற்றுக் கொள்ளுங்கள்.

உங்களின் நல்ல ஆரோக்கியம், தனிப்பட்ட நல்வாழ்வு மற்றும் நட்புடைய இலங்கை மக் களின் முன்னேற்றம் மற்றும் செழிப்புக்கு எனது வாழ்த்துக்கள் - என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## சுதந்திர தின இராப்போசன விருந்து ரத்துச் செய்தார் ஜனாதிபதி

### தேர்தல் பிரசாரத் தீவிரத்தினால்



நேற்றுக் கொண்டாடப்பட்ட இலங்கையின் 70 ஆவது சுதந்திர தின வரவேற்பு விருந்தை ஜனாதி பதி மைத்திரிபால சிறிசேன ரத்துச் செய்துள்ளார்.

சுதந்திர தினத்தன்று பாரம்பரிய முறைப்படி, ஜனாதிபதியால் இராப் போசன வரவேற்பு விருந்து ஆண்டு தோறும் நடத்தப்பட்டு வருகிறது. இதில், உள்நாட்டு, வெளிநாட்டு பிரமு கர்கள், இராஜதந்திரிகள் பங்கேற்கின் றமை வழக்கம்.

இம்முறையும், இந்த விருந்துக்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டு அழைப் பிதழ்கள் அனுப்பப்பட்டன.

சுமார் 600 விருந்தினர்கள் இந்த நிகழ்வில் பங்கேற்பர் என்று எதிர் பார்க்கப்பட்டது.

எனினும், அழைப்பிதழ் அனுப் பப்பட்ட வெளிநாட்டு தூதுவர்கள் மற்றும் இராஜதந்திரிகள், பிரமுகர் களுக்கு இந்த விருந்துபசார நிகழ்வு ரத்துச் செய்யப்பட்டதாக ஜனாதிபதி செயலகத்தினால் அறிவிக்கப்பட் டது.

தவிர்க்க முடியாத சூழ்நிலை களால் நிகழ்வு ரத்துச் செய்யப்பட் டுள்ளதாக கடந்த வெள்ளிக்கிழமை அறிவிக்கப்பட்டது.

உள்ளூராட்சித் தேர்தலுக்கு இன்னமும் சில நாள்களே இருப்ப தால், பரப்புரைகள் தீவிரமடைந்துள் ளன. இதனைக் கருத்தில் கொண்டே, சுதந்திர தின இராப்போசன வர வேற்பு ரத்துச் செய்யப்பட்டதாகக் கூறப்படுகிறது.

ஜனாதிபதியின் உத்தரவை அடுத்தே இந்த நிகழ்வு ரத்துச் செய் யப்பட்டதாகவும் தெரிவிக்கப்படு கிறது.

இதற்கிடையே அழைப்பிதழ் கிடைத்த பலர் தமக்கு நிகழ்வு ரத்துச் செய்யப்பட்டமை தொடர்பான அறி வித்தல் கிடைக்கவில்லை என்றும் கூறினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிதை நூல் வெளியீடு

யாழ்ப்பாணம், பெப். 05

எழுத்தாளர் சோ.பத்மநாதன் மொழிபெயர்ப்பில் 'தென்னாசியக் கவிதைகள்' நூல் வெளியீடு நாளைமறுதினம் புதன்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் இடம்பெறும்.

வாழ்த்துரையை யாழ். இந்திய உதவித் தூதுவர் ஆ.நடராஜன், தொடக்கவுரையை முனைவர் ச.க.கண்ணதாஸ், நூல் வெளியீட்டுரையை பேராசிரியர் சி.சிவலிங்கராசா ஆகியோரும் ஆய்வுரைகளை சாந்திகம் பணிப்பாளர் திருமதி கோகிலா மகேந்திரனும் விரிவுரையாளர் தி.செல்வமனோகரனும் நிகழ்த்துவர்.

முதற் பிரதியை மூத்த சட்டத்தரணி வை.த.சிவலிங்கம் பெற்றுக்கொள்வார். (இ)

## தினசரி ராசி பலன் (05.02.2018)

*2018 ஆம் ஆண்டு ஏவிளம்பி வருடம் தைத்திங்கள் 23 ஆம் நாள் திங்கட்கிழமை பஞ்சமித்திதி காலை 8.05 மணிவரை. பின்னர் ஷஷ்டி. நட்சத்திரம்: அத்தம் பகல் 10.17 மணிவரை பின்னர் சித்திரை. சித்தயோகம் பகல் 10.17 மணிவரை. பின்னர் அசுபயோகம்.*

**ராகுகாலம்** - *காலை 8.01 மணிமுதல் 9.28 மணிவரை*

**சுபநேரம்** - *பகல் 12.32 மணிமுதல் 2.02 மணிவரை*

**திவசம் செய்ய வேண்டிய திதி** - *தை மாத தேய்பிறை ஷஷ்டி.*

**பிறந்த நட்சத்திர வழிபாடு:** *அத்தம்.*

**'ஜோதிடமணி' பிரம்மஸ்ரீ சி.ஜெகதீஸ்வரசர்மா ஜே.பி.**

**மேஷம்** ஆக்கபூர்வமான நாள். வருமானம் வளமாக இருக்கும். தொழிலில் மேன்மை உண்டாகும். உத்தியோகத்தில் மேலதிகாரிகளின் அனுசரணையுடன் சலுகைகளும் கிடைக்கும்.

**ரிஷபம்** நன்மையான நாள். பணப்புழக்கம் சரளமாக இருக்கும்.செய்தொழில் விருத்தியடையும். உத்தியோக உயர்வுகள் கிடைக்கும். மாணவர்கள் கல்வியில் மேன்மை அடைவார்கள்.

**மிதுனம்** கவலையான நாள். வருமானம் குறையும். தொழிலில் கடுமையாக உழைத்தும் பலன் குறைவடையும். உத்தியோகத்தர்கள் தொழிலில் கவனக்குறைவால் அதிகாரிகளின் கண்டனத்துக்கு ஆளாக நேரிடும்.

**கடகம்** சம பலன்கள் காணப்படுகின்றன. பொருளாதாரம் பற்றாக்குறையாக இருக்கும். அளவுக்கு மீறிய செலவுகள் உண்டாகும். வியாபாரத்தில் சம லாபம் கிடைக்கும்.

**சிம்மம்** உயர்வான நாள். எதிர்பார்த்த பணம் கைக்கு வந்து சேரும். தொழிலில் உயர்வு உண்டாகும். மாணவர்கள் கல்வியில் மேம்படுவார்கள். சமூக அந்தஸ்து உயரும்.

**கன்னி** மகிழ்ச்சியான நாள். பணப்புழக்கம் தாராளமாக இருக்கும். குடும்பத்தில் சந்தோஷம் அதிகரிக்கும். சிலர் குடும்பத்துடன் சேர்ந்து உல்லாசப் பயணம் செல்வார்கள்.

**துலாம்** துன்பமான நாள். பணம் பற்றாக்குறையாக இருக்கும். செய்யும் தொழிலில் ஆதாயம் குறையும். மனதில் ஒரு வித கவலை உண்டாகும். நெருங்கிய உறவினர் ஒருவரின் துக்க செய்தியைக் கேட்க நேரிடும்.

**விருச்சிகம்** நன்மையான நாள். பொருளாதாரம் வளமாக இருக்கும். குடும்ப உறவில் புரிந்துணர்வு அதிகரிக்கும். உடல் ஆரோக்கியத்தில் உற்சாகம் உண்டாகும். புதிய தொழில் வாய்ப்புகள் அமையும்.

**தனுசு** மத்திம பலன்கள் காணப்படுகின்றன. பொருள் வரவு மத்திமமாக இருக்கும். மாணவர்கள் கல்வியில் சிறு தடைகள் உண்டாகும். சுயதொழில் விருத்தி குன்றும்.


**மகரம்** இனிமையான நாள். பணப்புழக்கம் திருப்தியைத் தரும். பிரிந்திருந்த சொந்த பந்தங்கள் மீண்டும் இணையும் வாய்ப்புகள் உண்டாகும். வியாபாரத்தில் மேலதிக லாபம் கிடைக்கும்.

**கும்பம்** யோசனையான நாள். பணவரவு குறையும். சிலருக்கு செய்யும் தொழிலை இழக்க நேரும். மாணவர்களுக்கு கல்வி ஊக்கம் குறையும். பெண்களுக்கு திருமணப் பேச்சுகள் குழம்பிப் போகும்.

**மீனம்** சம பலன்கள் காணப்படுகின்றன. பணவரவு சுமாராக இருக்கும். வியாபாரம் ஏறு, இறங்கு முகமாக நடக்கும். உத்தியோகத்தில் கடின உழைப்பும், அலைச்சல்களும் அதிகமாகும்.

**சந்திராட்டமநாள்: அவிட்டம் 3 ஆம், 4 ஆம் பாதங்கள், சதயம், பூரட்டாதி முதலாம், 2 ஆம், 3 ஆம் பாதங்களில் பிறந்தோர் நற்கருமங்கள் தொடங்குவதைத் தவிர்க்கவும்.**

# பாலங்களை முறையாக அமையுங்கள்: ஒதியமலைப் பகுதி மக்கள் கோரிக்கை





முல்லைத்தீவு,பெப்.05

முல்லைத்தீவு, மாவட்டத்தின் ஒட்டு சுட்டான் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட ஒதியமலை கிராமத்தில் வீதியிலிருந்து வீடுகளுக்கு செல்லும் வீதிகள் மற்றும் மக்களின் வாழ்விடங்கள் பொது இடங்களுக்கு செல்வதற்காக வீதி அபிவிருத்தி செய்பவர்களால் அமைக்கப்படும் பாலங்கள் உரிய முறையில் அமைக்கப்படவில்லை இது விடயத்தில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் விரைந்து நடவடிக்கை எடுக்குமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இந்த விடயம் தொடர்பில் மக்கள் மேலும் தெரிவிக்கையில் மணலாறு (வெலிஓயா) பகுதியில் இருந்து தமிழர்களில் எல்லைக்கிராமங்கள் ஊடாக நெடுங்கேணி நோக்கிய வீதி 'காபெட்' வீதியாக புனரமைக்கப்பட்டு வருகிறது.

இந்நிலையில் ஒதியமலை கிராமத்தில் அமைக்கப்படும் பாலங்கள் உரிய முறையில் அமைக்கப்படவில்லை எனவும் அதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

குறித்த பாலங்கள் உரிய முறையில் கட்டப்படாது வெறுமனே பாலக் கொட்டுகள் மட்டும் வைக்கப்பட்டு மண் போட்டு நிரவப்படுவதாகவும் இரண்டு பாலக் கொட்டுகள் வைக்கும் போது அவற்றை பொருத்துவதற்கான வளை யங்கள் போடப்படாது மண் போட்டு நிரவிவிட்டு செல்வதாகவும் அதிகாரிகள் விரைந்து நடவடிக்கை எடுக்குமாறும் பிரதேச மக்கள் கோருகின்றனர். (இ)

# கல்விக்கதிர்

## தரம் 5 புலமைப் பரிசில் வினாத் தாள்களின் விடைகள்

**வினாத்தாள் 10 இன் பகுதி - I, II இற்கான விடைகள் வருமாறு:-**

| | | | | |
|---|---|---|---|---|
| 01 - 3 | 09 - 3 | 17 - 1 | 25 - 3 | 33 - 3 |
| 02 - 3 | 10 - 2 | 18 - 1 | 26 - 1 | 34 - 1 |
| 03 - 3 | 11 - 1 | 19 - 1 | 27 - 1 | 35 - 3 |
| 04 - 2 | 12 - 2 | 20 - 2 | 28 - 2 | 36 - 1 |
| 05 - 2 | 13 - 2 | 21 - 3 | 29 - 3 | 37 - 2 |
| 06 - 1 | 14 - 3 | 22 - 1 | 30 - 1 | 38 - 3 |
| 07 - 2 | 15 - 2 | 23 - 2 | 31 - 2 | 39 - 3 |
| 08 - 3 | 16 - 2 | 24 - 2 | 32 - 1 | 40 - 3 |

**வினாத்தாள் 10 இன் பகுதி - II இற்கான விடைகள்**

**01.**
1. நற்குணங்கள் உடையவர்கள்
2. இரக்கம்
3. ஞாபகம்
4. இரட்டைக் கொம்பு
5. கல்லில் எழுதப்பட்ட எழுத்து
6. அவர்கள்

**02.**
1. ஒளி
2. மாலை

**03.**
1. பருந்து வட்டமிட்டுப் பறந்தது
2. மரங்கள் உயர்ந்து வளர்ந்திருந்தன

**04.**
1. சித்திரவதை
2. குடுகுடு
3. கௌதம புத்தர்
4. நன்மை செய்

**05.**
1. இது உங்களுடையதா?
2. தயவு செய்து அங்கே நிறுத்துங்கள்

**06a.** This is my house

| | | |
|---|---|---|
| **06.** 2 | **14.** 3 | **22.** 2 |
| **07.** 3 | **15.** 1 | **23.** 3 |
| **08.** 3 | **16.** 4 | **24.** 3 |
| **09.** 2 | **17.** 3 | **25.** 2 |
| **10.** 2 | **18.** 4 | **26.** 2 |
| **11.** 4 | **19.** 2 | **27.** 2 |
| **12.** 3 | **20.** 3 | **28.** 3 |
| **13.** 4 | **21.** 3 | **29.** 4 |
| | | **30.** 3 |

# நாளை மின் தடை

யாழ்ப்பாணம், பெப். 05

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை செவ்வாய் காலை 8 மணியிலிருந்து மாலை 5.30 மணிவரை -

**யாழ். பிரதேசத்தில் -**

அச்செழு, மாசிவன் சந்தி, மண்டைதீவு, மண்கும்பான், அல்லைப்பிட்டி, வேலணை ஒரு பகுதி, மண்கும்பான் தேசிய நீர்வழங்கல் வடிகால் சபை, மண்கும்பான் கடற்படை முகாம், மண்டைதீவு வெலுசுமண இலங்கை கடற்படை முகாம் ஆகிய இடங்களிலும் -

**மன்னார் பிரதேசத்தில் -**

வட்டுப்பித்தன்மடு, புதுக்காமம் ஆகிய பிரதேசங்களிலும் -

**வவுனியா பிரதேசத்தில் -**

கோவில்குளம், ஆச்சிபுரம், சமணன்குளம், மகாமயிலங்குளம், மருதநகர், எல்லப்பமருதங்குளம், பெரியகூமரசங்குளம், ஆசிக்குளம், சிதம்பரபுரம், அட்டம்பஸ்கட கிராமம், தவசிக்குளம் கிராமம், பண்டாரிக்குளம் கிராமம் ஆகிய இடங்களிலும் -

மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்று மின்பொறியியலாளர் அறிவித்துள்ளார். (இ)

# இல்ல மெய்வன்மைப் போட்டி

பண்டத்தரிப்பு, பெப். 05

பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று திங்கட்கிழமை பிற்பகல் 1.30 மணியளவில் பாடசாலை மைதானத்தில் அதிபர் எஸ்.தேவராஜ் தலைமையில் இடம்பெறும். இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண ஆளுநர் ரெஜினோல்ட் குரே, சிறப்பு விருந்தினராக வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ்.சந்திரராஜா ஆகியோர் கலந்துகொள்வர். (இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுதந்திரதின விழாவை எதிர்க்கிறோம்; வெறுக்கிறோம்

# கேப்பாபிலவு மக்கள் நேற்றைய தினம் கறுப்புக் கொடிகள் கட்டிப் போராட்டம்

கேப்பாபிலவு பூர்வீகக் கிராமத்தை மீட்பதற்காக கடந்த வருடம் மார்ச் மாதம் முதலாம் திகதி ஆரம்பித்த நிலமீட்புப் போராட்டம் நேற்று 339 ஆவது நாளாகவும் தொடர்கிறது.

அந்த மக்கள் நேற்று சுதந்திர தினத்திற்கு எதிர்ப்புக் காட்டுமுகமாக கறுப்புக் கொடிகள் கட்டிப் பறக்க விட்டுதங்களின் எதிர்ப்பை - கொதிப்பை வெளிப்படுத்தினர்.

இதேவேளை போராட்டம் மேற்கொள்ளும் ஒருவர் கறுப்பு உடையணிந்து பரண் மீது ஏறி உணவு தவிர்த்து சுதந்திர தினத்தை எதிர்த்து மௌன விரதம் அனுஷ்டித்தார்.

கேப்பாபிலவு மக்களுக்குச் சொந்தமான காணிகளில் படையினர் அபகரித்துள்ள காணிகளில் இருந்து 133.4 ஏக்கர் காணிகள் கடந்த வருடம் மார்கழி 28 ஆம் திகதி மக்கள் முன்னிலையில் படைத்தரப்பால் மாவட்ட அரசாங்க அதிபரிடம் கையளிக்கப்பட்டன.




இதன்போது கேப்பாபிலவு பகுதியில் 111.5 ஏக்கர் காணிகளும் சீனியாமோட்டை பகுதியில் 21.84 ஏக்கர் காணிகளுமாக மொத்தமாக 133.34 ஏக்கர் காணிகள் கையளிக்கப்பட்டன.

அந்தக் காணிகளுக்குள் கடந்த முதலாம் திகதி மக்கள் சென்றனர் இந்நிலையில் இன்னும் 104 குடும்பங்களுக்குச் சொந்தமான 181 ஏக்கர் காணிகள் விடுவிக்கப்படவில்லை. அக்காணிகள் விடுவிக்கும் வரை தமது போராட்டம் தொடருமென தெரிவித்துள்ளனர் அந்த மக்கள்.

அதேசமயம் நேற்றைய தினம் இலங்கையின் 70 ஆவது சுதந்திர தினத்தை எதிர்க்கிறோம் வெறுக்கிறோம் எனத் தெரிவித்து தமது போராட்ட இடமெங்கும் கறுப்புக் கொடிகள் கட்டி பல் வேறு வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை தொங்கவிட்டு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

போராட்டத்தில் ஈடுபட்டு வரும் ஆறுமுகம் வேலாயுதம்பிள்ளை கடந்த வருடம் ஜனவரி மாதம் 31 திகதி பிலவுக்குடியிருப்பு மக்கள் போராட்டத்தை ஆரம்பித்த போது மக்களின் காணிகள் விடுவிக்க வேண்டும் எனக் கூறி கடந்த வருடம் மாசி மாதம் 4 திகதி கேப்பாபிலவு மாதிரிக்கிராம பிள்ளையார் ஆலயத்தில் சிவ பூசை ஒன்றை ஆரம்பித்தார். அதனைத் தொடர்ந்து தொடர்ச்சியாக சிவவழிபாட்டில் ஈடுபட்டு வந்த அவர் பிலவுக்குடியிருப்பு காணி விடுவிக்கப்பட்ட கடந்தவருடம் மார்ச் மாதம் முதலாம் திகதி கேப்பாபிலவு பூர்வீக வாழ்விடம் முழுமையாக விடுவிக்க வேண்டும் எனக் கோரி முல்லைத்தீவு பாதுகாப்புப் படைத் தலைமையக வாயிலில் கூடாரம் அமைத்து போராட்டத்தைத் தொடர்ந்தார். அவரது போராட்டம் நேற்று ஒரு வருடம் பூர்த்தியாகும் நிலையில் கறுப்பு உடையணிந்து பரண் மீது ஏறி உணவு தவிர்த்து சுதந்திர தினத்தை எதிர்த்து மௌன விரதம் அனுஷ்டித்தார்.



ஒருவர் கறுப்பு உடையுடன் பரண் மீது ஏறி எதிர்ப்பு

(இ-8)

## கேதீஸ்வரத்துக்கு பாத யாத்திரை சந்நிதியிலிருந்து புதன் ஆரம்பம்

### அடியார்கள் தொடர்புகொண்டு விவரம் பெறலாம்

ஆண்டுதோறும் நடைபெறும் மகா சிவராத்திரி பெருவிழவை முன்னிட்டு அகில இலங்கையிலிலுமிருந்து சிவனடியார்கள் கலந்துகொள்ளும் பாத யாத்திரை வேல்சுவாமி ஐயா தலைமையில் நாளைமறுதினம் புதன்கிழமை காலை செல்வச்சந்நிதி ஆலயத்தில் இருந்து ஆரம்பமாகி நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தை வந்தடையும். அங்கிருந்து மறுநாள் வியாழன் காலை நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தில் இருந்து காலை 8.30 மணிக்கு ஆரம்பமாகி முறையே செம்மணி, நாவற்குழி, தனங்கிழப்பு, கேரதீவு, பூநகரி, பல்லவராயன்கட்டு, முழங்காவில், வெள்ளாங்குளம், மூன்றாம்பிட்டி, இலுப்பைக்கடவை, ஆத்திரமோட்டை, புதுக்குளம், கள்ளியடி, பள்ளமடு, பாப்பாமோட்டை, மாணிக்கத்திடல் ஊடாக 13 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை திருக்கேதீஸ்வரம் சென்றடையும்.

உலக சைவ திருச்சபையின் நெறிப்படுத்தலின் கீழ் இப்பாத யாத்திரை நடைபெறும். தங்குமிடங்கள் குறித்து அறிவிக்கப்படும். இவ்விடத்து அடியார்கள் யாத்திரையில் இணைந்து கொள்வதற்காக விவரங்களை 077583 5372, 0776616398, 0773483437 ஆகிய இலக்கங்களுடன் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளலாம் என்று சபையின் தலைவர் சிவஸ்ரீ க.சுமுகலிங்கம் சிவாச்சாரியார் அறிவித்துள்ளார்.

(இ)


# உள்ளூராட்சி சபைத் தேர்தல்-2018



## ஆதரிப்பீர் உதயசூரியனை

★ ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி, தமிழர் விடுதலைக் கூட்டணி, ஈழப் புரட்சி அமைப்பு, ஜனநாயக தமிழரசுக் கட்சி, புனர்வாழ்வளிக்கப்பட்ட விடுதலைப் புலிகள் என ஐந்து கட்சிகள் இணைந்து தமிழ்த் தேசிய விடுதலைக் கூட்டமைப்பு என்னும் மாற்று அணியை உருவாக்கியுள்ளோம்.

★ தமிழ்த்தேசியக் விடுதலைக் கூட்டமைப்பை உருவாக்க சக அமைப்புக்களுடன் பேசினோம். பெரும்பாலானோர் உடன்பட்டார்கள். ஓரிருவர் பின்வாங்கினர். போட்டித் தவிர்ப்பு ஒப்பந்தம் ஒன்றைச் செய்துகொள்ள முயற்சித்தோம். அதுவும் கைகூடாமல் போய்விட்டது. எனவே புதிய மாற்று அணியில் அவர்களை இணைத்துக்கொள்ள முடியவில்லை.

★ ஒட்டுமொத்த தமிழ்ச் சமூகத்தையும் உள்ளடக்கிய ஐக்கிய முன்னணிக்கான ஒரு அத்திவாரம் இடப்பட்டுள்ளது.

★ உதயசூரியன் சின்னத்தை தமிழ் மக்களின் பொதுவான சின்னமாக நாம் ஏற்றுள்ளோம்.

★ அரசியல் தீர்மானங்களை ஒருமித்த கருத்துடன் எடுக்கும் பொருட்டு, உயர்மட்ட அரசியல் குழுவொன்றை நியமித்துள்ளோம்.

★ எதிர்காலத்தில் சகல தமிழர் தரப்பையும் இக்கூட்டமைப்பில் இணைத்துக்கொண்டு ஒரு வலுமிக்க தமிழர் தரப்பாக செயற்படுவோம்.

★ தேர்தலுக்குப் பின்னர் அனைவரும் ஒன்றிணைவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

★ தமிழ் மக்களின் எதிர்காலம் எவ்வாறு இருக்க வேண்டும், வடக்கு-கிழக்கை எவ்வாறு செல்வம் கொழிக்கும் பூமியாக அபிவிருத்தி செய்ய வேண்டும் என்ற கனவுகளுடன் களமாடுபவர்கள் நாம்.

★ அந்தக் கனவுகளை நனவாக்க மாற்று அணி மிக முக்கியமானது என்பதை உணர்ந்து அதனை உருவாக்க விடாமுயற்சியுடன் கலந்துரையாடல்களில் ஈடுபட்டுள்ளோம்.

★ 40 ஆண்டுகால எமது அனுபவங்கள் இளைஞர்களுக்கு ஒரு உந்துசக்தியாக இருக்கும் என்று நம்புகிறோம். நவீன உலகில் கிராமங்களின் வளர்ச்சிக்கேற்ப எமது கிராமங்களையும் அபிவிருத்தி செய்ய எண்ணியுள்ளோம்.

★ கிராமிய பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பி, ஏற்றுமதியை ஊக்குவிக்கும் திட்டங்களை வகுத்து உற்பத்தியைப் பெருக்கி, உட்கட்டமைப்புகளை அபிவிருத்தி செய்து நகர்ப்புற நெரிசலைக் குறைத்து கிராமங்களை வளம் கொழிக்கும் பிரதேசமாக மாற்ற எண்ணியுள்ளோம்.

★ எனவே தென்னிலங்கை ஆளும் கட்சிகள், அந்தக் கட்சிகளின் பங்காளிகள், சில சுயேட்சைகள், தனிவழி செல்வோர் என்பவர்களைப் புறந்தள்ளி புதிய மாற்றத்திற்கான எமது பொதுச்சின்னமான உதயசூரியன் சின்னத்திற்கு வாக்களித்து வடக்கு-கிழக்கெங்கும் அவர்களை அதிகூடிய பெரும்பான்மையுடன் வெல்ல வைக்குமாறு அன்புடனும் உரிமையுடனும் தாழ்மையுடனும் வேண்டுகின்றேன்.

★ அனைவரும் வாக்களிப்பில் கலந்து கொள்ளுங்கள்.
உதய சூரியனுக்கு வாக்களியுங்கள்

தமிழர் விடுதலைக் கூட்டணி



X

தமிழ்த்தேசிய விடுதலைக் கூட்டமைப்பு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலைக்கதிர் Kalaikkathir



## நவீன மருத்துவத்தால்

# புற்றுநோயை குணப்படுத்த வழிவகைகள் உண்டு

செல்வந்த நாடுகளின் நோய் என்று ஒரு காலத்தில் கருதப்பட்டு வந்த புற்று நோய் இன்று உலகில் அனைத்து நாடுகளையும் மிகமோசமாக ஆக்கிரமிக்கத் தொடங்கியுள்ளது. 2012இல் எடுக்கப்பட்ட புள்ளி விவரத்தின்படி உலகெங்கும் ஒரு கோடியே 41 லட்சம் பேர் புற்றுநோயால் பாதிக்கப்பட்டுள்ளனர். 82 லட்சம் பேர் புற்று நோயால் மரணமடைகின்றனர். 3 கோடியே 26 லட்சம் நோயாளிகள் புற்று நோயால் பாதிக்கப்பட்டு 5 வருடங்களாக சிகிச்சை பெற்று வருகிறார்கள்.

சர்வதேச ரீதியில் உலக புற்று நோய் தினம் ஒவ்வொரு வருடமும் பெப்ரவரி 04 ஆம் திகதி அனுஷ்டிக்கப்படுகின்றது. 2014 ஆம் ஆண்டுக்கான இத்தினத்தின் தொனிப்பொருள், மாயத்திரையை அகற்றி உண்மையைப் பாருங்கள் என்பதாகும். புற்றுநோய் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்த இந்த நாள் மருத்துவ உலகில் மிக முக்கியமான தினமாக பார்க்கப்படுகின்றது. புற்றுநோய் விழிப்புணர்வு நோய் பற்றிய முழு தகவல்களையும் தருவது, புற்றுநோய் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவது ஆகியவை இத்தினத்தின் எதிர்பார்ப்பாகும்.

இத்தினத்தை உலக புற்று நோய் கட்டுப்படுத்துதல் கூட்டமைப்பு (Union for International Cancer Control, UIIC) முன்னின்று நடத்துகிறது. இந்த புற்று நோய் தினம் 1933ஆம் ஆண்டு ஜெனீவா நகரில் உலக புற்று நோய் மையத்தின் மூலமாக (WICC) ஏற்படுத்தப்பட்டது. கட்டுப்பாடற்று செல்கள் பெருகுவதே புற்று நோய் புற்றுநோய் என்பது (Cancer) கட்டுப்பாடற்று கலங்கள் (செல்கள்) பிரிந்து பெருகுவதால் ஏற்படும் நோய் ஆகும்.

இந்தக் கலங்கள் பிரிந்து பரவி ஏனைய தசைகளையும் தாக்குகின்றன. முதிர்ச்சியடைந்த நிலையில் இந்த புற்றுக்கலங்கள் குருதியின் வழியாகப் பரவுகின்றன. புற்று நோய் எந்த வயதினரையும் தாக்கும், எனினும் வயது கூடக்கூட புற்றுநோய் தாக்கும் வாய்ப்பும் அதிகரிக்கிறது.

புற்றுநோய் எவ்வாறு ஏற்படுகின்றது என்பதைச் சுருக்கமாக நோக்குவோமாயின் கலங்களின் வளர்ச்சி மற்றும் இறப்பினை கட்டுப்படுத்தும் மரபிகளில் ஏற்படும் மாற்றத்தால் புற்றுநோய் ஏற்படுகிறது.

புகைப்பழக்கம், சில உணவுகள், சூரியனின்று வெளிப்படும் புறஊதாக் கதிர்கள், புற்றுநோய் ஏற்படும் வாய்ப்புள்ள பணிகளில் ஈடுபடுதல், எச்.ஐ.வி. நோய்தொற்று, சில வேளைகளில் பெற்றோரிடமிருந்து பிள்ளைகளுக்கு வரலாம்.

### அறிகுறிகள்

புற்று நோய் தொடர்பான அறிகுறிகளில் சில உடலில் உள்ள உறுப்புகளில் ஒருவித தடிப்பு மற்றும் வீக்கம், உடலில் உள்ள மச்சத்தில் ஏற்படும் மாற்றங்கள், ஆறாத புண்கள், தொடர்இருமல் மற்றும் கரகரப்பான கம்மிய குரல், மலம் மற்றும் சிறுநீர் கழிக்கும் நேரத்தில் மாற்றம், தொடர்ந்த அஜீரணம் மற்றும் உணவை விழுங்குவதில் பிரச்சினை ஏற்படுதல், உடல் எடையில் மாற்றம், இயல்புக்கு மாறான ரத்தபோக்கு மற்றும் ரத்தக் கசிவு, நோயின் தன்மைக்கேற்ப அறிகுறிகள் மாற்றமடையலாம்.

### மரணத்தைத் தள்ளிப் போடலாம்

புற்றுநோய் தவிர்க்கப்பட முடியாத போதிலும் சரியான நேரத்தில் உரிய சிகிச்சை முறையை ஆரம்பிப்பதன் மூலம் மரணத்தை தள்ளிப்போட முடியும். ஆகையினால், புற்றுநோய்க்கு ஆளான ஒருவர் இனிமேல் தன்னால் எதுவுமே செய்ய இயலாது என்ற எண்ணத்தை கைவிட வேண்டும்.

சரியான விழிப்புணர்வு மற்றும் தெளிவான திட்டமிடல் இருந்தால் புற்று நோய்களிலிருந்து மக்கள் தம்மை பாதுகாத்துக்கொள்ள முடியும். புற்றுநோய்களில் 30 சதவீதத்துக்கும் மேற்பட்டவை சாதாரண நடவடிக்கைகள் மூலம் தடுக்கப்படக் கூடிய வையாகவேயுள்ளன. புகைபிடிப்பதை தவிர்த்தல், ஆரோக்கியமான உணவு, உடற்பயிற்சி, மதுப் பழக்கத்தை, போதைப் பொருள்களை தவிர்த்தல் போன்ற அடிப்படை விடயங்களின் மூலம் புற்றுநோய் ஏற்படுவதை தடுத்து விட முடியும். அதிகரிக்கும் நோயாளிகள் இலங்கையில் புற்றுநோயாளர்களின் எண்ணிக்கை வேகமாக அதிகரித்து வருகின்றது. இதன்படி வருடாந்தம் புற்றுநோய் சிகிச்சைகளுக்காக 25 ஆயிரம் பேர் புதிதாக தம்மை பதிவு செய்து கொள்கின்றனர் என சுகாதார கல்வி பணியகம் தெரிவித்தது. இவர்களுள் ஆண்டு தோறும் சுமார் 10 ஆயிரம் பேர் புற்றுநோயால் உயிரிழந்து வருகின்றனர் என்றும் பணியகத்தின் வைத்திய அதிகாரிகள் கூறியுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதேவேளை, புற்றுநோய்க்கு உள்ளானவர்கள் இறுதிக் கட்டத்தில் சிகிச்சைக்காக வைத்தியர் களை நாடி வருவதே வைத்தியசாலை களிலிருந்து தமக்கு கிடைக்கும் பொதுவான முறைப்பாடு எனவும் வைத்தியர்கள் தெரி வித்துள்ளனர்.

### நவீன சிகிச்சை முறைகள்

தொழில்நுட்ப வசதிகளுடன் கூடிய நவீன சிகிச்சை முறைகள் இலங்கையிலும் அறிமுகப் படுத்தப்பட்டிருப்பதனால் எம்மால் நோயாளிகளை முன்னரை விடவும் அதிகமாகவே குணப்படுத்த முடியுமெனவும் வைத்தியர்கள் நம்பிக்கை தெரிவித்துள்ளனர்.

மீண்டும் பழைய தோற்றத்தைப் பெறலாம் சிகிச்சையின்போது ஏற்படக் கூடிய உருவ மாற்றம், தலை மயிர் கொட்டுதல், உடல் இளைத்தல் ஆகிய அனைத்தும் தற்காலிகமானவையேயாகும். குறுகிய காலத்தில் அவர் மீண்டும் பழைய தோற்றத்தைப் பெற்றுக்கொடுக்க முடியும். ஆகையினால் சமூகத்திற்கு வெட்கப்பட அல்லது அஞ்சியோ சிகிச்சைகள் ஆரம்பிப்பதனை காலம் தாழ்த்தவோ அல்லது தவிர்ப்பதோ பிழையான கொள்கையெனவும் புற்று நோய் குணப்படுத்துவதில் நிபுணத்துவம் பெற்ற வைத்தியர்கள் வலியுறுத்தியுள்ளனர். முழுமையான உடற்பரிசோதனை இலங்கையில் 35 வயதிற்கு மேற்பட்ட அனைத்து பெண்களும் தமது பிரதேச செயலகத்திலுள்ள மருத்துவ அதிகாரிகள் அலுவலகத்தில் இலவசமாக முன்னெடுக்கப்படும் முழுமையான உடல் மருத்துவ பரிசோதனைக்கு கட்டாயமாக சமுகமளிக்க வேண்டுமெனவும் வைத்தியர்கள் கேட்டுக்கொண்டுள்ளனர். இதன் மூலம் மார்பக மற்றும் கருப்பை புற்றுநோய்களை தவிர்த்துக்கொள்ள முடியுமெனவும் தெரிவித்தனர்.

### மார்பகப்புற்றுநோய்

பெண்களுக்கு அதிகமாக மார்பக புற்று நோயும், இரண்டாவதாக கர்ப்பப்பை புற்று நோயுமே பெரும் அச்சுறுத்தலாகவுள்ளன. புற்றுநோய் சிகிச்சை நிபுணர் வைத்தியர் ஷிரந்திக்கா வித்தான கருத்து தெரிவிக்கையில், இலங்கையில் வருடந்தோறும் 2 ஆயிரம் பெண்கள் மார்பக புற்றுநோய்க்கு உள்ளாகி வருகின்றனர் என கூறினார்.

மார்பக புற்றுநோய்க்கு உள்ளாவோரில் 470 பேர் வருடந்தோறும் உயிரிழக்கின்றனர் என்றும் சுமார் 12 ஆயிரம் பெண்கள் முறையான சிகிச்சைகளுடன் தொடர்ந்தும் உயிர் வாழ்கின்றனர் என்றும் அவர் கூறினார். 2030 ஆம் ஆண்டளவில் வருடத்திற்கு 4 லட்சத்து 30 ஆயிரம் பேர் கர்ப்பப்பை புற்றுநோயால் உயிரிழக்கலாமெனவும் உலக சுகாதார நிறுவனம் எச்சரித்துள்ளது. இலங்கையைப் பொறுத்தவரை வருடந்தோறும் கர்ப்பப்பை புற்றுநோயினால் பாதிக்கப்பட்ட ஆயிரம் பேர் புதிதாக இனங்காணப்பட்டு வருகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.


மார்பகத்தை அகற்றாமலேயே இக்காலத்தில் நோயின் உண்மையான பரிமாணத்தை அறியவும், அது பரவியுள்ள இடங்களை அறியவும், எம்.ஆர்.ஐ. ஸ்கேன், பெட் ஸ்கேன், எலும்பு ஸ்கேன், மொமோகிராம், சிடி ஸ்கேன் போன்றவை உதவியாக உள்ளன. புற்று நோய் ஓர் உறுப்பை பாதித்துவிட்டால், அந்த உறுப்பை அகற்றாமல், நோயைக் குணப்படுத்துவதே நவீன மருத்துவத் தின் இலக்காகும் நோய் முற்றிய நிலையில் விழிப்புணர்வு புற்று நோயால் பாதிக்கப்பட்டோரில் அரைவாசிக்கும் அதிகமானோர் நோய் முற்றிய நிலையிலேயே தமக்கு புற்றுநோய் இருப்பதை தெரிந்து கொள்கின்றனர். எனவே இது தொடர்பில் மக்களும் கவனம் செலுத்தி தமக்கு ஏற்படும் நோய்களின்போது வித்தியாசமான அறிகுறிகள் தென்பட்டால் கால தாமதம் செய்யாது உடனடியாகவே மருத்துவ மனைகளை நாடவேண்டும்.

புற்றுநோய் குறித்து நாம் சில விடயங்களை நாம் கருத்திற் கொள்வோம். சமூகத்தின் தாக்கம் புற்றுநோய் என்பது சுகாதாரத்துடன் மட்டும் தொடர்புடை விடயம் என நினைக்கிறோம். ஆனால் அது சுகாதாரத்துடன் மட்டுமல்ல, ஒரு சமூகத்தின், ஒரு நாட்டின் அபிவிருத்தியில், மனித உரிமைகளில் என அனைத்திலும் தாக்கம் செலுத்துகிறது. உலகப் பிரச்சினை புற்றுநோய் என்பது உலக பிரச்சினை. அனைத்து வயதினரையும் அனைத்து, சமூக பிரிவுகளையும், அனைத்து நாடுகளையும் அது தாக்குகிறது. புற்றுநோய் என்பதை ஒரு மரண தண்டனையாக சிலர் நினைக்கின்றார்கள். ஆனால் புற்று நோயை முடிந்தளவு குணப்படுத்த முடியும். மூன்றாம் கட்டத்தை கடந்த பின்னர் கூட குணப்படுத்த முடியும் என்கிறது நவீன மருத்துவ சிகிச்சைகள்.

புற்றுநோயை சிலர் என் விதி என நினைக் கின்றார்கள். ஆனால் நீங்கள் போதுமான அறிவையும், விழிப்புணர்வையும் வளர்த் துக்கொண்டால் உலகில் புற்றுநோயை 30 வீதம் தடுத்து விட முடியும் என்பது தான் உண்மை. ஆரோக்கியமாக வாழ பழகுவோம்.

எனவே, இவற்றைக் கருத்தில் கொண்டு புற்றுநோய் ஆரம்ப அறிகுறி இருப்பதாக சந்தேகம் எழுந்தால், எந்தவித அச்சமுமின்றி இன்றே அருகில் உள்ள மருத்துவரை நாடுவோம். எமது சந்தே கங்களைத் தெளிவுப்படுத்திக் கொள்வோம். ஆரோக்கிய மாக வாழ்வதை வாழ்நாள் பழக்கமாகக் கொள்வோம். ★





**ஆரம்ப அறிகுறிகளைக் கண்டவுடன் சிகிச்சை பெற்றால் நலம் பெறலாம்**






காலைக்கதிர்
Kalaikkathir



# உன்னைச் சரணடைந்தேன்

தமிழர் நாடறிந்த இலக்கியச் செம்மல் கம்பவாரிதி இலங்கை ஜெயராஜ். கம்பன் என்றால் ஜெயராஜ் என்று எண்ணுமளவுக்கு இலக்கியக் கம்பனாய் உருவெடுத்தவர் அவர். அவருடைய இலக்கிய அனுபவத் தொகுப்பு இங்கு தினசரி தொடராகப் பிரசுரமாகின்றது. ‘உன்னைச் சரணடைந்தேன்’ என்ற அவரது தொகுப்பில் ‘யாழில் கம்பன்’ பற்றிய தொடர் பதிவு இது.



## கம்பவாரிதி ஜெயராஜின் இலக்கிய அனுபவப் பகிர்வு 87



மேல் மாடி திறப்பு விழா

## உதயன் சரவணபவன்

### தந்தை இறந்த மறுநாளே சரவணபவனுக்காக கொழும்பு சென்றேன்


சரவணபவனுக்கும் எமக்குமான தொடர்பின் நெருக்கத்தை உரைக்க, ஒரு செய்தியை இங்கு பதிவாக்க விரும்புகிறேன். சரவணபவனின் வேண்டுகோளுக்கிணங்கி, கொழும்பில் நடந்த அவர்களது ‘ஷப்ரா’ நிதி நிறுவனத்தின் விளம்பர நிகழ்ச்சி ஒன்றில்பட்டிமண்டபத்தினை நடத்த சம்மதித்திருந்தேன். அந்நிகழ்ச்சிக்கு இரண்டு நாட்களின் முன் என் தந்தை மறைந்தார். எனது தந்தையின் ஈமக்கிரியைகளை நானே செய்ய வேண்டியிருந்தது. மறுநாளே சரவணபவனின் கொழும்பு நிகழ்ச்சி. அவர் என்னிடம் எதுவும் கேட்க முடியாமல், சங்கடப்பட்டதை உணர்ந்து என் தாயிடம் அனுமதி பெற்று, தந்தையின் இறுதிக் கிரியைகளுக்கு அடுத்த நாளே அவருக்காக கொழும்பு சென்று பட்டிமண்டபத்தை நடத்திக் கொடுத்தேன். தந்தை இறந்த செய்தியை மேடையில் வெளிப்படுத்தாமலே, அந்நிகழ்ச்சியை நடத்தினோம். நிகழ்ச்சி முடிந்த பின்பு செய்தி தெரியவர, அறிவிப்பாளர் அப்துல் ஹமீத் அதிர்ச்சி அடைந்தார். சபையினரை எழுந்து நிற்கச்செய்து, என் தந்தைக்கு அஞ்சலி செய்ய வைத்தார். திரும்பி வந்த பின்னே என் தந்தையின் மிகுதிக் கிரியைகளைச் செய்தேன்.

★ ★ ★

### கழகத்தை விட்டுக் கொடுக்கவில்லை

நாங்கள் அவரோடு நல்ல தொடர்பில் இருந்தோம். ஆனாலும், அவரது ஆளுமைக்கு முற்றாக அடி பணியவில்லை. அது அவருக்கு, சற்றுக் குறையாக இருந்தது. ஒருமுறை, கம்பன் விழாச் செய்திகளை உதயனுக்குத் தந்த பிறகுதா ன், மற்றைய பத்திரிகைகளுக்குத் தர வேண்டும் என்று என்னை நிர்ப்பந்தித்தார்.உதயன் தொடங்குவதற்கு முன்னமே, கம்பன் கழகம் இயங்கி வருகிறது. அதனால், அப்படிச் செய்ய முடியாது என அவர் கோரிக்கையை மறுத்தேன். நட்பால் எங்கள் பத்திரிகை தான், உங்கள் கழகத்தை வளர்த்து வருகிறது என்று மறைமுகமாக என்னைப் பயமுறுத்தினார். நீங்கள் சொல்வது உண்மை தான். ஆனால், வளரக் கூடிய எம்மைத்தான் உங்கள் பத்திரிகையால் வளர்க்க முடியும் முடிந்தால் வேறொரு கழகத்தை, உங்கள் பத்திரிகையால் வளர்த்துப் பாருங்களேன் என்று, நான் அவருக்குப் பதில் சொன்னேன். அப்போது யாழ். ரவுணிலிருந்த அவர்களது அலுவலகத்தில் இந்த சர்ச்சை நடந்தது. அதன் பின்பும், எங்கள் நட்பு நல்லபடியே தான் தொடர்ந்தது. அவருக்கு ஆட்பட்டவர்களை விட, எங்கள் மேல் தான் அவர் அதிக அன்பும் நட்பும் வைத்திருந்தார்.

★ ★ ★



### சரவணபவன் குமாரதாசனுக்குச் செய்த உதவி

அக்காலத்தில் கழகத்தார் அனைவருடனும், ஓர் குடும்ப நண்பராகவே அவர் இணங்கி நடந்தார். அவர் நடத்திய ‘ஷப்ரா’ நிதி நிறுவனம் அக்காலத்தில் முறிவடைந்தது. குமாரதாசன் என் தங்கையை திருமணம் செய்த போது எங்கள் வீட்டார் சண்டிலிப்பாயில் ஒரு சிறிய வீட்டையும், வெறுமனே ஒரு லட்சம் ரூபாய் பணத்தையுமே கொடுத்திருந்தனர். அந்தப் பணத்தையும் நட்பின் காரணமாக குமாரதாசன் ‘ஷப்ரா’விலேயே போட்டிருந்தார். நிறுவனம் முறிவடைந்ததும் சரவணபவன், குமாரதாசனின் நிலை உணர்ந்து அவர் போட்ட பணத்தை, தனது சொந்தப் பணத்தில் இருந்து பகுதி பகுதியாகக் கொடுத்து முடித்தார்.

★ ★ ★

### கழகமும் - றோட்டறிக் கழகமும்

சரவணபவன் யாழ்ப்பாண றோட்டறி அமைப்பின் தலைவரான போது எங்கள் கழகத்திலிருந்த, திருநந்தகுமார், குமாரதாசன், ரத்தினகுமார் ஆகிய மூவரையும் அவ் அமைப்பில் இணைத்துக் கொண்டார். இத்தனை நெருக்கம் இருந்தாலும், இடையிடை எங்களையும் தனது ஆளுகைக்குள் விழுங்கப்பார்ப்பார். அதற்கு இடம் கொடுக்காமல் நான் நிமிர்ந்தே நின்றேன். அவர்களுக்கு உதயன் பத்திரிகையூடாக, புலிகள் இயக்கத்திலிருந்த செல்வாக்கின் காரணமாக, சரவணபவன் தான் நடத்திய றோட்டறி விழாவிற்கு, தென்பகுதியிலிருந்து ஜானக எதிரிசிங்க, குசில் குணசேகர, சுரேஸ் மல்வானி ஆகிய சிங்கள பிரமுகர்களை அழைத்திருந்தார்.

★ ★ ★

### சிங்கள றோட்டறி உறுப்பினர்களுக்கு நாம் அளித்த விருது

சிங்களவர்கள் எவரும் யாழ் மண்ணுக்கு வர முடியாத காலமது. நாங்கள் தமிழ் மரபை கழகத்தில் நல்லபடி பேணி வந்தோம். அதே நேரத்தில் எனது குடும்பப் பழக்கத்தினால், மேல்நாட்டுப் பாணி விருந்துகளையும் இடையிடையே நடத்துவோம். அந்த வகையில் சரவணபவனின் சிங்கள நண்பர்களையும், எங்கள் கழகத்திற்கு அழைத்து ஓர் காலை விருந்தினை அளித்தோம். புதிதாகக் கட்டப்பட்டிருந்த எங்கள் கம்பன் கழகத்தின் கலை வடிவைக் கண்டும், எங்கள் உபசாரத்தைக் கண்டும் அவர்கள் மகிழ்ந்து போயினர். கழக வரலாற்றோடு பெரிதாய்த் தொடர்பில்லாத இவ் விடயத்தை, முக்கியப்படுத்தி இவ்விடயத்தில் நான்சொல்வதற்கு, ஒரு காரணம் இருக்கிறது. அது பற்றிப் பின் சொல்கிறேன்.

★ ★ ★

### மன முறிவை மன்னித்தோம்

சரவணபவனோடு இருந்த நெருங்கிய தொடர்பு, பின்னாளில் நான் கொழும்பு சென்றதும் சிறிது சிதைந்தது. அக்காலத்தில், சரவணபவன் எங்களை பகைவர்களாகவே கருதிச் செயற்பட்டார். கழகத்தை வீழ்த்த நினைந்து, தனது உதயன் பத்திரிகையூடாக, தர்மம் மீறிய பல செயல்களையும் செய்வித்தார். கொழும்பில் நாங்கள் கட்டிக் கொண்டிருந்த ஆலயத்திற்காக, அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா எம்மைத் தேடி வந்து நிதி உதவி செய்ய, அச் செய்தியை பெரிதுபடுத்தி, ஐந்து லட்சம் ரூபாவிற்காக நாம் அமைச்சரிடம் சரணடைந்து விட்டோம் என்பதாய்ச் செய்தி பரப்பியதோடு, தனது பத்திரிகையில் அமைச்சருக்கு நாம் நன்றி உரைப்பது போல ஒரு முழுப்பக்க விளம்பரத்தை தானே வெளியிட்டு, சட்டப் பிரச்சினை வரக் கூடாது என்பதற்காக, கீழே ‘கம்பன் குடும்பத்தார்’ எனப் போட்டு வஞ்சனை செய்தார். உடன் அது பற்றி, நாம் கடுமையாய்க் கோபித்தாலும்அவர் முன் செய்த உதவிகள், பின் செய்த தீமையை விட அதிகமாய் இருந்ததால், பழைய உறவு பற்றி அவற்றை நாம் மறந்தோம். இன்றும் அவருடனான தொடர்பு நீடிக்கிறது.

### கோட்டத்தின் மேல் மாடி திறப்பு விழாவும், இசை நிகழ்ச்சிகளும்

கம்பன் கோட்டக் கட்டடம், பல கட்டமாகக் கட்டப்பட்டதை முன்னரே சொல்லியிருக்கிறேன். முதலில் அத்திபாரமிடப்பட்டு தளமிடுமளவுக்கு கீழ்க்கட்டடம் ஓரளவு பூர்த்தியானது. இக்காலத்தில் தான் இந்திய இராணு வம் இங்கு முகாமிட்டது. அதன் பின்னர் கழக அன்பர், மனோகரரூபன் அவர்களுடைய துணையால் கீழ்க் கட்டடம் முழுவதும் அழகு படுத்தப்பட்டு முழுமையாய்ப் பூர்த்தியானது. அதன் பின் தான் கம்பன் கழக அலுவலகம் இங்கே இயங்கத் தொடங்கியது. மூன்றாம் கட்டமாக முன் சித்திரக் கதவு வேலை முடிந்து, அதற்கு ஒரு திறப்பு விழாவை நடத்தினோம். நான்காம் கட்டமாக மேல் மாடியை கூரை போடுமளவு கட்டி முடித்தோம். இங்ஙனமாய் நீண்ட கட்டட வேலை கள் இவ்வாண்டிலே தான் பூர்த்தியாயின. (1995) இக் காலத்தில்தான் கட்டடத்தின் மேல் மண்டபத்தை, முழுமை யாய்க் கட்டி முடித்தோம். கம்பன் கழகத்தின் ஆதரவாளனாய் இருந்த கணேசராஜா என்பவர், மண்டபத்தின் உள்ளே ‘சீற்’ முதலியவை அடித்து, வேலையைப் பூரணமாக்கித் தந்தார். எங்களுடைய நண்பர் சிவஞானம் அண்ணன், கொழும்பிலிருந்து கடல் வழியாக படகில், நிலத்தில் பதிக்கவென, மாபிள்கள் கொண்டு வந்து தந்தார். மேல் மண்டபம் அழகுறப் பூர்த்தியானது. மேல் வேலைகள் பூர்த்தியானதும், மேல் மாடியை தனியாகத் திறந்து வைத்தோம். மாநகர சபை முன்னாள் ஆணையாளர் சீ.வி.கே.சிவஞானம், மண்டபத்தைத் திறந்து வைத்தார்.

★ ★ ★

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத் தமிழருக்கு எதிராக 70 வருடங்களாக நீடிக்கும் ஒடுக்குமுறை குறித்து இத்தாலியில் சர்வதேச மாநாடு



'சிறீலங்காவில் எழுபது வருடங்களாக ஒடுக்குமுறைக்கு உள்ளாகும் ஈழத் தமிழர்கள்' சர்வதேச மாநாடு இத்தாலியின் நாடாளுமன்ற வளாகத்தை அண்மித்து அமைந்துள்ள 'தேசிய விடுதி றோமா'வில் இன்று நடைபெறவிருக்கின்றது.

இந்த மாநாட்டை இத்தாலியின் தேசிய கட்டமைப்புகள் மற்றும் இத்தாலிய பொது அமைப்புக்களான 'சர்வதேச மனித உரிமை மையம்' லெச்சே, 'வழக்கறிஞர்கள் ஆணையம்' லெச்சே ஆகிய அமைப்புக்களுடன் இணைந்து அனைத்துலக ஈழத்தமிழர் மக்களவை ஒழுங்கு செய்துள்ளது.

இது தொடர்பில் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு :-

2009 ஆம் ஆண்டு மே 18 இற்குப் பின்னர், தாயக விடுதலையை வென்றெடுப்பதற்கான போராட்ட வடிவம் மாற்றம் அடைந்துள்ள இவ்வேளையில், சிங்கள தேசத்தின் 70 ஆவது சுதந்திர தினம் ஈழத் தமிழர்களைப் பொறுத்தவரை 70 ஆண்டுகால துயர் சுமந்த அடக்குமுறை வாழ்வின் குறியீட்டு நாள் ஆகும்.

இரண்டு தேசிய இனங்கள் அந்த நாட்டில் வாழ்ந்து கொண்டிருக்கின்றன என்பதை மறந்து இன அடக்குமுறையின் ஒரு வெளிப்பாடாக தொடர்ந்து சிறிலங்கா இனவாத அரசால் கொண்டாடப்பட்டுக்கொண்டிருக்கும் சுதந்திர தினத்தை ஒட்டுமொத்த தமிழர்களும் புறக்கணிக்க வேண்டும்.

ஈழத்தமிழ் மக்களின் கறுப்பு நாளாகிய மாசி 4 ஆம் திகதியை முன்னிட்டு இத்தாலி ரோமில் 'சிறீலங்காவில் எழுபது வருடங்களாக ஒடுக்குமுறைக்கு உள்ளாகும் ஈழத்தமிழர்கள்' என்ற தலைப்பில் நடைபெறவிருக்கும் சர்வதேச ஈழத்தமிழர் மாநாடு பெரும் திட்டமிடலுடன் இத்தாலிய அரசியல்வாதிகள் மற்றும் இராசதந்திரிகளை இணைத்து ஏற்பாடாகியுள்ளது.

விடுதலைப் போராட்டத்தில் இத்தாலி வாழ் ஈழத்தமிழரும் தேசியக் கட்டமைப்பு செயற்பாட்டாளர்களும், தங்களால் முடிந்த பெரும் பங்களிப்புகளை செய்துள்ளார்கள். இன்றும் முனைப்புடன் செயற்பட்டுக் கொண்டுள்ளனர். தமிழர்கள் ஒரு தேசமாக அங்கீகரிக்கப்பட்டு அவர்களுக்கான நிரந்தரமானதும் நியாமானதுமான தீர்வு கிடைக்கும் வரை புலத்திலும் சரி களத்திலும்சரி எமது ஜனநாயகப் போராட்டம் தொடரும்.

அந்த வகையில் இன்று திங்கட்கிழமை 'இத்தாலியின் இதயம்' என்றழைக்கப்படும் நாடாளுமன்ற வளாகத்தை அண்மித்து அமைந்துள்ள 'தேசிய விடுதி றோமா'வில் இத்தாலியில் பலமாக இயங்கிவரும் மிகப்பெரிய தேசிய கட்டமைப்புகள் மற்றும் இத்தாலிய பொது அமைப்புக்களான 'சர்வதேச மனித உரிமை மையம்' லெச்சே, 'வழக்கறிஞர்கள் ஆணையம்' லெச்சே ஆகிய அமைப்புக்களுடன் இணைந்து இந்த சர்வதேச ஈழத்தமிழர் மாநாட்டை நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இம்மாநாட்டிற்கு இத்தாலிய நாடாளுமன்ற உறுப்பினர்கள், பத்திரிகையாளர்கள் அரச மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்கள், சட்டத்தரணிகள், பேராசிரியர்கள் கலந்துகொண்டு சிறப்புரை ஆற்றுகின்றமையோடு தீர்மானங்களையும் நிறைவேற்ற உள்ளனர்.

மாநாட்டை முன்னாள் ஐரோப்பிய நாடாளுமன்ற சபையின், இத்தாலிய நாடாளுமன்ற பிரதிநிதியும், நாடாளுமன்ற ஆணைக்குழு உறுப்பினரும், இத்தாலிய குடியரசின் 17 ஆவது சட்டமன்ற செனற்சபை உறுப்பினருமான MASSIMO CERVELLINI அவர்களும் மற்றும் மனித உரிமை சட்டத்தரணியும், எழுத்தாளரும், இத்தாலி சர்வதேச மனித உரிமை மைய அமைப்பின் தலைவருமான CASTRIGNANO COSIMO ஆகிய இருவரும் ஆரம்பித்து வைக்க உள்ளார்கள். மாநாட்டில் ஆராயப்படும் முக்கிய நோக்கங்கள் பின்வருமாறு:-

* 70 ஆண்டுகளாக அடக்குமுறைக்கு உள்ளாகும் ஈழத்தமிழர்.
* சிறிலங்காவின் புதிய அரசமைப்பினால் தமிழர்களுக்கு ஏற்படும் பாதிப்பு.
* சர்வதேசத்தைத் தொடர்ந்தும் ஏமாற்றும் சிறீலங்கா இனவழிப்பு அரசு.
* இத்தாலி குடியுரிமை இல்லாத ஈழத்தமிழ் மக்களை 'சிங்களேச' என்று அடையாளப்படுத்துவதை இத்தாலி குடிவரவு, குடியகல்வுப் பிரிவு நிறுத்த வேண்டும்.
* தொடரும் இனவழிப்பும் காணி அபகரிப்பும்.
* காணாமல் ஆக்கப்பட்டோர், அரசியல் கைதிகள் விடுதலை.
* பெண்கள் மீதான பாலியல் வன்கொடுமைகள்.
* சிங்களவர்கள் வாழாத இடங்களில் பௌத்த சிலைகள்.

எமது தாயகம் இராணுவ ஆக்கிரமிப்பிற்கு உட்பட்டு, தமிழ் மக்களின் குரல்வளை நெரிக்கப்பட்டுக் கொண்டு இருக்கும் இவ்வேளையில், எம்தேச விடுதலையை வென்றெடுப்பதில், ஒவ்வொரு ஈழத்தமிழரும் உறுதியாக உள்ளோம் என்பதனை நல்லிணக்கம் என்ற பசுத்தோலைப் போர்த்திய சிறிலங்கா பயங்கரவாத அரசிற்கும், இனவழிப்பிற்கு ஒத்தாசையாக இருந்த சர்வதேசத்திற்கும் நாம் ஒன்றுபட்டு இம்மாநாட்டின் ஊடாக இடித்துரைப்போம். புலம்பெயர் தேசங்களில் வாழுகின்ற தமிழ் மக்களும் ஒன்றிணைந்து தத்தம் நாடுகளில் நடைபெறுகின்ற இப்படியான நிகழ்வுகளுக்கு தமது பூரண ஒத்துழைப்பை வழங்கி எமது விடுதலைப் போராட்டத்திற்கு உறுதுணையாகநின்று மேலும் வலுச்சேர்க்க வேண்டுமெனவும் இம்மாநாட்டின் ஊடாகக் கேட்டுக்கொள்கின்றோம் என்றுள்ளது. (உ)

# டுபாய் விமான நிலையத்தில் உதயங்க வீரதுங்க கைதானார்!



ரஷ்யாவுக்கான இலங்கையின் முன்னாள் தூதுவர் உதயங்க வீரதுங்க டுபாய் விமான நிலையத்தில் வைத்து விசாரணைக்கு உட்படுத்தப்பட்டதன் பின்னர் கைதுசெய்யப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

அமெரிக்காவுக்குச் செல்லும் வழியில் அவர் பயணம் செய்த விமானம் டுபாயில் தரையிறங்கியிருந்தது. அவ்வேளையிலேயே அவர் கைது செய்யப்பட்டார் எனக் கூறப்படுகின்றது.

இவர் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் நெருங்கிய உறவினராவார். இவர் மீது பல்வேறு குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளன. உக்ரைன் போராளிகளுக்கு ஆயுதங்களை வழங்கியமை, ரஷ்ய தூதரகத்தில் இடம் பெற்றதாகக் கூறப்படும் இரு மர்ம மரணங்கள் என்பவற்றிலும் இவர் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

அத்துடன், உதயங்க வீரதுங்கவுக்கு வழங்கப்பட்ட இராஜதந்திர கடவுச்சீட்டை இவர் இன்னும் பயன்படுத்தி வருகிறார் என்றும் இவருக்கு எதிராக குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

இலங்கை விமானப்படைக்கு மிக் விமானம் கொள்வனவு செய்தது தொடர்பில் இடம்பெற்றதாகக் கூறப்படும் மோசடியிலும் இவர் சம்பந்தப்பட்டுள்ளார் என்றும் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலைக்கதிர்















யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் அண்மையில் பாரதி விழா நடைபெற்ற போது பிரதம அதிதியாக மேல் மாகாண ஆளுநர் சிறப்பு அதிதியாக இந்திய உதவித் தூதுவர் ஏ.நடராஜன் மற்றும் மலேசியா, இந்திய தமிழ் அறிஞர்களும் கலந்து கொண்டனர். நிகழ்வில் யாழ். பல்கலைக்கழக பேராசிரியர்கள் கௌரவிக்கப்பட்டனர். (இ-19)





யாழ். பெண்கள் அபிவிருத்தி மையம் யாழ். முஸ்லிம் கல்லூரி வீதியில் அமைந்துள்ள யாழ். மாநகர சபையின் சுகாதாரப் பணிமனையில் அண்மையில் பாரம்பரிய உணவுகளின் கண்காட்சி சுகாதார வைத்திய அதிகாரி தலைமையில் இடம்பெற்றபோது.. (இ-19)





யாழ். வைத்தீஸ்வராக் கல்லூரியின் மாதாந்த பழைய மாணவர் சங்கத்தின் கூட்டம் அதிபர் வாசுகி தவபாலன் தலைமையில் நடைபெற்ற போது கனடா பழைய மாணவர் சங்கத்தின் பிரதித் தலைவர் சி.அகிலன், லண்டன் பழைய மாணவர் சங்கத்தின் பொருளாளர் மா.பாலச்சந்திரன் மற்றும் செயலாளர் மு.ஜெகதீசனும் ஏனைய உறுப்பினர்களும் கலந்துகொண்டனர். (இ-19)







தமிழ்க் கூட்டமைப்பின் கூட்டம் யாழ். அராலி வீதி நாலாம் குறுக்கில் வடமாகாண சபை உறுப்பினர் ஐ.அஸ்மின் தலைமையில் இடம்பெற்ற போது 13 ஆம் வட்டார வேட்பாளர்களான ஏ.ஜி.எம். நவ்பர், 10 ஆம் வட்டார வேட்பாளர் மு. நிபாஹிர் மற்றும் வடமாகாண சபை உறுப்பினர்களும் கலந்து கொண்டனர். (இ-19)







யாழ். வைத்தீஸ்வராக் கல்லூரியின் இல்ல மெய்வன்மைப் போட்டி அதிபர் திருமதி வாசுகி தவபாலன் தலைமையில் இடம்பெற்றபோது கல்வி அமைச்சின் செயற்றிட்டப் பணிப்பாளர் க.பத்மானந்தன், பழைய மாணவர் சங்க லண்டன், கனடா கிளை உறுப்பினர்களான மா.பாலச்சந்திரன், சி.அகிலன், மா.சுரேந்திரா மற்றும் தாய் சங்கத்தின் நிர்வாக சபையினரும் நிகழ்வில் கலந்து கொண்டு மாணவர்களுக்கு பரிசுகளை வழங்கினார்கள். (இ-19)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலைக்கதிர்



# கொல்கத்தாவில் கலவரம்: 5 பஸ்கள் எரிப்பு



கொல்கத்தா,பெப்.05

கொல்கத்தாவில் ஏற்பட்ட கலவரத்தில் 5 பஸ்கள் தீக்கிரையாக்கப்பட்டன.

மேற்கு வங்க மாநிலத்தின் தலைநகரான கொல்கத்தாவில், இ.எம். புறவழிச்சாலையில் நேற்றுமுன் தினம் காலை போக்குவரத்து விதிகளை மதிக்காமல் அதிவேகமாகச் சென்ற ஓர் அரச பஸ் மோதியதில் கல்லூரி மாணவர்கள் இருவர் பலியாகினர்.

இதனால் ஆத்திரம் அடைந்த உள்ளூர் மக்கள் ஒன்று கூடி அந்த வழியே சென்ற பஸ்களைத் தீ வைத்துக் கொளுத்தினர். கலவரத்தில் ஈடுபட்டவர்களை அடக்க உடனே அதிரடிப் பொலிஸ் படையினர் குவிக்கப்பட்டனர். அவர்கள் மீது மக்கள் கற்களையும், செங்கற்களையும் வீசித் தாக்கினர். இதில் பொலிஸார், பெண்கள் எனப் பலரும் காயம் அடைந்தனர்.

கலவரத்தில் 5 பஸ்கள் எரிக்கப்பட்டன. கலவரம் தொடர்பாக யாரும் கைது செய்யப்படவில்லை. விபத்து ஏற்படுத்திய அரசு பஸ் ஓட்டுநர் கைது செய்யப்பட்டார்.

தற்போது அங்கு நிலைமை கட்டுக்குள் கொண்டுவரப்பட்டு உள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

## ஒரே சமயத்தில் 2,500 பேருக்கு மருதாணி இட்டு உலக சாதனை




சூரத்,,பெப்.05

குஜராத்தில் ஒரே சமயத்தில் 2ஆயிரத்து 500 பேருக்கு மருதாணிஇட்டு உலக சாதனை படைக்கப்பட்டுள்ளது.

குஜராத்தில் இன்று பிரம்மாண்டதிருமண நிகழ்ச்சிநடைபெறவுள்ளது. இதற்காக மருதாணி இடும் நிகழ்ச்சி நேற்று சூரத்தில் நடைபெற்றது. இதில் 2ஆயிரத்து 500 பெண்கள் ஒரே சமயத்தில் 2 ஆயிரத்து 500பேருக்கு மெகந்தி இட்டு சாதனையை நிகழ்த்தியுள்ளனர். கின்னஸ் உலக சாதனைக்காக இந்த முயற்சி மேற்கொள்ளப் பட்டுள்ளது எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## பாகிஸ்தான் ஒரு முறை சுட்டால் பதிலடியாகப் பலமுறை சுடுங்கள்

### ராஜ்நாத் சிங் பேச்சு



அகர்தலா,பெப்.05

பாகிஸ்தான்படையினர்ஒருமுறை சுட்டால் அவர்களைக் கணக்கற்ற முறையில் சுட்டுத் தள்ளுங்கள் என உத்தரவிட்டு உள்ளேன் என திரிபுரா தேர்தல் பிரசாரத்தில் ராஜ்நாத் சிங் பேசியுள்ளார்.

60 தொகுதிகள் கொண்ட திரிபுராவில் வருகிற பெப்ரவரி 18ஆம் திகதி சட்டசபைத் தேர்தல் நடைபெறவுள்ளது. இதற்காக பர்ஜாலா பகுதியில் நடந்த தேர்தல் பிரசாரத்தில் மத்திய உள்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் கலந்து கொண்டார். அவர் பிரசாரத்தின்பொழுது பேசுகையில், பாகிஸ்தான் மீது முதலில் தாக்குதல் நடத்த நாம் விரும்பவில்லை.

நமது அண்டை நாடுகளுடன் அமைதி மற்றும் நல்லிணக்கத்துடன் வாழவே நாம் விரும்புகிறோம். ஆனால் துரதிஷ்டமான முறையில், ஜம்மு மற்றும் காஷ்மீரைத் தாக்கப் பாகிஸ்தான் முயற்சித்துக் கொண்டு இருக்கின்றது. நமது படைகள் மற்றும்இந்திய எல்லைகள்மீதுதொடர்ந்து தாக்குதல் நடத்தி வருகிறது

எல்லையைக் கடந்து பாகிஸ்தான் படையினர் ஒரு முறை சுட்டால் அவர்களை நோக்கிப் பதிலடியாக கணக்கற்ற முறையில் சுட்டுத் தள்ளுங்கள் எனப் பாதுகாப்புப் படையினருக்கு உத்தரவிடப்பட்டுள்ளது என்று அவர் தெரிவித்துள்ளார். (ப)

## பாகிஸ்தான் ஆயுத பயிற்சி பெற்ற இரண்டு பயங்கரவாதிகள் கைது

பாகிஸ்தானில் ஆயுதப் பயிற்சி பெற்ற ஜம்மு காஷ்மீரைச் சேர்ந்த 2 பயங்கரவாதிகளைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

பாகிஸ்தான் தலைநகர் இஸ்லாமாபாத் அருகே உள்ள பர்மாடவுன் என்ற இடத்தில் இளைஞர்களுக்கு ஆயுதப் பயிற்சி அளித்து அவர்களை அதிபயங்கர பயங்கரவாதிகளாக மாற்றும் முகாம்கள் இயங்குகின்றன.

குறிப்பாக, லஷ்கர் இ தொய்பா இயக்கம் இந்தச் செயலில் ஈடுபட்டு வருகின்றது. பயங்கரவாத செயல்களுக்காக பயிற்சி அளிக்கும் இத்தகைய முகாம்களில், ஏராளமான இளைஞர்கள், சிறுவர்கள் பயிற்சி பெற்று வருகின்றனர். ஆக்கிரமிப்புக் காஷ்மீர் பகுதியைச் சேர்ந்த பெரும்பாலான இளைஞர்கள், இந்தப் பயிற்சி முகாமில் உள்ளனர் எனவும் கூறப்படுகிறது.

இந்த நிலையில், இந்த முகாம்களில் சேர்ந்து பயங்கரவாதப் பயிற்சி பெற்று, வாகா எல்லைப்பகுதி வழியாக காஷ்மீர் மாநிலத்துக்கு திரும்பிவந்த இரு இந்தியர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

விசாரணையில் கைது செய்யப்பட்ட இரண்டு பேருக்கும் பாகிஸ்தான், உரிய விசா வழங்கியுள்ள அதிர்ச்சித் தகவல் வெளியாகியுள்ளது. தொடர்ந்து பொலிஸார் விசாரணையை முடுக்கியுள்ளனர்..



## பசுவதைத் தடைப் பிரேரணை வாபஸ்

### சுப்பிரமணியசாமி அறிவிப்பு



பசுவதையைத் தடை செய்யக் கோரும் தனிநபர் பிரேரணையை நாடாளுமன்ற மாநிலங்களவையில் பா. ஜனதா உறுப்பினர் சுப்பிரமணியசாமி தாக்கல் செய்திருந்தார். அந்தப் பிரேரணை மீது காரசாரவிவாதம் நடைபெற்றது.

அப்போது, மத்திய வேளாண் துறை அமைச்சர் ராதா மோகன்சிங் குறுக்கிட்டு, பசு பாதுகாப்புக்காக கடந்த மூன்றரை ஆண்டுகளில் மத்திய அரசு எண்ணற்ற நடவடிக்கைகளை எடுத்துள்ளது. எங்கள் பயணம் அதை நோக்கித்தான் இருக்கிறது. ஆகவே, இந்தப் பிரேரணையை வாபஸ் பெற வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

அதற்கு சுப்பிரமணியசாமி, அரசுக்கு மற்றொரு வாய்ப்புக் கொடுக்கும் வகையில், இந்தப் பிரேரணையை வாபஸ் பெறுகிறேன். பசுவதை தடைக்கு சட்டம் கொண்டு வருவதுடன், பால் கறக்க இயலாத பசுக்களை பராமரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் தெரிவித்துள்ளார்.

## இந்தியாவில் 4 லட்சம் கோடி ரூபா அந்நிய முதலீடுகள் - மோடி பெருமிதம்

2016 - 17ஆம் ஆண்டு இந்தியாவுக்கு அந்நிய முதலீடாக 4 லட்சம் கோடி ரூபா கிடைத்துள்ளது என மோடி தெரிவித்துள்ளார்.

அசாம் மாநிலம் கவுகாத்தி நகரில் 2 நாள்கள் உலக தொழில் முதலீட்டாளர்கள் மாநாடு இடம்பெற்றது.

இதில் பூட்டான் பிரதமர் ஷெரிங் டோப்காய், அசாம் முதலமைச்சர் சர்பானந்தா சோனோவால், அருணாசல பிரதேசம் மற்றும் மணிப்பூர் மாநில முதலமைச்சர், மத்திய அமைச்சர்கள், 16 நாடுகளின் தூதரக அதிகாரிகள் மற்றும் பிரபல தொழில் அதிபர்கள் கலந்து கொண்டனர்.

மாநாட்டை ஆரம்பித்து வைத்து மோடி பேசியவை வருமாறு:-

8 வடக்குக் கிழக்கு மாநிலங்களும் அஷ்டலட்சுமிகள் ஆகும். இந்த மாநிலங்கள் அனைத்தும் புதிய இந்தியாவின் வளர்ச்சிக்கான புதிய இயந்திரமாக இருக்கும்.

நாட்டின் அனைத்துத் துறைகளும், அனைத்து பகுதிகளும் சீரான வளர்ச்சி கண்டால்தான் இந்தியா முழுமையாக வளர்ச்சி பெற்றதாக அர்த்தம். இதனால்தான் கிழக்குக் கொள்கையை நாங்கள் உருவாக்கி இருக்கிறோம். இதில் கிழக்காசிய நாடுகள் இந்தியாவின் கிழக்கு மாநில மக்களோடு தொடர்பு, வர்த்தகம், நட்புறவு மேற்கொள்வதற்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது.



2016 - 17ஆம் ஆண்டில் மட்டும் இந்தியாவுக்கு மிக அதிக பட்சமாக 60 பில்லியன் அமெரிக்க டொலர்கள் (சுமார் 4 லட்சம் கோடி ரூபா) அந்நிய நேரடி முதலீடு வந்துள்ளது. அனைத்துத் திட்டங்களும் இலக்கு காலத்திற்குள் நிறைவேற்றப்படும் என்றும் தெரிவித்துள்ளார்.

## காஷ்மீரில் பயங்கரவாதிகள் தாக்கு



2 வீரர்கள் படுகாயம்

ஜம்மு காஷ்மீர் புல்வாமா மாவட்டத்தில் பாதுகாப்புப் படை வீரர்கள் மீது பயங்கரவாதிகள் குண்டு வீசித் தாக்குதல் நடத்தியதில் 2 வீரர்கள் படுகாயம் அடைந்தனர்.

ஜம்மு காஷ்மீர் மாநிலம் புல்வாமா மாவட்டத்தில் உள்ள தர்ல் அருகே உள்ள கிராமத்தில் மத்திய பாதுகாப்புப் படை வீரர்கள் ரோந்துப் பணியில் ஈடுபட்டுக்கொண்டிருந்தனர். அப்போது திடீரெனப் பாதுகாப்புப் படைவீரர்கள் மீது பயங்கரவாதிகள் கையெறி குண்டுகளை வீசித் தாக்குதல் நடத்தினர்.

இதில் 2 பாதுகாப்பு வீரர்கள், பொது மக்கள் 2 பேர் படுகாயம் அடைந்தனர். இதனையடுத்து அங்கு பாதுகாப்பு வீரர்கள் குவிக்கப்பட்டு தேடுதல் முடுக்கி விடப்பட்டுள்ளது.

(ப)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிரியாவில் ரஷ்ய விமானத்தை சுட்டு வீழ்த்திய கிளர்ச்சியாளர்கள்



விமானி சாவு

அம்மான்,பெப்.05

சிரியாவில் ரஷ்யா இராணுவ விமானத்தைக் கிளர்ச்சியாளர்கள் சுட்டு வீழ்த்தியதில் அதன் விமானி உயிரிழந்துள்ளார் எனத் தகவல் வெளியாகியுள்ளது.

சிரியாவில் கடந்த 6 ஆண்டுகளுக்கும் மேலாக உள்நாட்டுப் போர் நடைபெற்று வருகிறது. அதிபர் பசார் - அல் - அசாத்துக்கு எதிராகக் கிளர்ச்சியாளர்கள் போராட்டம் நடத்தி வருகின்றனர்.

இந்த நிலையில், நேற்றுமுன்தினம் இத்லிப் மாகாணத்தின் வடமேற்கு பகுதியில் உள்ள சாராகூப் நகரில் உள்ள கிளர்ச்சியாளர்களைக் குறிவைத்துத் தாக்குதல் நடத்துவதற்காக ரஷ்யாவின் போர் விமானம் ஒன்று பறந்தது. இதையடுத்துக் கிளர்ச்சியாளர்கள் விமான எதிர்ப்பு ஏவுகணை மூலம் அந்தப் போர் விமானத்தைத் தாக்கியுள்ளனர்.

இந்தத் தாக்குதலில் ரஷ்யாவின் போர் விமானம் சுட்டு வீழ்த்தப்பட்டது எனவும், அதிலிருந்த விமானி பலியானார் எனவும் கிளர்ச்சியாளர்கள் வெளியிட்ட செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளனர்.

## நாசாவின் சந்திர கிரகண வீடியோ: பதிவானவை பறக்கும் தட்டுகளா?



வொஷிங்டன்,பெப்.05

152 ஆண்டுகளுக்குப் பிறகு நிகழ்ந்த அரிய சந்திர கிரகணத்தின்போது வேற்றுக் கிரகவாசிகள் பறக்கும் தட்டில் வேகமாகக் கடக்கும் காட்சிகள் வீடியோவில் பதிவாகியுள்ளமை அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

152 ஆண்டுகளுக்கு பிறகு மூன்று அரிய நிகழ்வுகளுடன் கடந்த 31ஆம் திகதி அபூர்வ சந்திர கிரகணம் தோன்றியது. இதனை வெறும் கண்களாலேயே மக்கள் காணலாம் என விஞ்ஞானிகள் தெரிவித்தனர்.

பல மணி நேரம் நீடித்த இந்த அருமையான நிகழ்வை நாசா பிரத்தியேகக் கமரா மூலம் ஒரு நிமிட வீடியோவாக வெளியிட்டது. அந்த வீடியோவில் சந்திரனை பூமி மறைக்கும் அற்புதக் காட்சிகள் நடந்த தருணத்தில் சந்திரனுக்கு இடது புறத்தில் ஒரு வெளிச்சமான மர்மப் பொருள் யாரும் கணிக்க முடியாத வேகத்தில் கடக்கிறது. அந்தப் பொருள் என்னவென்று தெரியவில்லை.

மனிதனால் தயாரிக்கப்பட்ட விண் பொருள் இவ்வளவு வேகத்தில் செல்ல வாய்ப்பே இல்லை என அறிவியல் ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர். எனவே, அவை ஏலியன்களின் பறக்கும் தட்டுகளாக இருக்கலாம் என சந்தேகம் எழுந்துள்ளது. ஆனால், இது தொடர்பாக இன்னும் நாசா தரப்பில் இருந்து எந்த அறிவிப்பும் வெளியிடப்படவில்லை. (ப)

## 22 இந்திய மாலுமிகளுடன் கப்பல் மாயம்: கடற்கொள்ளையரின் பிடியில் என அச்சம்!

மேற்கு ஆபிரிக்க கடற்பகுதியில் 22 இந்திய மாலுமிகளுடன் எண்ணெய் ஏற்றிச் சென்ற கப்பல் மூன்று நாளாக மாயமாகியுள்ளமையால், கடற்கொள்ளையர்கள் கடத்தியிருக்கலாம் என அச்சம் ஏற்பட்டுள்ளது.

மேற்கு ஆபிரிக்கப் பகுதியில் உள்ள கயானா வளைகுடா கடலில் ஆங்கிலோ ஈஸ்டர்ன் என்ற நிறுவனத்துக்குச் சொந்தமான கப்பலில் 8.1 பில்லியன் அமெரிக்க டொலர் மதிப்பிலான பெற்றோலுடன் நிலைநின்று கொண்டிருந்தது. மூன்று நாளாக



ளாக அந்தக் கப்பலில் இருந்து எந்தத் தகவலும் கிடைக்கவில்லை.

இதனால், அந்தக் கப்பல் கடற்கொள்ளையர்களால் கடத்தப்பட்டிருக்கலாம் என்ற அச்சம் நிலவுகிறது. மாயமாகிய கப்பலில் 22 இந்தியர்கள் பணியாற்றி வந்தனர் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன. (ப)

# பாகிஸ்தானில் தற்கொலைத் தாக்கு; 11 இராணுவத்தினர் சிதறிச் சாவு!



இஸ்லாமாபாத்,பெப்.05

பாகிஸ்தானின் வடமேற்குப் பகுதியில் அமைந்துள்ள இராணுவத்துக்குச் சொந்தமான விளையாட்டு முகாம் மீது தீவிரவாதிகள் நடத்திய தற்கொலைப் படைத் தாக்குதலில் 11 இராணுவ வீரர்கள் உயிரிழந்தனர்.

பாகிஸ்தானின் வடமேற்குப் பகுதியில் உள்ள ஸ்வாட் மாவட்டத்தின் கபல் டெஹ்சில் நகரில் அந்நாட்டு இராணுவத்தினருக்குச் சொந்தமான விளையாட்டு முகாம் அமைந்துள்ளது. இந்த முகாம் மீது நேற்றுமுன்தினம் மாலை அத்துமீறி நுழைந்த ஒரு தீவிரவாதி தனது உடலில் கட்டியிருந்த வெடிகுண்டுகளை வெடிக்கச் செய்தான்.

இந்தத் தற்கொலைப்படைத் தாக்குதலில் 3 இராணுவ வீரர்கள் சம்பவ இடத்திலேயே பரிதாபமாக உயிரிழந்தனர். மேலும் பலர் காயமடைந்தனர். அவர்கள் உடனடியாக அருகில் உள்ள மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர். அங்கு 8 பேர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தனர். இதன்மூலம் இந்த தற்கொலைப்படைத் தாக்குதலில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 11 ஆக அதிகரித்துள்ளது. இன்னும் காயமடைந்தவர்களில் சிலரது நிலைமை மோசமாக உள்ளமையால் பலி எண்ணிக்கை உயரலாம் என அஞ்சப்படுகிறது.

## ஆப்கனில் குண்டு வெடிப்பு பெண்கள் உட்பட 3 பேர் சாவு

ஆப்கனில் குண்டு வெடிப்பில் சிக்கி பெண்கள் உட்பட 3 பேர் உயிரிழந்துள்ளனர்.

ஆப்கானிஸ்தானில் கஜினி மாகாணம், கிலான் மாவட்டத்தில் ஒரு துக்க நிகழ்வில் கலந்து கொள்வதற்காக சிர்லாய் பகுதியில் சென்று கொண்டிருந்தபோதே குண்டு வெடிப்பு நிகழ்ந்துள்ளது.

இதன் போது அதில் பயணம் செய்த 2 பெண்கள், ஒரு குழந்தை என 3 பேர் சம்பவ இடத்திலேயே உடல் சிதறிப் பரிதாபமாகப் பலியாகினர். மேலும் ஒரு பெண்ணும், ஓர் ஆணும் படுகாயம் அடைந்தனர்.

வீதியோரத்தில் புதைத்து வைக்கப்பட்டிருந்த சக்திவாய்ந்த குண்டின் மீது கார் ஏறியபோது, குண்டு வெடித்துள்ளது என அங்கிருந்து வரும் தகவல்கள் கூறுகின்றன. இந்தச் சம்பவம் அங்கு பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. (ப)

# அனைத்து வகையிலும் நலமாய் வாழ உலகின் சிறந்த 12 நாடுகள்

அனைத்து வகையிலும் நலமாய் வாழ்வதற்கு உலகின் சிறந்த 12 நாடுகள் கொண்ட பட்டியலை ஐக்கிய நாடுகள் சபையின் மனிதவள மேம்பாட்டு அமைப்பின் ஆண்டறிக்கை வெளியிட்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையின் மனிதவள மேம்பாட்டு அமைப்பு சமீபத்தில் ஓர் ஆய்வு நடத்தியது. இந்த ஆய்வுக்காக சுமார் 200 நாடுகள் எடுத்துக் கொள்ளப்பட்டன.

நீண்ட ஆயுள், உடல்நலம், செலவினம், கல்வி, பாலின சமத்துவம், பொருளாதாரம் உள்பட பல்வேறு விடயங்கள் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டன.

இந்த நிலையில், அனைத்து வகையிலும் நலமாய் வாழத்தகுந்த உலகின் சிறந்த 12 நாடுகள் கொண்ட பட்டியலை ஐக்கிய நாடுகள் சபையின் மனிதவள மேம்பாட்டு அமைப்பின் ஆண்டறிக்கை வெளியிட்டுள்ளது. அதன் விவரம் வருமாறு:

நீண்ட ஆயுளுக்காக ஹொங்கொங்கும், பொருளாதாரத்துக்காக அமெரிக்காவும், கல்வித்துறைக்காக கனடாவும், உயர்தர வாழ்க்கைச் செலவினம் மற்றும் ஆயுளுக்காக ஐஸ்லாந்தும் தேர்வு செய்யப்பட்டுள்ளன.

குற்றங்கள் குறைவுக்காக அயர்லாந்தும், வருவாய் சமநிலைக்காக நெதர்லாந்தும், சராசரி செலவினம் மற்றும் நீண்ட ஆயுளுக்காக சிங்கப்பூரும், இரு பாலினத்தவருக்கும் சராசரி வருமானம் பெறுவதற்காக டென்மார்க்கும் தேர்வாகியுள்ளது.

பல்கலைக்கழக மாணவர்களுக்கு இலவச தங்கும் வசதி மற்றும் மேல்நிலை படிப்பு முடித்தவர்களுக்காக ஜேர்மனி, மலேரியா, ஹெச்.ஐ.வி உள்ளிட்ட நோய்த் தாக்கம் இல்லாததற்காக சுவிற்ஸர்லாந்தும், 20 ஆண்டு பள்ளிப் படிப்புக்காக ஆஸ்திரேலியாவும், உயர்தர வாழ்க்கை வாழ்வதற்காக நோர்வேயும் தேர்வு செய்யப்பட்டுள்ளன.



# விண்ணில் அதிக நேரம் நடந்து இரு ரஷ்ய வீரர்கள் சாதனை

மொஸ்கோ,பெப்.05

விண்வெளியில் ரஷ்யாவைச் சேர்ந்த அலெக்சாண்டர் மிசுர்கின் மற்றும் அன்டன் ஸ்கொப்லெரோவ் ஆகிய 2 வீரர்கள் நீண்ட நேரம் நடந்து சாதனை படைத்துள்ளனர்.

அமெரிக்கா, ரஷ்யா, ஜப்பான் உள்ளிட்ட 17 நாடுகள் இணைந்து விண்வெளியில் ஆய்வகம் அமைத்து வருகின்றன. 6 மாதத்துக்கு ஒரு முறை 3 வீரர்கள் அங்கு தங்கிக் கட்டுமானப் பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.



அங்கு தங்கியிருக்கும் போது விண்வெளியில் நடந்து ஆய்வகத்தின் திருத்தப் பணியை மேற்கொள்கின்றனர்.

ரஷ்யாவைச் சேர்ந்த அலெக்சாண்டர் மிசுர்கின், அன்டன் ஸ்கொப்லெரோவ் ஆகிய 2 வீரர்கள் தற்போது சர்வதேச விண்வெளி ஆய்வகத்தில் தங்கியுள்ளனர். நேற்றுமுன்தினம் அவர்கள் இருவரும் ஆய்வகத்தைவிட்டு வெளியே வந்து விண்வெளியில் நடந்தனர்.

இவர்கள் இருவரும் 8 மணி 13 நிமிட நேரம் விண்வெளியில் நடந்து சாதனை படைத்தனர். இலங்கை நேரப்படி இரவு 9.04 மணிக்கு ஆரம்பித்து அதிகாலை 5.17 மணிவரை நடந்தனர்.

புவியீர்ப்பு சக்தி இல்லாத விண்வெளியில் வீரர்கள் நீண்ட நேரம் நடந்தமை சாதனையாகக் கருதப்படுகிறது. மேலும், இந்த வீரர்கள் முந்தைய சாதனையை முறியடித்தனர். இதற்கு முன்பு 8 மணி 7 நிமிடம் விண்வெளியில் நடந்தது சாதனையாக இருந்தமை குறிப்பிடத்தக்கது. (ப)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

காலைக்கதிர்



# இலங்கை அணியின் புதிய சாதனை



டெஸ்ட் கிரிக்கெட்டில் ஒரு இன்னிங்ஸில் 700 ஓட்டங்களை அதிக முறை குவித்த அணி என்ற சாதனையை இலங்கை அணி படைத்துள்ளது.

இலங்கை – பங்களாதேஷ் அணிகள் இடையிலான முதல் டெஸ்ட் போட்டி பங்களாதேஷில் நடைபெற்று வருகிறது.

இப்போட்டியின் முதல் இன்னிங்ஸில் இலங்கை அணி 9 விக்கெடுகள் இழப்புக்கு 713 ஓட்டங்கள் குவித்து டிக்ளேர் செய்தது.

இதையடுத்து 700 ஓட்டங்கள் மற்றும் அதற்கு மேல் ஒரு இன்னிங்ஸில் அதிக முறை குவித்த அணி என்ற பெருமையை இலங்கை பெற்றுள்ளது.

அந்த அணி இதுவரை 6 முறை 700 ஓட்டங்களைத் தாண்டியுள்ளது. இந்தப் பட்டியலில் ஆஸ்திரேலியா, மேற்கிந்தியத்தீவு மற்றும் இந்தியா இரண்டாமிடத்தில் உள்ளன. மூன்று அணிகளும் நான்கு முறை 700 ஓட்டங்கள் எடுத்துள்ளன.

# தர்ஜினி சிவலிங்கத்துக்கு தேசிய அணியில் வாய்ப்பு




வலைப்பந்தாட்ட உலகில் அதி சிறந்த சூட்டர் வீராங்கனை என்ற பெருமைக்குரியவரும் ஆசியாவிலேயே அதி உயரமான வலைப்பந்தாட்ட வீராங்கனையுமான இலங்கையின் தர்ஜினி சிவலிங்கம், சுமார் 3 வருடங்களுக்குப் பிறகு தேசிய வலைப்பந்தாட்ட குழாமில் மீண்டும் இணைக்கப்பட்டுள்ளார்.

எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் முதலாம் திகதி முதல் 9ஆம் திகதி வரை சிங்கப்பூரில் நடைபெறவுள்ள 11ஆவது ஆசிய வலைப்பந்தாட்ட சம்பியன்ஷிப் போட்டிகளுக்கான இலங்கை அணியின் ஆரம்ப கட்ட குழாமுக்கான தெரிவுப் போட்டிகள் கடந்த வாரம் பண்டாரகம உள்ளக அரங்கில் இடம்பெற்றது. அதில் 30 வீராங்கனைகள் தேசிய வலைப்பந்து குழாமுக்காக தெரிவு செய்யப்பட்டனர். தெரிவுப் போட்டிகளுக்கு முன்னர் வீராங்கனைகள் தம்மைப் பதிவு செய்து, மருத்துவ தேர்வில் சித்தி பெறவும் வேண்டும் என இலங்கை வலைப்பந்து சம்மேளனம் அறிவித்திருந்தது. அதனைத் தொடர்ந்தே தேர்வுகள் இடம்பெற்றன.

2009ஆம் ஆண்டு இலங்கைக்கு ஆசிய வலைப்பந்து சம்பியன் கிண்ணத்தைப் பெற்றுக்கொடுக்க பெரும் தூணாக இருந்த 6 அடி 10 அங்குலம் உயரத்தைக் கொண்ட தர்ஜினி, 2009 மற்றும் 2011ஆம் ஆண்டுகளில் ஆசியாவின் சிறந்த கோல்போடும் வீராங்கனையாகவும் (சூட்டர்) தெரிவானார். அதனைத் தொடர்ந்து தேசிய வலைப்பந்து அணியின் இணைத் தலைவியாகச் செயற்பட்ட தர்ஜினி, முன்னதாக 4 தடவைகள் ஆசிய வலைப்பந்தாட்ட சம்பியன் ஷிப் போட்டிகளில் இலங்கை அணியைப் பிரதிநிதித்துவப்படுத்தியுள்ளார்.

இறுதியாக 2014ஆம் ஆண்டு நடைபெற்ற ஆசிய வலைப்பந்தாட்ட சம்பியன் ஷிப் போட்டித் தொடரில் அபாரமாக விளையாடி இலங்கை அணியை இறுதிப்போட்டி வரை அழைத்துச் செல்வதற்கு முக்கிய காரணமாக இருந்த தர்ஜினி, வலைப்பந்து நிர்வாகத்தில் ஏற்பட்ட திடீர் மாற்றங்கள் மற்றும் முரண்பாடுகள் காரணமாக கடந்த 2 வருடங்களாக எந்தவொரு சர்வதேசப் போட்டிகளிலும் இலங்கை அணிக்காக விளையாடவில்லை. இந்த நிலையில் தர்ஜினி சிவலிங்கத்துக்கு மீண்டும் தேசிய அணியில் விளையாடும் வாய்ப்பு எட்டியுள்ளது.

எனினும், தேசிய வலைப்பந்தாட்ட அரங்கில் சுமார் 10 வருடங்களாக இலங்கை அணிக்காக ஆசிய மற்றும் உலக அரங்கில் திறமைகளை வெளிப்படுத்தி வெற்றிகளைப் பெற்றுக்கொடுத்த தர்ஜினி சிவலிங்கம், முதற்தடவையாக ஆஸ்திரேலியாவின் வெஸ்ட் பெல்கன்ஸ் மற்றும் மெல்போர்ன் செனட். எல்பன்ஸ் அணிகளுக்காக கடந்த வருடம் ஒப்பந்தம் செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# பொதுநலவாய விளையாட்டுப் போட்டிகளுக்கு இலங்கை வீரர்கள் எண்ணிக்கை குறைப்பு



ஆஸ்திரேலியாவின் கோல்ட் கோஸ்ட் நகரில் எதிர்வரும் ஏப்ரல் மாதம் ஆரம்பமாகவுள்ள பொதுநலவாய விளையாட்டு விழாவில் இலங்கை சார்பில் 13 வகையான போட்டிகளுக்காக 87 போட்டியாளர்கள் கலந்து கொள்ளவுள்ளனர் என ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்தது. இந்த நிலையில், விளையாட்டுத்துறை அமைச்சால் இதுதொடர்பில் ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட ஐவர் அடங்கிய குழுவின் பரிந்துரைப்படி 8 வகையான விளையாட்டுகளுக்காக 33 வீரர்களை மாத்திரமே போட்டித் தொடருக்கு அனுப்பி வைக்க முடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆஸ்திரேலியாவின் கோல்ட் கோஸ்ட் நகரில் எதிர்வரும் ஏப்ரல் மாதம் ஆரம்பமாகவுள்ள பொதுநலவாய விளையாட்டு விழாவில் 13 வகையான போட்டிகளுக்காக இலங்கை சார்பில் 87 போட்டியாளர்கள் கலந்து கொள்ளவுள்ளனர் என விளையாட்டுத்துறை அமைச்சர் தயாசிறி ஜயசேகர கடந்த மாதம் முற்பகுதியில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் தெரிவித்திருந்தார்.

இதன்படி, மெய்வன்மை, பளுதூக்கல், மல்யுத்தம், குத்துச்சண்டை, நீச்சல், மேசைப்பந்து, எழுவர் ரக்பி, கடற்கரைக் கபடி, கடற்கரைக் கரப்பந்தாட்டம், துப்பாக்கிச் சுடுதல், ஜிம்னாஸ்டிக், பெட்மிண்டன், ஸ்குவாஷ் மற்றும் சைக்கிளோட்டம் ஆகிய போட்டிகளுக்காக இலங்கையிலிருந்து வீரர்கள் பங்கேற்கவுள்ளனர் எனவும் அறிவிக்கப்பட்டது.

அதிலும் முக்கியமாக அடைவு மட்டத்தைப் பூர்த்தி செய்த பதக்கங்களை வெல்லக்கூடியவர்கள் என்று தேர்ந்தெடுக்கப்பட்ட வீரர்கள் மட்டுமே அனுப்பப்படுவர் எனவும், வெறுமனே வீரர்களையும், அதிகாரிகளையும் அனுப்பி அரச பணத்தை வீணடிக்க தயாரில்லை எனவும் தெரிவித்த அமைச்சர், அதற்காக விசேட வேலைத்திட்டமொன்றை நடைமுறைப்படுத்த எதிர்பார்த்துள்ளோம் எனவும் திட்டவட்டமாகத் தெரிவித்திருந்தார்.

இந்த நிலையில், இம்முறை பொதுநலவாய நாடுகள் விளையாட்டு விழா தொடர்பில் ஆராய நியமிக்கப்பட்ட குழுவின் விசேட அறிக்கை கடந்த மாதம் 25ஆம் திகதி விளையாட்டுத்துறை அமைச்சரிடம் உத்தியோகபூர்வமாக கையளிக்கப்பட்டது.

இவ்விசேட அறிக்கையின்படி, இம்முறை பொதுநலவாய நாடுகள் விளையாட்டுவிழாவில் மெய்வன்மை பளுதூக்கல், மல்யுத்தம், ஸ்குவாஷ், நீச்சல், கடற்கரை கரப்பந்தாட்டம், குத்துச்சண்டை மற்றும் துப்பாக்கி சுடுதல் உள்ளிட்ட 8 வகையான விளையாட்டுகளுக்கு 33 வீரர்களை மாத்திரமே அனுப்ப முடியும் என பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

இதேநேரம், எழுவர் ரக்பி, பட்மின்டன், சைக்கிளோட்டம், ஜிம்னாஸ்டிக் மற்றும் மேசைப்பந்து உள்ளிட்ட விளையாட்டுக்களுக்கு அனுமதி அளிக்க வேண்டாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மயிரிழையில் தப்பிய இந்திய அணி



சர்வதேச ஒருநாள் தரவரிசையில் இந்திய அணி முதல் ஒருநாள் போட்டியில் வென்றதனால் மயிரிழையில் முதலிடத்தைத் தென்னாபிரிக்க அணியிடம் இருந்து தட்டிப்பறித்தது.

சர்வதேச ஒருநாள் அரங்கில் சிறந்து விளங்கும் அணிகளுக்கான தரவரிசைப் பட்டியலை, ஐ.சி.சி., நேற்று வெளியிட்டுள்ளது. இதில் இந்திய அணி (120 புள்ளிகள்) சில தசம புள்ளிகள் வித்தியாசத்தில் முதலிடத்தைத் தென்னாபிரிக்க அணியிடமிருந்து தட்டிப் பறித்துள்ளது.

தென்னாபிரிக்க அணி (120 புள்ளிகள்) இரண்டாவது இடத்துக்குத் தள்ளப்பட்டது. இரு அணிகளும் தலா 120 புள்ளிகள் பெற்ற போதும் இந்திய அணி சில தசம புள்ளிகள் வித்தியாசத்தில் முதலிடத்தைக் கைப்பற்றியுள்ளது






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2ஆவது ஒருநாள் போட்டியில்

## தென்னாபிரிக்கா அணியைத் திணறடித்து 9 விக்கெட்டுகளால் வென்றது இந்தியா



இந்தியா – தென் ஆபிரிக்கா இடையிலான 6 போட்டிகள் கொண்ட ஒருநாள் கிரிக்கெட் தொடர் நடைபெற்று வருகிறது. கடந்த முதலாம் திகதி டேர்பனில் நடைபெற்ற முதல் ஆட்டத்தில் இந்தியா 6 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இந்த நிலையில் 2ஆவது ஆட்டம் நேற்று செஞ்சூரியனில் இடம் பெற்றது. இந்தியஅணிக் கப்டன் விராட் கோஹ்லி பந்து வீச்சைத் தேர்வு செய்தார். இந்திய அணியில் மாற்றம் ஏதும் செய்யவில்லை. தென்னாபிரிக்கா அணியில் டு பிளெசிஸ்க்குப் பதிலாக அறிமுக வீரர் கயா சோண்டோ இடம்பிடித்தார். அதேபோல் பெலுக்வாயோவிற்குப் பதிலாக சுழற்பந்து வீச்சாளர் ஷம்சி இடம்பிடித்தார்.

தென்னாப்பிரிக்கா அணி 51ஓட்டங்கள் எடுப்பதற்குள் 5 விக்கெட்டுக்களை இழந்தது. தொடர்ந்து வந்த வீரர்கள் ஜொலிக்கத் தவற தென்னாபிரிக்கா அணி 32.2 ஓவர்கள் மட்டுமே தாக்குப்பிடித்து 118 ஓட்டங்களில் சுருண்டது.

சாஹல் அபாரமாகப் பந்து வீசி 8.2 ஓவரில் 22 ஓட்டங்கள் மட்டுமே விட்டுக்கொடுத்து 5 விக்கெட்டும், குல்தீப் யாதவ் 6 ஓவரில் 20 ஓட்டங்கள் விட்டுக்கொடுத்து 3 விக்கெட்டும் வீழ்த்தினார்கள்.

பின்னர் 119 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் இந்தியா துடுப்பாட்டம் செய்யத் தொடங்கியது. ரோகித் சர்மா, தவான் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாகக் களம் இறங்கினர்.

ரோகித்சர்மா 15 ஓட்டங்கள் எடுத்த நிலையில் ரபாடாவின் பந்தில் பவிலியன் திரும்பினார். தொடர்ந்து தவானுடன் ஜோடி சேர்ந்த ஹோக்லி அதிரடி காட்ட 9 விக்கெட்டுகளால் அபார வெற்றி பெற்றது.

கோஹ்லி 46 ஓட்டங்களுடனும் தவான் 51 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் பெற்றுக் கொண்டனர்.




முத்தரப்பு ரி - 20:

## மேக்ஸ்வெல், கிறிஸ்லின் ஆட்டத்தால் நியூஸிலாந்தை வீழ்த்திய ஆஸ்திரேலியா




முத்தரப்பு ரி – 20 கிரிக்கெட்டின் முதல் ஆட்டத்தில் நியூஸிலாந்தை 7 விக்கெட் வித்தியாசத்தில் வீழ்த்தியது ஆஸ்திரேலியா.

ஆஸ்திரேலியா, நியூஸிலாந்து மற்றும் இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான முத்தரப்பு ரி – 20 கிரிக்கெட் தொடர் நேற்று ஆரம்பமாகியது.

சிட்னியில் நடைபெற்ற முதல் ஆட்டத்தில் ஆஸ்திரேலியா – நியூஸிலாந்து அணிகள் பலப் பரீட்சை நடத்தின.

நாணயச் சுழற்சியில் வென்ற ஆஸ்திரேலியா களத்தடுப்பைத் தேர்வு செய்தது. அதன்படி நியூஸிலாந்தின் மார்ட்டின் கப்டில், கெலின் முன்ரோ ஆகியோர் தொடக்க வீரர்களாகக் களம் இறங்கினார்கள்.

மார்ட்டின் கப்தில் 5 ஓட்டங்களிலும், முன்றோரா 3 ஓட்டங்களிலும் ஸ்டேன்லேக் பந்தில் ஆட்டமிழந்தார். அதன்பின் வந்த கப்டன் வில்லியம்சனை 8 ஓட்டங்களில் வெளியேற்ற, ப்ரூஸ் 3 ஓட்டங்களுடன் வெளியேற்றினார் ஸ்டேன்லேக். இதனால் 34 ஓட்டங்களுக்குள் நியூஸிலாந்து முக்கிய நான்கு விக்கெட்டுக்களை இழந்தது.

அதன்பின் வந்த டெய்லர் 24 ஓட்டங்களிலும், பிளன்டெல் 14 ஓட்டங்களிலும், கிராண்ட்ஹோம் ஆட்டமிழக்காமல் 38 ஓட்டங்களும் சேர்க்க நியூஸிலாந்து 20 ஓவரில் 9 விக்கெட் இழப்பிற்கு 117 ஓட்டங்கள் சேர்த்தது.

ஆஸ்திரேலியா துடுப்பாட்டம் செய்யத் தயாராகும்போது மழை பெய்தது. ஆட்டம் பாதிக்கப்பட்டதால், டக்வொர்த் லீவிஸ் விதிப்படி ஆஸ்திரேலியா அணியின் வெற்றிக்கு 15 ஓவரில் 95 ஓட்டங்கள் இலக்காக நிர்ணயிக்கப்பட்டது.

90 பந்தில் 95 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் வார்னர், டிஆர்கி ஷார்ட் தொடக்க வீரர்களாகக் களம் இறங்கினார்கள். ஷார்ட் 4 ஓட்டங்களிலும், வோர்னர் 6 ஓட்டங்களிலும் ஆட்டமிழந்தனர்.

அதன்பின் 3ஆவது விக்கெட்டுக்கு கிறிஸ்லின் உடன் மக்ஸ்வெல் ஜோடி சேர்ந்தார். இந்த ஜோடி அதிரடியாக விளையாடி அணியை வெற்றி நோக்கி அழைத்துச் சென்றனர். ஆஸ்திரேலியா 11 ஓவரில் 87ஓட்டங்கள் எடுத்திருக்கும் போது கிறிஸ் லின் 33 பந்தில் 44 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தார். அடுத்து கேரி களம் இறங்கினார்.

12ஆவது ஓவரில் மக்ஸ்வெல் இரண்டு பவுண்ரி அடிக்க ஆஸ்திரேலியா 11.3 ஓவரில் 96 ஓட்டங்கள் எடுத்து வெற்றி பெற்றது. மேக்ஸ்வெல் 24 பந்தில் 5 பவுண்ரி, ஒரு சிக்ஸருடன் 40 ஓட்டங்கள் சேர்த்தார்.



ஆஸ்திரேலியா – இங்கிலாந்து இடையிலான போட்டி வருகிற 7ஆம் திகதி ஹோபாட்டில் இடம்பெறவுள்ளது.

## கௌதம் கம்பீரைத் தவற விடுகிறோம்



ஷாருக்கான்

இரண்டு முறை ஐ.பி.எல். கிண்ணத்தை வாங்கித் தந்த கௌதம் காம்பீரைத் தவற விடுகிறோம் என்று கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணி உரிமையாளர் ஷாருக்கான் கூறியுள்ளார்.

ஐ.பி.எல். சீசன் 10 ஆண்டு நிறுவடைந்து 11ஆவது சீசனுக்குள் அடியெடுத்து வைத்துள்ளது. இதனால் அனைத்து அணிகளும் 5 வீரர்களை மட்டுமே தக்கவைத்துக்கொண்டு, மற்ற வீரர்களை பொது ஏலத்தின் மூலம் எடுக்க வேண்டும் என்ற நடைமுறை கொண்டு வரப்பட்டது. அதன்படி எல்லா அணிகளும் தங்களுக்குத் தேவையான வீரர்களைத் தக்க வைத்துக் கொண்டு மற்ற வீரர்களை ஏலத்தில் எடுத்தது. கொல்கத்தா அணியில் 2011ஆம் ஆண்டில் இருந்து விளையாடி வந்தவர் கௌதம் கம்பீர். இவரது தலைமையில் 2012 மற்றும் 2014இல் கொல்கத்தா அணி சம்பியன் பட்டம் வென்றது. தொடக்க வீரராக களம் இறங்கிய கம்பீர் பெரிய அளவில் சொதப்பியது கிடையாது. தற்போது உள்ளூர் தொடர்களிலும் சிறப்பாக விளையாடி வருகின்றார். கொல்கத்தா அணி தன்னைத் தக்க வைத்துக் கொள்ளும் என எதிர்பார்த்தார்.

ஆனால், கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அவரைத் தக்க வைக்கவில்லை.

இதனால் டில்லி அணி 2.8 கோடி ரூபாய் கொடுத்து கம்பீரை வாங்கியது. கம்பீர் அணியில் இருந்து விலகியமை தொடர்பாக ரசிகர் ஒருவர் டுவிட்டரில் ஷாருக்கானிடம் கேள்வி எழுப்பினார்.

இதற்கு ஷாருக்கான் கம்பீரைத் தவற விடுகிறோம் என்று பதிவிட்டு, கம்பீர் வெளியேறியமை பற்றி முதன்முறையாக மனம் திறந்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நான்காவது வரிசையில் களமிறங்குவதே சிறப்பு



ரஹானே

இந்தியக் கிரிக்கெட் வீரர் அஜிங்கே ரஹானே, தனக்கு நான்காவது வரிசையில் களம் இறங்குவதே சிறப்பாக உள்ளது எனத் தெரிவித்துள்ளார்.

துடுப்பாட்ட வீரரான அஜிங்கே ரஹானேவை, எந்த வரிசையில் களம் இறக்குவது என்பது தொடர்பாக, தென்னாபிரிக்கத் தொடருக்கு முன்பாக பெரும் விவாதம் நடைபெற்றது.

ஆனால், தென்னாபிரிக்காவுக்கு எதிரான முதல் ஒருநாள் போட்டியில், ரஹானே 4ஆவது வரிசையில் இறங்கி 79 ஓட்டங்கள் குவித்தார்.

இந்த நிலையில் தனது துடுப்பாட்டம் தொடர்பாக ரஹானே கூறுகையில், 4ஆவது வரிசையில் களம் இறங்குவதையே நான் தற்போது சிறப்பாகக் கருதுகிறேன். நான் இப்போது மேலும், முதிர்ச்சி பெற்றுள்ளேன். எனக்கு நான்காவது வரிசையில் இறங்கி, எனது இன்னிங்ஸை எப்படி மேம்படுத்துவது என்பது எனக்குத் தெரியும்.

ஆனால், நான்காவது வரிசை சற்று வித்தியாசமானது. எனினும், ஜோகன்ஸ்பர்க்கில் விளையாடிய டெஸ்டில், நான் 48 ஓட்டங்கள் எடுத்தது எனக்கு நம்பிக்கையை அளித்துள்ளது எனத் தெரிவித்துள்ளார்.

(ப)

## சுதந்திர...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடத்தினர்.

இலங்கையின் சுதந்திர தின நிகழ்வில் பங்குபற்றும்படி லண்டன் நகரில் உள்ள இலங்கைத் தூதரகம் அனைத்து இலங்கை மக்களுக்கும் அழைப்பு விடுத்திருந்தது. அதேநேரம், அதே இடத்தில் 'சுதந்திரம் யாருக்கானது?' – என்ற தொனிப் பொருளில் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்றும் நடத்தப்பட்டது.

தமிழ் சொலிடாரிட்டி, தமிழர் ஒருங்கிணைப்புக் குழு, நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் என்பன ஒன்றிணைந்து இந்தப் போராட்டத்திற்கு அழைப்பு விடுத்திருந்தன.

காணாமல் ஆக்கப்பட்டோர் எங்கே?, ஆக்கிரமிப்பு நிலங்களில் இருந்து இராணுவமே வெளியேறு, அரசியல் கைதிகள் விடுவிக்கப்படல் வேண்டும், இரகசிய சித்திரவதை முகாம்களை மூடு , தனியார் மயமாக்கலை நிறுத்து, மக்களின் அடிப்படை அரசியல் உரிமைகள் அங்கீகரிக்கப்பட வேண்டும், தமிழ்பேசும் மக்களின் சுயநிர்ணய உரிமை அங்கீகரிக்கப்படவேண்டும், வெளியிடப்பட்டிருக்கும் இடைக்கால அறிக்கையை நாம் நிராகரிக்கிறோம் என்பன போன்ற பல அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து இந்தப் போராட்டம் நடத்தப்பட்டது.

"தனிநாட்டு கோரிக்கையை நாம் தியாகம் செய்து விட்டோம் என்றுதமிழ்தலைமைகள் மேடையில் பிரசாரம் செய்து கொண்டிருக்கும்வேளையில், தமிழர்கள் இலங்கை சுதந்திர தினத்தன்று இலங்கைத் தூதரகம் முன் தேசியக் கொடி ஏந்தி, கறுப்பு சட்டை அணிந்து, பறை இசை முழங்க சிங்கள பேரினவாத ஆட்சியாளர்களுக்கு எதிரான கோஷங்களை முன்வைத்தார்கள்."– என்று அதன் ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர். இலங்கைத் தூதரகத்தின் முன்னால் போராட்டம் நிறைவு பெற்று, பின்னர் பிரித்தானிய பிரதமர் மாளிகைக்கு முன்னால் அது ஆரம்பமாகியது.

இலங்கையின் சுதந்திர தின கொண்டாட்டங்களில் பிரித்தானியப் பிரதிநிதிகளும், அரசகுடும்பத்தைச் சார்ந்தவர்களும் பங்குபற்றக்கூடாது எனக் கோரியும், அங்கு இடம்பெற்ற இனப்படுகொலைக்குச் சர்வதேச விசாரணைவேண்டியும், தமிழர்களின் அரசியல் உரிமைப் போராட்டத்திற்கு அங்கீகாரம் வேண்டியும் அது போன்ற பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்தும் இந்தப் போராட்டம் நடைபெற்றது .

இந்தப் போராட்டங்களில் தமிழகத் தமிழர்கள் பலரும் பங்கு கொண்டிருந்தமையை அவதானிக்கக்கூடியதாக இருந்தது. 'பெரியார் – அம்பேத்கர் படிப்பு வட்டம்' எனும் அமைப்பு ரீதியாக இவர்கள் கலந்து கொண்டு இலங்கை அடக்குமுறை அரசிற்கு எதிரான வாசகங்களைத் தாங்கிப் பிடித்து போராட்டத்தில் ஈடுபட்டமை குறிப்பிடத்தக்கது.

## தம்புத்தேகம...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இடம்பெற்றுள்ளது.

இவ்விபத்தில் ஓட்டோவில் பயணித்த நால்வரே உயிரிழந்துள்ளனர் எனத் தம்புத்தேகம பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (ஐ)

## கேப்பாபிலவு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பந்தித்தது என மக்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

கேப்பாபிலவு பூர்வீகக் கிராமத்தை மீட்பதற்காக கடந்த வருடம் மார்ச் மாதம் முதலாம் திகதி ஆரம்பித்த நிலமீட்புப் போராட்டம் 339 ஆவது நாளாகவும் நேற்றும் தொடர்ந்தது.

சுதந்திர தினமான நேற்று கேப்பாபிலவில் தமது போராட்ட இடமெங்கும் கறுப்புக் கொடிகள் கட்டிப் பல்வேறு வாசகங்கள் எழுதப்பட்ட பதாதைகளைத் தொங்கவிட்டுப் போராட்டத்தில் ஈடுபட்டனர் மக்கள்.

இதனால்அங்குகுழப்பநிலை ஏற்பட்டது. அங்கு வந்த முள்ளியவளைப் பொலிஸார் ஆர்ப்பாட்டம் நடத்த முடியாது என்று தெரிவித்து மக்களைக் கலைந்து செல்லுமாறு வற்புறுத்தினர்.

இதனை அடுத்துக் கேப்பாபிலவு பிரதான வீதியை இராணுவத்தினர் திடீரென மூடினர். இதனால் அங்கு பதற்ற நிலை ஏற்பட்டது. (ஐ)

## சுதந்திரதினத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சியஸ் மற்றும் அதன் பிரதம நிறைவேற்று அதிகாரி கசுன் பலிசேன ஆகியோர் குற்றப் புலனாய்வுப்பிரிவினரால்நேற்று அதிகாலை அதிரடியாகக் கைது செய்யப்பட்டனர்.

நேற்று அதிகாலையில் இவர்களது வீடுகளைச்சுற்றிவளைத்த குற்றப்புலனாய்வுப் பிரிவினர், இருவரையும் கைதுசெய்து குற்றப் புலனாய்வுத் திணைக்களத்துக்கு அழைத்துச் சென்றனர். விசாரணைகளின் பின்னர் இவர்கள் இருவரும் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தவிருந்தனர்.

மத்திய வங்கியின் பிணைமுறிவிநியோகத்தில் இடம்பெற்ற பெரும் மோசடியால், அரசுக்குப் பாரிய நட்டம் ஏற்பட்டுள்ளதென அது தொடர்பாக விசாரணை செய்த அறிக்கைகள் சுட்டிக்காட்டியுள்ளன. இந்நிலையில், மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அர்ஜுன் மகேந்திரன், பேர்பச்சுவல் ட்ரஸரீஸ் நிறுவனத்தின் தலைவர் அர்ஜுன் அலோசியஸ் மற்றும் அந்த நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி கசுன் பலிசேன ஆகியோர் குற்றவாளிகள் எனக் கடந்த வெள்ளிக்கிழமை குற்றப் புலனாய்வுத் திணைக்களம் பெயரிட்டது. அதன் பிரகாரம் நேற்று மேற்படி இருவரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

எவ்வித முன்னறிவித்தலும் இன்றிக் குற்றப் புலனாய்வுப் பிரிவினர்நேற்று அதிகாலையில் திடீரென மேற்கொண்ட விசேட சுற்றிவளைப்பின்போது இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

அர்ஜுன் அலோசியஸைக் கைது செய்து அழைத்துச் செல்லும்போது அவருடைய மனைவி ஊடகவியலாளர்களுடன் தர்க்கம் புரிந்துள்ளார். புகைப்படப் பிடிப்பாளர் ஒருவரின் கமராவைத்தட்டிவிடமுயன்றமையுடன், அர்ஜுன் அலோசியஸ் சென்ற வாகனத்தைச் சுற்றி வந்து குழப்பத்தைஏற்படுத்தியுள்ளார். அதையடுத்து அர்ஜுன் அலோசியஸின் மனைவியை அவரது உறவினர் ஒருவர் சமாதானப் படுத்தி வீட்டுக்குள் அழைத்துச் சென்றார்.

இதேவேளை, சிங்கப்பூரில் தங்கியுள்ள அர்ஜுன் மகேந்திரனை எதிர்வரும் 15ஆம் திகதிக்குமுன்னர்குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தில் முன்னிலையாகுமாறு கோட்டை நீதிவான் லங்கா ஜயரத்ன உத்தரவிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## கடந்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போரில் இடம்பெற்ற குற்றங்களை மறந்துவிடுவோம் என்று நேற்று முன்தினம் வலியுறுத்திய அவர், மேற்கண்டவாறு கோரியுள்ளார்.

யாழ். மாவட்ட செயலகத்தில் நேற்றுக் காலை இடம்பெற்ற 70ஆவது சுதந்திரதின நிகழ்வில் பிரதம அதிதியாகப் பங்கேற்று உரையாற்றும்போதே ஆளுநர் இவ்வாறு கோரினார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:–

பாதிக்கப்பட்ட ஆயிரக் கணக்கான மக்களின் வாழ்வு வளம் பெற, எதிர்காலச்சந்ததியினருக்கு நல்லதொரு வாழ்வை வழங்க, நாட்டின் பொருளாதாரத்தை வளர்ச்சியடைவதற்காக இருக்கின்ற சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தவேண்டும்.

கடந்த காலத்தில் நடந்த இழிவான செயல்களை மறந்துவிட வேண்டும். கடந்த காலத்தில் நடந்த தவறுகள் அனைத்துக்கும் மன்னிப்பு வழங்கவேண்டும்.

இனவாத அடிப்படைவாதக் கருத்துக்களுக்கு இடமளிக்கக் கூடாது. – என்றார். (ஐ – 7)

## மணிவண்ணனுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உறுப்பினர் ரட்ணஜீவன் கூல் நேற்று முன்வைத்தார்.

யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் இயங்கும் தேர்தல்கள் பிரிவில் இந்த முறைப்பாட்டை அவர் வழங்கினார்.

தமிழ்த்தேசியப் பேரவையின் தேர்தல் அறிக்கை வெளியீட்டின்போது சட்டத்தரணி மணிவண்ணன்தன்னைவிமர்சித்தார் எனக் கடந்த மாதம் செய்த முறைப்பாட்டுக்கு மேலதிகமாக நேற்று மற்றொரு குற்றச்சாட்டை அவர் முன்வைத்துள்ளார்.

கடந்த மாதம் செய்யப்பட்ட முறைப்பாடு தொடர்பில் விசாரணை செய்த பொலிஸார், இருதரப்பையும் இணக்கம் செய்ய முயற்சித்தனர். எனினும்அதனை ஏற்கத் தேர்தல்கள் ஆணைக் குழுவின் உறுப்பினர் ரட்ணஜீவன் கூல் மறுப்புத் தெரிவித்துவிட்டார்.

இந்த நிலையில் இந்த விவகாரத்தை நீதிமன்றுக்கு விடுவதற்கு பொலிஸார் ஏற்பாடுகளைச் செய்துவரும் நிலையில், அதே முறைப்பாட்டில் சட்டத்தரணி மணிவண்ணனுக்கு எதிராக மற்றுமொரு குற்றச்சாட்டையும் கூல் நேற்று முன்வைத்தார் எனத் தெரியவந்தது. (ஐ)

## யாழில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இடம்பெற்றன.

இந்தச் சுதந்திர தின நிகழ்வு யாழ். மாவட்ட செயலகத்தில் நேற்றுக் காலை இடம்பெற்றது.

யாழ். மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், வடக்கு மாகாண ஆளுநர் றெஜினோல்ட் குரே பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு தேசியக் கொடியை ஏற்றினார்.

இராணுவத்தினர், கடற்படையினர், விமானப் படையினர் மற்றும்பொலிஸாரின் அணிவகுப்பு மரியாதை மற்றும் சமய, கலை, கலாசாரங்களை அடையாளப்படுத்தும் ஊர்வலங்கள் என்பன இடம்பெற்றன.

சிங்களம், தமிழ் மொழிகளில் தேசியகீதம் இசைக்கப்பட்டது. அத்துடன் 70ஆவது சுதந்திர தினத்தை அடையாளப்படுத்தும் வகையில் மரக்கன்றுகளும் விருந்தினர்களால் நடப்பட்டன.

அரச அதிகாரிகள், அலுவலர்கள், முப்படை மற்றும் பொலிஸ் அதிகாரிகள், பாடசாலை மாணவர்கள் உள்ளிட்ட பலர் இதில் கலந்துகொண்டனர். (ஐ – 7)

# கம்பஹாவில் துப்பாக்கிச் சூடு; மோ.சைக்கிளில் வந்தவர் காயம்



கம்பஹா – நெதகமுவ அரசமரச் சந்தியில் நேற்று இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் 34 வயது நபர் ஒருவர் படுகாயங்களுக்கு உள்ளானார். அவர் கம்பஹா ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளார்.

மோட்டார் சைக்கிளில் பயணித்துக்கொண்டிருந்தவர்மீதே, இன்னுமொரு மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் இவ்வாறு துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டுள்ளனர்.

கொடுக்கல் வாங்கலில் ஏற்பட்ட குரோதமே இந்தத்துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்துக்குக் காரணம் என ஆரம்ப கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## மைத்திரியின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜனாதிபதியின் நேற்றைய உரை முழுவதும் அவரது தற்போதைய அரசியல் இலக்கான 'ஊழலற்ற ஆட்சி' என்ற கோஷத்தை முன்னிறுத்துவதாகவே முற்றும் முழுதாக அமைந்தது.

பொருளாதார அபிவிருத்தி, புத்தாக்கப் பொருளாதாரம், பசுமைப்பொருளாதாரம், கல்விச் சீர்திருத்தம், வினைத்திறன்மிக்க அரச நிர்வாகம், ஜனநாயகச் சீரமைப்பு, சிறந்த அரசியல் கலாசாரம், ஊழல் களைவு, அரசியல் நேர்மை, பொருளாதார சுபீட்சம், சௌபாக்கியம், தொழில்நுட்ப வளர்ச்சி, கலாசாரத்தைப் பேணுதல் மற்றும் சோம்பேறித்தனம், உதாசீனம், பிற்போக்குத்தனம் ஆகியவற்றைக் களைதல் போன்றவை பற்றி எல்லாம் பேசினார் ஜனாதிபதி.

"கொடூர பயங்கரவாதிகளான எல்.ரி.ரி.ஈயினரிடமிருந்து நாட்டை மீட்ட படையினரின் மகத்தான பணியை மறந்துவிட முடியாது." – என்று குறிப்பிட்ட ஜனாதிபதி, நாட்டின் தேசிய இனப்பிரச்சினை குறித்து ஏதும் பேசாமல், அதனை அடியோடு தவிர்த்துக் கொண்டார்.

நாட்டின் பிரதான பேசுபொருளான புதிய அரசமைப்பு உருவாக்கம் குறித்து அவர் மூச்சே விடவில்லை.

நல்லிணக்கம் குறித்து ஓரிடத்தில் மட்டும் அவர் குறிப்பிட்டார். அவர் அது பற்றிக் கூறிய வாசகங்கள் வருமாறு :–

கடந்த பல தசாப்தங்களாக நாம் பெற்ற அனுபவத்துடன் இந்நாட்டைக் கட்டியெழுப்ப வேண்டுமாயின் குறிப்பாக இனவாதக் கருத்துக்கள் அற்ற தேசிய சமாதானம், நல்லிணக்கம் ஆகியவற்றைப் பலப்படுத்தி இனவாத மோதல்கள் இன்றி நாட்டின் அனைத்து மக்களினாலும் சுதந்திரமாக வாழக்கூடிய நிலைமையை உறுதிப்படுத்துவது மிகக் கட்டாயத் தேவையாகும். அவ்வுறுதிப்பாட்டினுள் அனைவரினதும் பங்களிப்பு செயற்பாட்டு ரீதியாகவே தேவைப்படுகின்றது. சிங்களம், தமிழ், முஸ்லிம், பறங்கியர்கள் மற்றும் மலேயர்கள் ஆகிய அனைத்து இனங்களுக்கிடையேயும் நல்லிணக்கம், ஒற்றுமை, மத ரீதியிலான நல்லிணக்கம், மொழிகளுக்கிடையிலான நல்லிணக்கம் ஆகியன மூலம் தேசிய ஒற்றுமையைப் பலப்படுத்தி அனைவருக்கும் நம்பிக்கையுடனும் அச்சமும் பீதியும் அற்ற வகையிலும் வாழ்வதற்கான உரிமையை எப்போதும் நாம் உறுதிப்படுத்த வேண்டும்.

–என்றார் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன. (உ)

## தேர்தல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் மகனும், அம்பாந்தோட்டை மாவட்டத்தைச் சேர்ந்த கூட்டு எதிரணி எம்.பியுமான நாமல் ராஜபக்ஷ.

'காலைக்கதிர்' நாளிதழுக்கு நேற்றுத் தாம் வழங்கிய விசேட செவ்வியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அந்தச் செவ்வியில் அவர் மேலும் கூறியவை வருமாறு:–

இனிமேலும் மைத்திரி – ரணில் கூட்டரசு தொடரமுடியாது என்ற உறுதிப்பாட்டை இந்த உள்ளூராட்சித் தேர்தலில் மக்கள் தெளிவாகத் தெரிவிப்பர். அதனால் தேர்தல் முடிவுகளின் பின்னர் ஆட்சி மாற்றம் ஏற்படும் வரை அரசியல் கொந்தளிப்பான நிலைமை நீடிக்கும்.

எனது தந்தையின் முந்திய அரசுதான் இந்த நாட்டில் யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வந்து அமைதியை ஏற்படுத்தியது.

அதன் மூலம் இந்த நாட்டின் தமிழ் மக்களுக்கும் யுத்த நெருக்கடியிலிருந்து விடுதலையைப் பெற்றுக் கொடுக்க முடிந்தது.

தமிழ் மக்களைப் பொறுத்தவரை அவர்களின் பண்பாடுகள், கலாசாரங்கள், விழுமியங்கள், தனித்துவங்கள் பேணப்பட வேண்டும். அதை உறுதிப்படுத்தியவர் – உறுதிப்படுத்தக்கூடியவர் – எனது தந்தையாரே. அவரது ஆட்சியிலேயே அது தமிழருக்குக் கிட்டும்.

தங்கள் தனித்துவத்தைப் பேணும் தீர்வு ஒன்றைத் தமிழர்களுக்கு அவரே வழங்குவார்.

சமஷ்டி என்றுதவறான பாதையில் தமிழர்களை சம்பந்தன் வழி நடத்த முயலுகின்றார் அவரின் இனவாத வழிகாட்டலுக்குப் பின்னால் தமிழர்கள் செல்லக் கூடாது.

சமஷ்டித் தீர்வு என்றால் அதற்கு நாட்டு மக்கள் அனைவரும் இணங்க வேண்டும். இந்தக் குட்டித் தீவை நாம் மேலும் பிளவுபடுத்த முடியாது. அதற்கு தென்னிலங்கையில் வசிக்கும் தமிழரும் சிங்களவர்களும் இணங்கமாட்டார்கள்.

அத்தகைய கோரிக்கை மூலம் சம்பந்தன் தொடர்ந்தும் இனவாதத்தையே பேசுகின்றார். அதற்குத் தமிழ் மக்கள் இனியும் இடமளிக்கக்கூடாது. இடமளிக்கமாட்டார்கள் என நாம் நம்புகின்றோம்.

வடக்கில் துரித அபிவிருத்தித் திட்டங்களை செவ்வனே முன்னெடுத்து, வடக்கின் நிலையை நாமே மேம்படுத்தினோம். அதற்குப் பின்னர் இங்கு அபிவிருத்தியே நடக்கவில்லை.

அபிவிருத்தியோ, நிலையான தீர்வோ எதைத் தமிழ் மக்களுக்கு வழங்குவதாயினும் அதைச் செய்விக்கக்கூடிய அரசியல் ஆளுமை உள்ள ஒரே தலைவர் மஹிந்த ராஜபக்ஷதான். எனவே அவருக்குப் பின்னால் அணி திரளுமாறு தமிழ் மக்களைக் கோருகிறேன். –என்றார் நாமல் ராஜபக்ஷ. (உ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வளலாய் அ.மி.த.க. பாடசாலை மாடிக் கட்டடத்துக்கு அடிக்கல்









அச்சுவேலி – வளலாய் அ.மி.த.க. பாடசாலைக்கான புதிய மாடிக் கட்டடத்துக்கான அடிக்கல் நடும் விழா கடந்த புதன்கிழமை அதிபர் க.இரவீந்திரன் தலைமையில் பாடசாலை வளாகத்தில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். இந்திய துணைத்தூதரக அதிகாரி எஸ்.நிறஞ்சன் கலந்து கொண்டு அடிக்கல்லை நட்டு வைத்தார். சிறப்பு விருந்தினர்களாக பலரும் கலந்து கொண்டனர். மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன. (இ)

## வரிகள் தொடர்பான பயிற்சிப் பட்டறை

யாழ்ப்பாணம்,பெப்.05

ஒப்பந்தகாரர்களுக்கான வரிகள் தொடர்பான பயிற்சிப் பட்டறை செயலமர்வு நாளை செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணி முதல் மாலை 4.30 மணி வரை யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இலங்கைத் தேசிய நிர்மாணிகள் சங்க வட மாகாணக் கிளை உள்நாட்டு இறைவரித் திணைக்கள வட பிராந்திய அலுவலகத்துடன் நடத்தும் இந்தச் செயலமர்வில் அனைத்து நிர்மாணிகளும் கலந்து கொண்டு வருமான வரி, தேச நிர்மாண வரி தொடர்பான தெளிவூட்டல்களைப் பெற்றுக் கொள்ளுமாறும் மேலதிக தகவல்களை 021 221 7567 என்ற தொலைபேசி இலக்கத்தினூடாகப் பெற்றுக் கொள்ள முடியுமென வடமாகாணக் கிளையின் தலைவர் என்.நந்தரூபன் அறிவித்துள்ளார். (இ)

# வீட்டை விட்டு வெளியேறி விடியல் நோக்கிப் பயணிக்க வீறுநடை போட்டு வாருங்கள்!

## அனைத்துலக ஈழத் தமிழர் மக்களவை உள்ளூராட்சித் தேர்தலை ஒட்டி அழைப்பு

'பெப்ரவரி -10 தீர்ப்பு' தமிழர் ஒரு தேசியமாக, சுயநிர்ணய உரிமை தமிழர்களின் பிறப்புரிமை என்பதை அழுத்தியுரைப்பதாக அமையட்டும்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் நடைபெறவிருக்கும் பெப்-10 அன்று தாயகத் தமிழர்கள் வழங்கும் தீர்ப்பானது சுயநிர்ணய உரிமை தமிழர்களின் பிறப்புரிமை என்பதை இடித்துரைப்பதாக அமைய வேண்டும். ஆயுத மௌனிப்பின் பின்னர் சூன்யமாக்கப்பட்டுள்ள தாயக அரசியல்வெளியை மீட்டெடுக்கும் களமாக இத்தேர்தல் களத்தை நாம் பயன்படுத்துவது காலத்தின் கட்டாயமாகும். -என்று அனைத்துலக ஈழத்தமிழர் மக்களவை வேண்டுகோள் விடுத்துள்ளது.

நடைபெறவிருக்கும் உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் தொடர்பில் விடுத்துள்ள அறிக்கைஒன்றிலேயே அனைத்துலக ஈழத்தமிழர் மக்களவை இவ்வாறு தெரிவித்துள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு-

இலங்கைத் தீவின் ஆதி காலம்தொட்டு பூர்வீகக்குடிகளாக வாழ்ந்து வரும் தமிழர்களாகிய எங்களது மரபுவழித் தாயகத்தின் மீதான எமது உரித்தை நிலை நிறுத்தும் உன்னத நோக்கத்திற்காகவே பல்லாயிரக்கணக்கிலான மாவீரர்கள் தமது இன்னுயிரை ஆகுதியாக்கியுள்ளார்கள்.

அவ் உயரிய இலட்சியம் நோக்கிய பயணத்தில்தான் இலட்சக்கணக்கிலான தமிழ் மக்களும்தமது உயிரைத்தியாகம்செய்துள்ளார்கள்.

சுயநிர்ணய உரிமையின் அடிப்ப டையில் விடுதலைபெற்ற தேசத்தில், எதிர்கால சந்ததி சுதந்திரக் காற்றை சுவாசிக்க வேண்டும் என்பதற்காகவே அளப்பரிய தியாக வரலாறு படைக்கப்பட்டுள்ளது.

அப்பேர்ப்பட்ட உயரிய தியாகத்தின் அடித்தளத்தில் பலம்பெற்று அரசியல் சக்தியாக உருவாக்கப்பட வேண்டிய தமிழ்த் தேசியத்தை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முற்றாக நிராகரித்து சிதைக்கும் வேலையில் செயற்படுகின்றது.

இலங்கைத் தீவு சுதந்திரம் பெற்ற காலம் முதல் இன்று வரை நடைபெற்று முடிந்த தேர்தல்வரலாற்றை எடுத்துப் பார்த்தோமேயானால் ஆட்சி-அதிகார இலக்கு நோக்கியதாக தமிழர்களின் வாக்களிப்பு என்றும் இருந்ததில்லை. மாறாக தமிழர்களின் தன்னுரிமை சார்ந்தே வாக்களிப்புகள் நடந்துள்ளன.

ஆயுதமௌனிப்பின் பின்னரான தமிழர்களின் வாக்களிப்புகளும் அவ்வாறேஅமைந்திருந்தன என்பதை யாரும் மறக்கவோ மறுக்கவோ முடியாது. இந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தல் வாக்களிப்பும் முன்னிலும் பார்க்க அதிமுக்கியமான களமாக தமிழர்கள் முன் விரிந்துள்ளன. வாக்குரிமை உள்ள ஒவ்வொரு தமிழனும் கண்டிப்பாக வாக்களித்தே ஆகவேண்டியமை இன்றியமையாதது ஆகும்.

இவ்விடத்தில் தான் அவ்வாறு செலுத்தும் வாக்கை யாருக்குச் செலுத்துவது என்பது குறித்து தீர்க்கமான முடிவெடுக்க வேண்டியுள்ளது. தமிழர் தாயகத்தில் – அதுவும் தமிழர்கள் மத்தியில் விசேட அதிரடிப்படையுடன் நடமாடுபவர்களுக்கா எங்கள் வாக்கு?

இனவழிப்பு இராணுவத்தின் தமிழர்கள் மீதான வன்மத்தை வெளிப்படுத்திய உடற்பரிசோதனையை, தமது தேர்தல் பிரசாரக் கூட்டத்திற்கு வருகைதந்திருந்தவர்களிடத்தே ஆண்-பெண் பேதமின்றி இலங்கைப் பொலிஸைக் கொண்டு கட்டவிழ்த்து விட்டவர்களுக்கா எங்கள் வாக்கு?

உள்ளக சுயநிர்ணய உரிமை அடிப் படையிலான தீர்வுத் திட்டமாக உருவாக்கப்பட்டிருந்த காரணத்திற்காகவே தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே.பிரபாகரன் அவர்கள் ஒஸ்லோ உடன்படிக்கையை நிராகரித்திருந்தார். தேசியத் தலைவர் அன்று நிராகரித்த உள்ளக சுயநிர்ணய உரிமை அடிப்படையில் தீர்வு எட்டப்படும் என்று சம்பந்தன் கூறிவருகின்றார் என்றால் தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகள் பூர்த்தி செய்யப்படுவதைக் காட்டிலும் பெயருக்கு ஒரு தீர்வைப் பெற்று இனப்படு கொலையாளிகளை காப்பாற்றுவதே அவர்களின் நோக்கமாக இருக்கின்றது.

தமிழர்களைப் பொறுத்த வரையில் முள்ளிவாய்க்கால் இனவழிப்பிற்குப் பின்பு உள்ளக சுயநிர்ணய உரிமை யின் அடிப்படையில் தீர்வு என்ற பேச்சிற்கே இடம் இல்லை. ஆகவே சிந்தியுங் கள் மக்களே! இப்படிப்பட்டவர்களுக்கா எங்கள் வாக்கு?

தாயகம்-தேசியம்-தன்னாட்சி உரிமை ஆகிய மூலாதாரக் கோட்பாட்டின் அடிப்படையில் தமிழ் மக்களின் தேசிய அபிலாஷைகளை நிறைவேற்றும் வகையிலான தீர்வை நோக்கி உண்மை-நேர்மை - உறுதியுடன் தாயக அரசியல் வெளியில் செயற்பட்டுவருபவர்களின் சுத்தமான கரங்களைப் பலப்படுத்துவதாக எங்கள் வாக்குகள் மாறவேண்டும்.

நம்பி நம்பி ஏமாந்து போன கசப்பான வரலாறு காற்றோடு போகட்டும். இனியொரு விதி செய்ய பெப்ரவரி-10 அன்று வாக்குச்சாவடி நோக்கி அணிவகுப்போம் வாரீர். நினைத்த மாத்திரத்திலோ, எண்ணிய உடனேயோ மாற்றம் நிகழ்ந்து விடப் போவதில்லை. நாம் விரும்பும் மாற்றத்தை நமக்கான மாற்றத்தை, நாம் தான் ஏற்படுத்தியாக வேண்டும். வாக்களிக்காது இருப்பதும் பெருந்தவறாகி விடும்.

தென்னிலங்கையுடன் ஒப்பிடும்போது வடக்கு – கிழக்கு உள்ளூராட்சி சபைகளுக்குட்பட்ட பிரதேசங்கள் நாற்பது வருடங்கள் பின் தங்கிய நிலையில் இருக்கின்றன. ஆழிப்பேரலை அழிவுகள்ஏற்பட்டபோது எவ்வாறு சுனாமிக் கட்டமைப்பு உருவாக்கப்பட்டு வெளி நாடு களில் இருந்து நிதி பெறப்பட்டு பிரதேசங் கள் அபிவிருத்தி செய்யப்பட்டனவோ அதேபோல யுத்தத்தால் பாதிக்கப்பட்ட வடக்கு – கிழக்குப் பிரதேசங்களை அபிவிருத்தி செய்ய விசேட கட்டமைப்பு ஒன்றை உருவாக்கவேண்டும் என்ற சுத்தமான செயற்திட்டம் யாரிடம் உள்ளதோ அவர்களின் சக்கரங்களைச் சுழற்றுங்கள்.

அன்பான தமிழ்மக்களே! பெப்ரவரி-10 நடைபெறும், தமிழினத்தின் தலைவிதியை நிலைநாட்டும் ஜனநாயகப் போரில் வெற்றி வீரர்களாக வீட்டை விட்டு வெளியேறி, விடியல் நோக்கிய பயணத்தில் வீறுநடை போடுவோம் வாரீர். மறுநாள் பொழுது மாற்றத்திற்கான அறைகூவலோடு விடியும் வகையில், தமிழ் மக்களின் ஏகோபித்த ஆதரவைப் பெற்று தமிழர்களின் நிரந்தரவிடிவிற்காய் அறவழி நின்று போராடி வரும் தமிழ் மக்கள் பேரவையின் கொள்கைவழி நின்று நேர்மையான அரசியல் முன்னெடுப்புக்களினூடாக தூய கரங்கொண்டு தூய நகரம், தூய கிராமங்களை உருவாக்க வேண்டும் என்ற முன்னெடுப்புகளை மேற்கொள்பவர்களுக்கே உங்கள் வாக்குகளை அளியுங்கள் என்று அன்புரிமையோடு கேட்டுக் கொள்கின்றோம்.– என்றுள்ளது. ★

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# காணாமற்போனோரைத் தேடும் போராட்டம் நேற்று எழுபதாவது சுதந்திர தினத்தன்றும்




கிளிநொச்சி கந்தசுவாமி ஆலய முன்றலில் கறுப்பு உடை தரித்து காணாமற் போன உறவுகளின் போராட்டம்...




திருகோணமலை ஆளுநர் அலுவலகத்திற்கு முன்னால் காணாமற்போன உறவுகளின் போராட்டம்...

## 544 கைதிகளுக்கு 'சுதந்திர' தினம்!

நாட்டின் எழுபதாவது சுதந்திர தினத்தை முன்னிட்டு ஜனாதிபதியின் பொதுமன்னிப்பின்கீழ்நாட்டிலுள்ள பல்வேறு சிறைச்சாலைகளிலுள்ள 544 கைதிகள் விடுதலைசெய்யப்பட்டுள்ளனர் எனச் சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

## தவறிவிட்டது

இராசையா ஜனக்குமார் ஆகிய எனது தேசிய அடையாள அட்டை (580202853V) மற்றும் அடையாள அட்டைகளும், லைசன்ஸ், மோட்டார் சைக்கிள் ஆவணங்கள் அடங்கிய கறுத்த நிற பேர்ஸ் தவறிவிட்டது. கண்டு எடுத்தவர்கள் 'அசோகா நகையகம், 111, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்' என்னும் முகவரியுடனோ அல்லது 077 357 3147, 021 222 6290 எனும் தொலைபேசி இலக்கத்துடனோ தொடர்பு கொள்ளுமாறு தயவாக கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள்.


அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் சின்னத்தில்
தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியுடன்

# தமிழ்த் தேசியப் பேரவை

## காரைநகர் பிரதேச சபை

3ஆம் வட்டாரம் - வலந்தலை (J/47)



திருமதி தவமணி பரமானந்தம்
(சமூக சேவையாளர்)

சிந்தித்து வாக்களியுங்கள்...

மாற்றத்திற்கான தெரிவு

அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ்



சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் மாவட்டத் தலைவர், நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதனின் அழைப்பின் பேரில் உள்ளூராட்சித் தேர்தல் - 2018 இற்கான மாபெரும் பொதுக் கூட்டத்திற்கு வருகை தரும் அதிமேதகு ஜனாதிபதி

மைத்திரிபால சிறிசேன அவர்களை வரவேற்கின்றோம்.



இடம்:- யாழ். மாநகரசபை மைதானம்
(யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கு அருகில்)

காலம்:- இன்று (05.02.2018) திங்கட்கிழமை

"கிராமத்தின் எழுச்சி
நம் இனத்தின் எழுச்சி"

அனைவரும் அணிதிரண்டு வாரீர்...!



அங்கஜன் இராமநாதன்
நாடாளுமன்ற உறுப்பினர்,
மாவட்டத் தலைவர்,
சிறீலங்கா சுதந்திரக்கட்சி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள நியூ சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 05.02.2018 இல் அச்சிடப்பட்டு வெளியிடப்பெற்றது.